உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.—திருவள்ளுவர்.

தொகுதி-௪] பராபவ௵ ஆனிமீ [பகுதி-௮.

உள்ளுறை.

செவ்வைச்சூடுவாரும், அகத்தியமும்:—	ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார்,	௱௫௯
ஸ்ரீ பட்டர் வைபவம்:—	ஸ்ரீமத்-வை. மு. சடகோபராமாநுஜாசார்யர்,	௱௭௫
கடைவள்ளலார் காலம்:—	ஸ்ரீமத்- S. கிருஷ்ணசாமி ஐயங்கார், M. A.,	௱௮௮
நன்னூல்:—	ஸ்ரீமத்- து. அ. கோபிநாதராவ், M. A.,	௱௯௬
ஓர் குறிப்பு:—		௱௯௯
அடியார்க்குநல்லார் காலம்:—		௨௱௧
இந்துமதம்:—	ஸ்ரீமத்-மு. சாம்பசிவநாயனர்,	௨௱௪
பெரியபுராண அரும்பதவிளக்கம்:—	ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை,	௨௱௭
தருக்கசூத்திரமுதற்பாடம்:—	ஸ்ரீமத்-எஸ். பால்வண்ணமுதலியார்,	௨௧௫
நல்லொழுக்கம்:—	ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள்,	௨௧௮
பிரதமவித்யாப்பியாசப்பிரகடனம்:—	ஸ்ரீமத்-சே. இராஜகோபாலாசாரியா, B. A.,	௨௨௫
கால்நடையின்உணவுப்பயிர்கள்:—	ஸ்ரீமத்-நாராயணசாமிஐயர்,	௨௨௯
மதுரைத்தமிழ்ச்சங்கத்து ஐந்தாம் வருஷோற்சவக்கூட்டம்:—		

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1906. [தனிப்பிரதி அணா 8.

சங்கத்தினின்று

இனி வெளிவரும் புத்தகங்கள்.

---

1. பன்னூற்றிரட்டு

இரண்டாம்பதிப்பு.

அச்சாகிவிட்டது. இன்னுஞ்சிலநாளில் வெளியேறும்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியாகிய, பாலவனத்தம் ஜமீன்தார் ஸ்ரீமாந் - பாண்டித்துரைத்தேவரவர்களால், தமிழ்நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து வெளியிடப்பட்ட இந்நூல், இப்போது புதியவாய் 500 பாடல்கள் பலநூலினின்று எடுத்துச் சேர்க்கப்பெற்று மதுரைத்தமிழ்ச்சங்கப்பதிப்பாக வெளிவருகின்றது. இப்புத்தகம் டிம்மி அக்டோவாவளவில் 48-பாரங்களுடையது. நல்லகாகிதத்தில் சிறக்க அச்சிடப்பட்டது. இந்நூலின் அருமை பெருமைகளும், தமிழ்மக்களொவ்வொருவர் கையிலும் இப்புத்தகமிருத்தற்குரியதென்பதும் தமிழுலகம் அறிந்த உண்மையாதலால் அவற்றை இங்கே விரிக்க வேண்டியதில்லை. இதன்விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் இப்போதே எழுதிவெளியேறியவுடன் பெற்றுக்கொள்ளக்கடவர்.

2. வில்லிபுத்தூரார் பாரதம்.

இது, தமிழ்நாட்டின் பலபகுதிகளிலிருந்து தருவிக்கப்பட்ட ஏட்டுப்பிரதிகளைவைத்து ஆராய்ந்து வெளியிடப்பட்டது. நூல் முழுதும் எளிதில் யாவரும் உணரத்தக்கபடி எழுதப்பட்ட அரும்பதவுரையுடன் கூடியது. மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்சைவநூற்பரிசோதகரும், திருவாவடுதுறை ஆதீனவித்வானுமாகிய சேற்றூர்- ஸ்ரீமத் சுப்பிரமணியக்கவிராயரவர்களால் ஆராய்ச்சிசெய்யப்பெறுவது. கூடியவிரைவில் வெளிவரும். இதன்விலை ரூபா மூன்றாகும்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪]   பராபவ௵ ஆனி௴   [பகுதி ௮.

செவ்வைச்சூடுவாரும், அநதாரியும்.

இவ்விருவரும் மிகச்சிறந்த செந்தமிழ்க்கவிஞராவர். இவருட் செவ்வைச்சூடுவார்பாடியது 'விண்டுபாகவதபுராண'மாகும். இப்பாகவதமே இக்காலத்து 'ஆரியப்பப்புலவர்' பாடியதென்று வெளியிடப் பட்டுள்ளது. வேம்பத்தூரினின்று மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்குக் கிடைத்த அப்பாகவதவேட்டுப் பிரதிகளிலெல்லாம் அந்நூலைப்பாடியவர் பெயர் முதலியன நன்குணர்தற் கேதுவான பாயிரப் பாட்டொன்று வரையப்பட்டுள்ளது. அது—

கதிக்குமறு பிறப்பொழித்துக் கதிகொடுக்கும் பாகவத கதையை முன்னை
மதிக்குமுயர் வடமொழியாற் புனைந்தருள வியாதமுனி வானே மீள
வுதிக்குநிம்பை மாதவபண் டிதச்செவ்வைச் சூடியென வுலகு போற்ற
விதிக்குமறை யவர்குலத்திற் றோன்றியருந் தமிழாலும் விளம்பி னானே.

என்பது. இச்செய்யுளால் வடமொழியில் வியாசர் பாடிய பாகவதபுராணத்தைத் தமிழாற் பாடியவர் 'நிம்பை' யென்னு மூரிலிருந்த மாதவபண்டிதராகிய செவ்வைச்சூடுவா ரென்னும் புலவரந்தணரென்பது இனிது விளங்குவது. இஃதன்றி, அவ்வேம்பத்தூர்க்கண் சிறந்து விளங்கிய புலவர்நன்மக்கள் பெயர்களையும் அவர் செய்தபிரபந்தப்பெயர்களையும் விளங்கவுரைத்தற்கெழுந்த பழையபாட்டொன்று கர்ணபரம்பரைபற்றி வழங்குவது ஈண்டுக் கேட்கப்படுகின்றது. அது.

திருமருவு பஞ்சலக் கணவேலை டொங்கிச்
செழிக்குமிரு நிதிகொழிக்குந்

தென்னிம்பை நகரமதில் வாழுமந் தணரிற்
 சிறந்தசெவ் வைச்சூடுவார்
சுருதிபுகழ் பாகவத பௌராண மோதினர்
 துலங்கும்வா சிட்ட மதனைச்
சொல்லினு ராளவந் தார்மாத வப்பட்டர்
 சொன்னதிரு விளையாடலும்
... ...
 ... ... புகழ்சவுந்தரிய லகரி
பெருமைமிகு கவிராச பண்டிதர் புகன்றனர்
 பிரதாபமிகு திருநெல் வேலிப்
பெருமானை யன்சொனு னெல்லையன் கோவைப்
 பிரபந்தவகை புகழ்பெருகவே.

என்பது. இதன்கண் 'தென்னிம்பை நகரமதில் வாழுமந்தணரிற் சிறந்த செவ்வைச்சூடுவார் சுருதிபுகழ்பாகவத பௌராணமோதினர்' என்பது மேற்குறித்த பாயிரச் செய்யுளோடு முழுது மொத்துநின்று இவ்வுண்மை விளக்குதல் காண்க. இவ்வேம்பத்தூர்க்கட் சிறந்து விளங்கிய புலவர் பலருள்ளும் இச்செவ்வைச்சூடுவாரை முதற்கண்ணே வைத்து இச்செய்யுளுடையார் ஓதுதலால், இவரே அப்பலருள்ளும் முந்தியோரென்பது ஊகிக்கப்படுகின்றது. இங்ஙனமாகவும் கோமளபுரம் இராசகோபாலபிள்ளையார் மேற்குறித்த பாகவதபுராணத்தை ஆரியப்பப்புலவர் அருளிச்செய்தது எனக் கொண்டு வெளியிட்டனர். அங்ஙனமவர்கொண்டது அந்நூலிறுதியில் அவர் "அபிபுக்தரொருவர் செய்த நேரிசை வெண்பா" எனத் தலைப்பிட்டுப் பதிப்பித்துள்ள,

"கம்பனென்றுங் கும்பனென்றுங் காளியொட்டக் கூத்தனென்றுங்
கும்பமுனி யென்னும்பேர் கொள்வாரோ—வம்புவியின்
மன்னு வலர்புடைசூழ் வாழ்குடந்தை யாரியப்ப
னந்நாளி லேயிருந்தக் கால்"

என்னும் பாடல்பற்றியேயா மென்றயத் துணரலாகும். இவ்வெண்பா,

மண்டலமை வெல்லும் வளர்சிங்க ராயன் விலைகொடுப்பத்
தண்டமிழ் மேக முறத்தூரில் வேதியன் றானும்விற்பக்

கொண்டவன் பின்சென்று மண்டலத் தேபுகழ் கொண்டபிரான்
வண்டமிழ்க் கும்ப னநதாரி யுந்தொண்டை மண்டலமே.

என்னுந் தொண்டைமண்டல சதகச் செய்யுளுக்கு மேற்கோட்பாட்டாகக் காட்டப்பட்டுள்ள—

கம்பனென்றுங் கும்பனென்றுங் * காளியொட்டக் கூத்தனென்றுங்
கும்பமுனி யென்றும்பேர் கொள்வாரோ—வம்புவியின்
மன்னு வலர்பரவும் வாயலநதாரியப்ப
னந்நாளி லேயிருந்தக் கால்.

என்பதன் றிரிபே யென்பது தமிழ்வல்லவர் எளிதினுணர்ப. இப்பாட்டின் மூன்றாமடி இவ்வாறு வேறுபடுதற்குக் காரணம் ஒருவர் வாயல் என்பதைக் குடவாயல் எனவும், அநதாரியப்பன் என்னும் பெயரை அந்த, ஆரியப்பன் என்பனவற்றின் மரூஉவாகிய அந்தாரியப்பன் எனவும் கருதிக்கொண்டு அக்கருத்துக்கிசையப் பிறிதொன்றுபாடி வைத்ததேயா மென்றூகிக்கப்படுகிறது. ஆரியப்பன் என்னும்பெயர் இப்பிறழ்ந்த அடிக்கணன்றி வேறியாண்டும் கேட்கப்படுதலே யில்லை. அன்றியும் இவ்வடியிற் குறிக்கப்பட்ட புலவர்க்கும் பாகவதநூலுக்கும் யாதோரியைபும் இல்லை யென்பதும் மேலுரைத்துப் போந்தவாற்றானும் இச்செய்யுளானும் நன்கறியப்படும். ஆரியப்பன் என்னும் ஓர் பெயருண்மைக் கெடுத்துக்காட்டியதாகக் கருதப்படுமப்பாட்டு அநதாரியப்பன் என்பாரைப்பற்றியதாகத் தேறுமிடத்து அவ்வாரியப்பன் என்னும் பெயர், எழுதினர் பிழைப்பானும் பாடகர் பிழைப்பானும் உண்டாயதோர் பொய்ப்பெயர் எனவும் தெளியலாகும். இப்பொய்ப்பெயர்க்கும் பாகவதநூலுக்கும் எவ்வாறியை புண்டாயிற்றோ அஃதியாமறியேம். இனி அநதாரி என்பதைப்பற்றி ஆராய்வோம்.

அநதாரி.

இப்பெயர் அநதா, அரிஎன்னும் இருமொழி புணர்ந்தாயது. அநதா என்பது வணங்கலர், அடியரல்லார் எனப்பொருள்படும். அரி என்பது பகைவன், பொல்லான் எனப்பொருள்படும். இவற்றால் இப்பெயர்ப்பொருள் வணங்கலர்க்குப் பகைவன், அடியரல்லார்க்குப் பொல்லான் எனக்கொள்ளப்படும். இங்ஙனம் கொள்ளுமிடத்து இப்

* காழியெனவும் பாடமுண்டு.

பெயர் அடியார்க்குநல்லான் என்றாற்போல்வதொன்றென்றுமுய்த்துணரலாகும். மேற்குறித்த "மிண்டரை வெல்லும்" என்னுந் தொண்டைமண்டலசதகச் செய்யுளால் இவர் தொண்டைநாட்டு வாயற்பதியினர் எனவும் உறத்தூரின்கண் ஓர்வேதியர்பாற் றமிழ்க் கல்விபயின்றனர் எனவும் அவராற் சிங்கராயன் என்பானுக்கு விற்கப்பட்டு அவனுடன்சென்று தம்முபாத்தியார் சொல்லியவாறொழுகிப் புகழ்படைத்தன ரெனவும் தமிழறிவாற் கும்பமுனிவரை யொத்தன ரெனவும் அறியலாகும். சோழமண்டலசதகத்து—

வெட்டிற் பொலிய வான்பசுவொன் றெழுதுங் கன்றுப் புடைராயன்
சீட்டுக் கவிதை யநதாரி செப்புந்தமிழின் றிறனறிந்தோ
ரொட்டிற் புகழ்க ணன்குடையா னுஞ் தண்டா யுதன்பெருமை
வாட்டப் படுமோ வவன்காணி வளஞ்சேர் சோழ மண்டலமே.

(மேற்கோள்)

திரம்பெறுகன் றுப்புடைய சிங்கப் பெருமா
னுரம்பெறு தண் டாயுதனுக் கோலை—பெரும்பகலே
யந்திவரு நீயேந்தா லல்லவென்று னுங்காலம்
பிந்திவரு முந்திவரும் பேச்சு.

எனவருதலான் இவர் கன்றுப்பூரிலிருந்த தண்டாயுதன் என்பானொருவனுக்கு 'திரம்பெறு' என்னும் வெண்பாவினை ஓலைத்தூக்காக விடுத்தனர் எனவும், அவனா லினிதளிக்கப்பெற்றனரெனவும் அறியலாகும். இவர்பாடிய ஓலைத்தூக்கின்கண் தண்டாயுதனைக்கன்றுப்புடைய சிங்கப்பெருமான் எனப்பாடுதலால் அவனேதான் மேற்குறித்த சிங்கராயனுவான் என ஊகிக்கப்படுகின்றது. தொண்டைநாட்டுவாயற்பதியிற்பிறந்தவர் கல்விபயிலுதற்குச் சோணாட்டு உறத்தூர்க்குப் போந்தாரெனவும் இவரது மதிநுட்பத்தைக்கண்டு கன்றுப்பூர்த்தண்டாயுதனை சிங்கராயன் விலைகொடுத்து இவரைப்பெற்றனன் எனவும் உய்த்துணரப்படும். இனி இக்கவிஞர் பெருமான்பாடியது சுந்தரபாண்டியம் எனப்பெயரிய திருவாலவாயுடையார் திருவிளையாடலாம்*. இவ்வரிய நூலாற் கல்லூர், மன்றை என்னும் ஊர்களுக்குரியவனும் கச்சிவீரப்பனென்னும் மதுரையரசனுக்கு அமைச்சனாகிய

* இவ்வரிய பெரியநூல் மதுரைத்தமிழ்ச் சங்கத்தார் நன்முயற்சியாற் கிடைத்தது.

செவ்வந்தியின் றுணைவனும் படைத்தலைவனும் ஆகிய திருவிருந்தான் என்னும் உபகாரிவேண்டத் தேவபாடையிலிருந்த சுந்தரபாண்டியன்கதையைத் தமிழால் வாயல் - அநதாரி என்பார் பாடினரென்று நன்கு விளங்குகின்றது. இச்சுந்தரபாண்டியநூல் திருவாலவாயுடையார் திருக்கோயிலில் அறுகாற்பீடத்திற் றிருவிருந்தானவையினிலரங்கேறியது. இவற்றுக்கு மேற்கோள்கள் —

மதுரை நாயகன் சுந்தர பாண்டிய வடநூற்
கதிரு லாமணி யாறுகாற் பீடத்திற் கல்லூ
ரதிப ஞந்திரு விருந்தவ னவையினில் வாயற்
பதியில் வாழந தாரிசெந் தமிழினிற் பகர்ந்தான்.

(சுந்தரபாண்டியம் பாயிரம்)

ஆய சொக்க ரருட்கடல் வெள்ளமார்
நேயன் வெண்குடை நீழலிற் சேடன்போற்
சேய பார்ச்சுமை செந்நுகந் தாங்கினன்
றூய நெஞ்சின னீதி தொடர்ந்துளான்.

அன்னவ னரசர்சூழுங் கச்சிவீ ரப்பனென்னு
மன்னவ னருள்சேர் மன்றைச் செவ்வந்தி துணைவன் வாய்மைத்
தென்னவன் றிருவிருந்தான் சவுந்தரன் றேவ பாடைத்
துன்னிருங் கதைதென் னூலாற் சொல்கெனச் சொல்ல [லுற்றேன்.

(நாட்டு நகரச் சருக்கம். சஅ, சள)

குடக்கொடு குணக்குநிறை யத்திறை கொடுப்ப
வடக்கர சிரிற்கரு னடப்படையை மாறுய்த்
திடத்தொடுசெவ் வந்திதுணை வன்றிருவிருந்தா
னடர்த்தசெய லிற்பொரு தடாதகை யடர்த்தாள்.

(விசயச்சருக்கம்—உ௩)

இதன்கண் கன்னடப்படையைச் செவ்வந்திதுணைவன் அடர்த்த செயலை உவமித்தலால் திருவிருந்தான் படைத்தலைவனாதலுணரப்படும்.

இருவெஞ்சிலை குனியத்தனி மதனீலந்தொட் டெனமேற்
புருவந்துணை விழிபெற்றருண் மயிலேபொன்னி நதிவா

யுருவந்திக ழரங்கக்கரு மணியுத்தரத் தொருபான்
மருவுந்திரு விருந்தான்வரு மன்றைப்பதி யிதுவே.

(கூ நகர்புகு சருக்கம். ௨௦)

இதனால் திருவிருந்தானுடைய மன்றைப்பதி சீரங்கத்துக்கு வடக்கணுள்ள தெனத்தெரிவது.

இனி மதுரைத் திருப்பணிமாலை என்னும் நூற்கண் வீரப்பன் பெயரும் செவ்வந்தி பெயரும் பல்காற் பயில்கின்றன. அதனலிந்நூலாசிரியர் காலமும் உய்த்துணரப்படும்.

விதிக்கு முகுந்தற்கு மெட்டாத சொக்கற்கு மேதினியோர்
துதிக்குங் கொடிக்கம்ப மண்டப மொன்று துலங்கச்செய்தான்
கதிக்கும் பரமன்னர் பொன்னூர் முடிகளைக் காலிலெற்றி
மிதிக்குங் கடாசலத் தான்கச்சி வாழ்கிட்ண வீரப்பனே.

கிருஷ்ண வீரப்ப நாயகர்காலம் சகாத்தம்-௲௪௱௯௰௪.
(திருப்பணிமாலை.)

சுரிகுழ லங்கயற் கண்ணிபொற் கோயிலைச் சூழ்ந்த தெற்குத்
திருமதி லுக்கரு கேயொரு மண்டபஞ் செய்ததிலே
யுரிமையி னலருட் செவ்வந்தி யீசரை யுண்டாக்கினன்
றிருவளர் கல்லூர்ச் சனிப்பெரு மாடந்த செவ்வந்தியே.

இது நிகழ்ந்தது சக. —௲௪௱௮௰.
(திருப்பணிமாலை.)

இப்பாட்டால் திருவிருந்தவன் றந்தை சனிப்பெருமாளென் றுய்த்துணரலாகும்: அந்தாரியாரின் காலமும் இச்சகாத்தமாமென் றோர்ந்து கொள்க. இத்திருப்பணி மாலையில் "தெண்டிரைப் பார்புகழ் கல்லூர் வருசின்னச் செவ்வந்தியே" "மற்புயவேள் சின்னச் செவ்வந்தி நாத வரோதயனே" என்பன போல,பலவிடங்களிற் சின்னச்செவ்வந்தி என ஒருபெயர் பயின்றுள்ளது. அப்பெயரினன் முன்னைச்செவ்வந்திக்குப் பிற்பட்டவன் போலும். ஆழ்வார்திருநகரியினின்று மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்குக் கிடைத்த "பலதிரட்டு" என்னும் ஏடொன்றில்,

செவ்வந்தி தந்த திருவிருந்தான் மன்றைத் திண்கிரிமேற்
பவ்வந் தருந்திரு மாமயி லேபவ ளக்கிரிவாய்த்
* தவ்வொன்று னவ்வொன்று மவ்வா றிரண்டொன்று தானிருக்க
‡ மவ்வஞ்சு தவ்வஞ்சு கவ்வஞ்சு காட்டல் வழக்கிலையே.

என ஓர் செய்யுள் காணப்படுகின்றது. இதன்கண் செவ்வந்தி தந்த திருவிருந்தான் எனவந்தது திருவிருந்தான் செவ்வந்தி துணைவன் என அநதாரியாரால் பலவிடத்து வழங்கியவற்றிற்கு மாறுவது. செவ்வந்தி தம்பி என்பது பிற்காலத்துப் பாடம்பிழைத்தது போலும்.

இத்துணையுங்கூறியவாற்றால் இவ்விருபெரும் புலவர்களின் வரலாறு ஒருவாறுணரப்படும்.

இங்ஙனம்,
ரா. இராகவையங்கார்,
சேதுசம்ஸ்தான வித்துவான்.

ஸ்ரீராமஜயம்.

$ஸ்ரீ பட்டர்வைபவம்.

முகவுரை.

கல்விகேள்விகளிற் சிறந்த கனவான்களே!

நம்மாழ்வார்முதலிய ஆழ்வார்கள் அருளிச்செய்த திருவாய்மொழிமுதலிய திவ்வியப்பிரபந்தங்களின் ஆழ்பொருளில் ஈடுபட்டு அரிய பெரிய அப்பொருளை அனைவருங்கேட்டு ஆனந்தமடைந்து உய்யும்படி பரக்க உபந்யசிப்பதையே பொழுதுபோக்காகக்கொண்டவரும், தம்மாணுக்கரான நஞ்சீயரைக்கொண்டு திருவாய்மொழிக்கு ஓர் உரை செய்வித்தவரும், வடமொழி தென்மொழிக்கடல்களை நிலைகண்டு உணர்ந்தவருமான ஸ்ரீ பட்டருடையவைபவம் எழுதலாயிற்று.

---

* தனம். ‡ முதுகு.

$ இது, கும்பகோணம் கவர்ண்மென்ட் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ: உ. வே: வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள் எழுதியது; மதுரைத்தமிழ்ச்சங்கத்து ஐந்தாவது வருஷோத்ஸவகாலத்திற் சங்கமுன்னிலையிற் படிக்கப்பெற்றது.

கேயே தமதுசகலசம்பத்துக்களையும் பரித்தியாகஞ்செய்து போந்தனராதலால், அதுமுதல்நாள்தோறும் உபாதாநகாலத்திலே சிலதிருமாளிகைகளில் உஞ்சவ்ருத்திசெய்து அதுகொண்டு குடும்பகாரியத்தை நடத்திவரலாயினர். ஒவ்வொருநாளும கிடைக்கிற போஜநோபகரண பதார்த்தத்தில் மறுநாளைக்கென்று சிறிதும் மிச்சப்படுத்தி வைத்துக் கொள்வதில்லை. இப்படி அன்றன்றைக்கு ஜீவநஞ்செய்து வருகையில், ஒருநாள் விடாப்பெருமழை பொழிந்ததனால்,வெளியே

வரையறுத்து, அபிகமநம் உபாதானம் இஜ்யா ஸ்வாத்தியாயம் யோகம் என்ற ஐந்துஒழுக்கங்களையும் முறையே அந்த ஐந்து சிறுபொழுதிலும் அநுஷ்டிக்கும்படி ஸ்ரீபாஞ்சராத்திரம் முதலிய வைஷ்ணவ ஆகமங்கள் கூறும். இரவில் ஆசரிக்க வேண்டுவதும் யோகாநுஷ்டாநமே. இவற்றின் விவரம் வருமாறு :— முதலாறு நாழிகையாகிய பிராதக்காலத்திலே, ஸ்நாநம் ஸந்த்யாவந்தநம் ஜபம் முதலிய காலைக்கடன்களைச் செய்துமுடித்துத் தாம் வழிபடு கடவுளின் சந்நிதிக்குச் சென்று பிரதக்ஷிண நமஸ்காரங்களால் எம்பெருமானை உகப்பிக்கவேண்டும்; இது, அபிகமநகாலநியமம். அதற்கு அடுத்த ஸங்கவகாலத்திலே, பகவதாராதநத்துக்கு வேண்டிய சுத்ததீர்த்தம் சந்தநம் புஷ்பம் தூபதீபத்திரவியங்கள் முதலியவற்றையும், திருமஞ்சநத்துக்கு வேண்டிய பால் தயிர் நெய் தேன் முதலியவற்றையும், எம்பெருமானுக்கு அமுது செய்வித்தற்கு வேண்டிய அரிசி பருப்பு கறியமுது சர்க்கரை நெய் தயிர் பழம்முதலிய போஜநோபகரணங்களையும் சம்பாதித்துத்தொகுத்துச்சித்தஞ்செய்ய வேண்டும்; இது, உபாதாநகாலநியமம். மூன்றாவதான மத்தியான்ன காலத்திலே, மாத்தியான்னிகஸ்நாநமும் மாத்தியான்னிகச் சடங்குஞ்செய்து விதிமுறை வழுவாது பகவானுக்குத் திருவாராதநம்பண்ணிப் பக்குவமான உணவுகளை அமுது செய்வித்து அங்ஙனம் நிவேதித்த உணவுகளை விருந்தினரோடும் பந்துமித்திரர்களோடும் புசிக்க வேண்டும்; இது, இஜ்யா காலநியமம். அதற்கு அடுத்ததான அபரான்னகாலத்திலே, வீடு பேற்றுக்கு உரிய வேதவேதாங்கங்களையும் இதிகாச புராணங்களையும் மற்றும் உரிய நூல்களையும் கற்றலும் கற்பித்தலும்வேண்டும்; இது, ஸ்வாத்தியாய காலநியமம். ஈற்றதான ஸாயங்காலத்திலே, மாலைக்கடனாகிய ஸந்தியா வந்தநத்தைச் செய்யத்தொடங்கிச் சூரியாஸ்தமநமானபின்பு ஜபத்தைப் பூர்த்திசெய்து இராத்திரி போஜநாநந்தரம் ஏகாந்தமாக இருந்து ஐம்பொறிகளையடக்கிப் பிராணாயாமஞ்செய்து மனத்தைப் பரமாத்மாவினிடத்தே லயப்படுத்திப் பகவத்தியாநத்தோடு படுத்து உறங்க வேண்டும்; இது, யோக காலநியமம். இவ்வாறு அநுஷ்டிக்கும் பாகவதர், 'பஞ்சகாலபராயணர்' எனப்படுவர்.

போய் உபாதானஞ் செய்து] வரக்கூடாமற்போயிற்று. அதனால், அவர், அன்றைக்கு வெறுந்தீர்த்தமாத்திரத்தை உட்கொண்டு,

"*கண்ணாநான்முகனைப்படைத்தானே
காரணாகரியாயடியேன்நான்
உண்ணாநாள்பசியாவதொன்றில்லை
ஓவாதேநமோநாரணாவென்று
எண்ணாநாளும்இருக்கெசுச்சாம
வேதநாண்மலர்கொண்டுனபாதம்
நண்ணாநாளவைதத்துறுமாகில்
அன்றெனக்கவைபட்டினிநாளே."

என்றபடி பட்டினிபாராட்டாமல், $ "உண்ணுஞ்சோறுபருகுநீர்தின்னும்வெற்றிலையுமெல்லாங், கண்ணனெம்பெருமான்" என்றபடி திருவாய்மொழி யநுசந்தாநமே தாரகமாகக்கொண்டு வேறு உணவின்றியே இருந்திட்டனர். அன்றையிராத்திரி திருவரங்கம் பெரியகோயிலிலேபெரியபெருமாள் அமுதுசெய்கிறபோது உண்டான திருச்சின்னவொலியைக்கேட்டவளவில், ஆழ்வானுடைய தேவியாரான ஆண்டாள் பெருமானைக்குறித்து 'உம்முடையஅடியவர் பட்டினியிருக்க நீர் குலாவிக்குலாவி அமுதுசெய்தருளுகிறீரோ?' என்றுநினைத்தவளவிலே, முற்றுமுணர்ந்த முழுமுதற் கடவுளாய் எங்கு முளனாகிற ரங்கநாதன் அந்த ஆண்டாள்நினைப்பைத் திருவுள்ளம்பற்றி உடனே தேவஸ்தாநகாரிய நிர்வாஹகரான உத்தமநம்பிக்கு அர்ச்சக முகமாகக்கட்டளையிட்டு அப்பொழுது தாம் அமுதுசெய்த அக்காரவடிசிலை அவர்மூலமாகக் குடைகொடி சாமரம் முதலிய வரிசைகளோடும் நாநாவிதவாத்திய முழக்கத்தோடும் ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பியருள, ஆழ்வானும் பதறியெழுந்திருந்து 'இதுஎன்?' என்றுதிகைத்து எதிர்கொள்ள, உத்தமநம்பியும் 'நம்பெருமாள் தேவரீர்க்கு அக்காரவடிசில் அனுப்பியருளினர்: அங்கீகரிக்கவேணும்' என்றுசொல்லிப் பெருமாளுடைய நியமநத்தைத் தெரிவித்தனர். ஆழ்வான்'மகாப்பிரஸாதம்' என்று அதில் தமக்கும் தமது பத்தி

---

* பெரியாழ்வார் திருமொழி—சக-ஆந்திருப்பதிகம்—௬.

$ திருவாய்மொழி—௬எ—ஆந்திருப்பதிகம்—க.

னிக்குமாக இரண்டு திரளைகளையெடுத்துக்கொண்டு உத்தமநம்பியை அனுப்பிவிட்டு 'பெருமாள் இப்பொழுது இப்படி பிரஸாதம் அனுப்பியருளியது என்னோ?' என்று சிந்தித்து ஆண்டாளை நோக்கி 'நீ ஏதேனும் நினைத்ததுண்டோ?' என்றுவினவ, அந்தப்பதிவிரதாசிரோமணி "அடியேன் வேறொன்றும் நினைக்கவில்லை: பெருமாள் இராத்திரி அமுது செய்தருளியபோது திருச்சின்னம் பணிமாறிய வளவிலே, 'உமது அடியவர் இப்படி பட்டினியாயிருக்க, நீர் குலாவிக் குலாவி அமுது செய்கிறீரோ?' என்று நினைத்தேன்: இவ்வளவே" என்று விண்ணப்பஞ்செய்தனள். அதுகேட்டவுடன் ஆழ்வான் 'நீ இப்படி பெருமாளைக்குறித்து நிட்டூரமாக நினைக்கலாமோ?' என்று அவளுக்கு நல்லறிவுகூறி, பக்தவத்ஸலனை பகவானுடைய மெய்ப்புகழ்ந்த கருணைத்திறத்தை வியந்து, அந்த அடிசிலில் ஒருபகுதியைத் தாம் உட்கொண்டு மற்றதை மனைவிக்குக் கொடுத்தருளினர். முன்பு தசரதசக்கரவர்த்திக்குப் புத்திரகாமேஷ்டியிற் கிடைத்த பாயசத்தின் கூறுகளே ஸ்ரீராமலக்ஷ்மண பரதசத்ருக்னர்களின் திருவவதாரத்துக்குக் காரணமானதுபோல, ஆழ்வானுக்கு இரண்டு குமாரர்கள் அவதரிப்பதற்கு ஏது இத்திரளைகளிரண்டுமே.

அதுவேவியாஜமாக ஆண்டாள் கர்ப்பவதியாகிப் பத்துமாசங் கழிந்தவாறே பராசராம்சமும் வ்யாஸாம்சமுமான இரண்டு குமாரரையீன்றாள். இப்படி ஆழ்வானுக்கு இரட்டைப்பிள்ளைகள் திருவவதரித்ததினம் கலிவருஷம் ௪௨௨௪-ஆவதும், சாலிசகம் ௧0௪௫-ஆவதுமான சுபகிருத்வருஷத்து வைகாசிமாதத்திற் பௌர்ணமிதிதியும் அநுஷ நக்ஷத்ரமுங்கூடிய புதன்கிழமையாகும். நம்மாழ்வாரால் வெளியிடப்பட்ட திருவாய்மொழி முதலிய திவ்வியப் பிரபந்தங்களின் விசேஷார்த்தங்களை உள்ளபடி யுணர்ந்து வெளியிட வல்லராகுபவரிவரென்பதற்கு அறிகுறியாக, இவர் திருவவதாரதினம், அந்த ஆழ்வாருடைய திருவவதாரதினமாகிய வைகாசி விசாகத்துக்கு அடுத்ததாக அமைந்ததென்னலாம்.

ஆசாரிய பரதந்திரரான ஆழ்வான் அக்குழந்தைகட்கு நாமகரணம் முதலியன செய்வித்தற்கு உடையவர் கடவரென்று எண்ணித் தாம் ஒன்றுஞ் செய்யாதிருக்க, நம்பெருமாள் திருவருளால் ஆழ்

வானுக்கு உபயகுமாரர்கள் உதித்ததற்காகப் பெருமகிழ்ச்சிகொண் டிருந்த ஸ்ரீபாஷ்யகாரர் அக்குழந்தைகள் பிறந்தபதினோராநாளிலே சிஷ்யவர்க்கத்துடன் ஆழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளித் தமது பிரதான சிஷ்யர்களில் ஒருவரான எம்பாரைநோக்கி 'குழந்தைகளைஎடுத்துக்கொண்டுவாரும்' என்ன, அவர் அங்ஙனமே பிரபந்நகுலக்கொழுந்தான அக்குழந்தைகளை யெடுத்து வரும்போது திருஷ்டிதோஷாதிகள் தாங்காதபடி ரக்ஷையாக த்வயமென்னும் மந்திரரத்தினத்தை அநுசந்தித்து வாழ்த்திக்கொண்டேவந்து குழந்தைகளைஎம்பெருமானார்க்குக் காட்டினர். அவர் மிக்ககளிப்புடனே ஆனந்தக் கண்ணீர்துளிக்கத் தம் திருக்கண்களாற் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத்தெய்விக சிசுக்களின் தேஜோவிசேஷத்தைக்கண்டு வியப்புக்கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே! இங்ஙனம் ஆகுமாறு என்செய்தீர்?' என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்குக்காப்பாக த்வயாநுசந்தாநஞ்செய்து கொண்டு வந்தேன்' என்றுசெல்ல, உடையவர் அப்படி எம்பார்காப்பிட்டதற்கு உகந்து அவரைப்பார்த்து 'இக்குழந்தைகள் உய்யும்வகையை நாடிச்செய்தற்கு முற்பட்டீராதலால், இவர்கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்' என்று நியமித்து, குழந்தைகளுக்குத் தம்திருக்கையாற் பஞ்சாயுதத்திருவாபரணஞ்சாத்தி, நாமகரணசமயத்திலே, ஸ்ரீபராசர பகவானது திருவவதாரமான மூத்தகுழந்தைக்கு 'பராசர பட்டர்' என்றும், ஸ்ரீவேதவியாசரது திருவவதாரமான இளைய குழந்தைக்கு 'வேதவியாஸபட்டர்' என்றும் திருநாமஞ்சாற்றியருளினர். வியாசபராசரர்கள் பக்கல் நன்றியறிவு காட்டவேண்டுமென்று ஆளவந்தார்க்கு இருந்ததொரு நினைவு இதனாற் பூர்த்திசெய்யப்பட்டது.

இக்கூரத்தாழ்வான் குமாரர்களிற் பராசரபட்டர், பெரியபட்டரென்றும், பட்டரென்றும் வழங்கப்படுவர். பாட்டனார் பெயரைப் பேரனுக்கு இட்டுவழங்கும் முறைப்படி பிதாமகரான ஸ்ரீராமசோமயாஜியாரின் திருநாமத்தைத்தழுவிச் சீராமப்பிள்ளையென்று ஒரு திருநாமம் வேதவியாசபட்டர்க்கு வழங்கும்.

பிறகு ஸ்ரீரங்கநாதன் இளங்குழந்தைப்பருவத்திலேயே பட்டரைத் தமது புத்திரனாக அங்கீகரித்துத் தம்முடைய சந்நிதியிலே

திருமணத்தூணினருகே தொட்டிலிடுவித்து ஸ்ரீரங்கநாச்சியாரும் தாமுமாகச் சீராட்டிவளர்க்க, அங்ஙனம் வளர்கிற அக்குழந்தை தவழ்ந்துசென்று பெருமாள் அமுதுசெய்வதற்குத் திருமுன்பே கொணர்ந்து சமர்ப்பிக்கப்படுகிற இன்னடிசிலைக் கைகளால் அள்ளியளைந்து துழாவ, பெருமாள் அதுகண்டு உகந்தருளி அத்தளிகையை "அமிழ்தினுமாற்றவினிதேதம்மக்கள், சிறுகையளாவியகூழ் *" என்றபடி மிகவும் பிரியமாக அங்கீகரித்தருள்வராம். இப்படி ரங்கநாதன் தம்மை அபிமானித்துப் புத்திரஸ்வீகாரஞ்செய்தருளப்பெற்ற பாக்கியமுடைமையால், பட்டர், 'ரங்கநாதபுத்ரர்' எனப்படுவர்; "வானிட்ட கீர்த்திவளர்கூரத்தாழ்வான்மகிழவந்த, தேனிட்டதார்நம்பெருமாள் குமாரர்........பட்டர்†" என்று இவர் சிஷ்யரான பிள்ளைப்பெருமாளையங்கார் கூறியிருத்தலுங் காண்க.

இவ்வாறு பட்டர் கருவிலே தொடங்கி எம்பெருமானுடைய திருவருளுக்குப்பாத்திரமானதனால், திருத்துழாய் அங்குரிக்கும்போதுதொடங்கியே பரிமளத்தோடு கூடியிருத்தல்போலப் பிறந்ததுமுதலாகவே அனைவருங்கண்டு அதிசயிக்கத்தக்க லோகாதீதமான அற்புத ஞானத்தோடுகூடியிருந்தனர்.

மிக்க சிறுபிராயத்திலே ஒருநாள் ஆழ்வான் திருவாய்மொழியநுசந்திக்கும்போது

§"உறுமோபாவியேனுக்கிவ்வுலகமூன்றுமுடனிறையச்
சிறுமாமேனிநிமிர்த்தவென்செந்தாமரைக்கட்டிருக்குறளன்
நறுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப்புகுதலன்றியவனடியார்
சிறுமாமனிசராயென்னையாண்டாரிங்கேதிரியவே."

என்றபாசுரத்தைக்கேட்டுப் பட்டர் அதில் 'சிறுமாமனிசர்' என்றதைக்குறித்து ஆக்ஷேபங்கொண்டு தந்தையாரைநோக்கி 'ஒன்றுக்கொன்று எதிரான சிறுமை பெருமையென்கிற குணங்களிரண்டும் ஒரு பொருளினிடத்து ஒருங்கே இருக்குமோ? ஆழ்வார் 'சிறுமாமனி

---

* திருக்குறள்—புதல்வரைப்பெறுதல்—௪.

† திருவரங்கக்கலம்பகம்—காப்பு—௪.

§ திருவாய்மொழி—அம்-ஆந் திருப்பதிகம்—௩.

சர்' என்று இரண்டையும் ஒருவரிடத்தே சேர அருளிச்செய்தது பொருந்துவது எங்ஙனே?' என்று வினவினர். அதற்கு ஆழ்வான் ஆலோசித்து 'பிள்ளாய்! நன்கு வினவினை: உனக்கு உபநயநமாகாமையால், இப்பொழுது வேதசாஸ்திரங்களைக்கொண்டு விடை சொல்லலாகாது: ஆயினும், பிரத்யக்ஷத்திற் காட்டுகிறேம்காண்' என்று சொல்லிச் சிலபெரியோர்களைக் காட்டி 'திருமேனி சிறுத்து ஞானம் பெருத்திருக்கிற சிறியாச்சானும் அருளாளப்பெருமாளெம்பெருமானரும்போல்வாரை 'சிறுமாமனிசர்' என்னத்தட்டில்லையே: முதலியாண்டான் எம்பார்முதலிய பெரியோர்கள் உலகத்தாரோடொக்க அந்நபாநாதிகள் கொள்வதோடு எம்பெருமான்பக்கல் ஈடுபடுவதிற்பரமபதத்து நித்யசூரிகளைப்போலுதலால், இப்படிப்பட்டவர்கள் 'சிறுமாமனிசர்' என்னத்தக்கவரன்றே? இங்ஙனமே வடிவு சிறுத்து மகிமைபெருத்தவர்களும், மனிதரென்றுபார்க்குமிடத்துச் சிறுமைதோன்றினும் பகவத்பக்தியை நோக்குமிடத்து நித்யமுக்தர்களினும் மேன்மைபெறுகின்றவர்களுமான மகாபுருஷர்களையே ஆழ்வார் 'சிறுமாமனிசர்' என்று குறித்தருளினர்' என்று அருளிச்செய்ய, அதுகேட்டுப்பட்டர் 'தகும் தகும்!' என்று இசைவுகொண்டனர்.

பட்டர் ஐந்தாவது பிராயத்தில் ஒருநாள் திருவரங்கம் பெரியகோயில் திருவீதியிலே புழுதியளைந்து விளையாடுகிறபோது, அநேக சாஸ்திரங்களில் வல்லவனான ஒரு வித்வான் ஸர்வஜ்ஞபட்டனென்று பட்டப்பெயர்வைத்துக்கொண்டு அங்ஙனமே தன்பெயரைக்குறிப்பிட்டு 'ஸர்வஜ்ஞபட்டன் வந்தான்' என்று தன் பரிஜநங்களைக்கொண்டு விருதுசொல்லிக் காளமூதுவித்துக்கொண்டு அதிக ஆடம்பரத்துடனே சிவிகைமீதுவர, அதுகண்டபட்டர் 'உடையவர், கூரத்தாழ்வான், முதலியாண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானர், எம்பார் முதலான பலபெரியோர்களிருக்கிற இவ்விடத்திலே ஸர்வஜ்ஞபட்டனென்று பெரும்பெயர்சொல்லி விருதூதிப்பல்லக்கேறிவருகிறான்! இவன் ஆரடா!!' என்று எண்ணித் தாம் அவனெதிரிற்சென்று கையிற்புழுதியை அள்ளியெடுத்து அவனைநோக்கி 'நீ ஸர்வஜ்ஞனன்றோ? இது எவ்வளவு? சொல், பார்ப்போம்' என்று வினவினர்.

அவன் அதனைக்குறித்து அதிதீர்க்காலோசனைசெய்தும் அது இத்தனையென்று தெரியாமையால், ஒன்றும் விடைசொல்லமாட்டாதே தியங்கி வெட்கத்தால் தலைகவிழ்ந்து மௌனத்தோடு நின்றிட்டான். பட்டர் அவனைப்பார்த்து 'இது ஒரு கைப்பிடிமண்' என்றுசொல்லி நீ கொண்ட பெயரைப் பொருளுள்ளதாக நிலைநிறுத்தி 'ஸர்வஜ்ஞன்' என்ற விருதை மெய்ப்பித்துக்கொண்டுபோகமாட்டாதே அஜ்ஞனாய் விட்டாயே! இனி உன்னுடைய விருதும் மற்றைச்சப்பிரமங்களும் எதற்காக?' என்றுசொல்லி ஏசி 'காளம் முதலியவற்றைப்பறியுங்கள்' என்று தம்முடன் விளையாடுஞ்சிறுவர்களுக்குக் கூறினார். அந்த மழலைச்சொல்லை அப்பண்டிதன் கேட்டு ஆச்சரியப்பட்டு 'இவர் ஆருடைய குமாரரோ?' என்று அங்குள்ளாரைவினவி 'கூரத்தாழ்வான் குமாரர்' என்று அவர்கள் சொல்ல உணர்ந்து 'பறப்பதன்குட்டி தவழுமோ?' என்றும், 'விளையுர்பயிர் முளையிலேதெரியுமன்றோ?' என்றும் நினைத்துப் பட்டரைத் தன் தண்டிகையிலேற்றி வைத்துக்கொண்டு கூரத்தாழ்வானுடைய திருமாளிகையின் வாயிலிலே சென்றவளவிலே, பிள்ளையுறங்காவில்லிதாசருடைய பாரியையான பொன்னாச்சியார் கண்டு பட்டர் செய்த சிறுச் சேவகத்தைக் கேட்டு அவரைச்சிவிகையினின்று எடுத்துக்கொண்டு திருஷ்டிதோஷபரிகாரத்தின்பொருட்டு மந்திரரத்தினத்தால் ரக்ஷையிட்டு ஆழ்வான் திருமாளிகையினுள்ளே கொண்டுபுக்கு 'கண்ணெச்சில் தாங்கும்படி இவரைத் திருவீதியிலே போகவிடலாமோ?' என்று அன்போடுசொல்லி அக்குமாரரைத் திருத்தாயாரான ஆண்டாளுடைய கையிலே கொடுத்து 'இவர் இவ்வுலகத்தில் நெடுநாள் தங்குமவரல்லர்போலும்' என்று எண்ணி இரங்கினாள். "பலகற்றோம் யாமென்று தற்புகழவேண்டா, அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும், சிலகற்றார் கண்ணுமுளவாம் பலகற்றார்க்கு, அச்சாணி யன்னதோர் சொல்*" என்னும் நீதிக்கு இவ்வரலாறு தக்கதொரு திருஷ்டாந்தமாம்.

மற்றொரு சமயத்திலே பாஷ்யகாரர் பாலப்பிராயத்தராயிருக்கிற பட்டர் திருக்கையிலே ஆளவந்தார் ஸ்தோத்திரத்தைக்கொடுத்து

* அறநெறிச்சாரம்.

ஒரு சுலோகத்தையெடுத்து வாசிக்கச்சொல்ல, அவ்வாறே பட்டர் ஒரு சுலோகத்தை அழகிதாக வாசித்து அதன் பொருளையும் விவரித்துச்சொல்ல, அந்த அர்த்த விசேஷங்களைக்கேட்ட உடையவர் மிகவும் உகந்து அடியவரனைவரையும் நோக்கி 'நீங்களெல்லாரும் நம்மிடத்திலிருப்பதுபோலவே இவரிடத்திலும் இருக்கக்கடவீர்கள்' என்று நியமித்தருளினர்.

அன்றியும், பட்டர் ஸ்தோத்திரபாடம் வாசிக்கிற விதத்தை எம்பார் கேட்டு அதிசயித்து 'இக்குழந்தை நம் தரிசனத்திற்குக் கீர்த்திகொண்டுவரும்' என்று அருளிச்செய்தார்.

பிறகு ஆழ்வான்குமாரர்களுக்குச் சாஸ்திரோக்தமாக ஏழாவது பிராயத்திலே உபநயநஞ்செய்வித்து வேதமோதுவித்தற்பொருட்டு அத்தியயனஞ்சொல்லுமிடத்திற்கு இவர்களைக்கொண்டுபோய்விட, அங்கு உபாத்தியாயர் கிரமப்படி ஓதுவிக்கலானர். அவ்வாசிரியர் அற்றைநாள் சந்தைசொல்ல, பட்டர் ஓதிவந்து, மறுநாள் ஓதுகைக்குச்சென்றபோது, ஆசிரியர் முந்தினநாளிற்சொன்னதையே சந்தையிடப்புக்கவளவிலே, பட்டர் அவ்விடத்தினின்று எழுந்து போந்து வெளியே விளையாடிக்கொண்டிருக்கலானர். எல்லாரும் ஓதாநிற்க இவர்மாத்திரம் புறப்பட்டுவந்திட்டதை யுணர்ந்த தந்தை தாயரான ஆழ்வானும் ஆண்டாளும் அருகில்வந்து 'பிள்ளாய்! எல்லாரும் ஓதாநிற்க, நீ மாத்திரம் ஏன் ஓதுவதைவிட்டு விளையாடுகிருய்?' என்ன, அதற்குப் பட்டர் 'அவர்கள் நேற்று ஓதினதையே இன்றைக்கும் ஓதுகிறார்கள்: ஆகையால், விட்டுவந்தேன்' என்றுமறுமொழிகூறியவளவிலே, ஆழ்வான் 'ஆகில் நேற்றுச் சந்தையிட்ட பாகத்தைச் சொல்லு, பார்ப்போம்' என்ன, பட்டரும் முந்தினநாளிற் சந்தைசொன்னபடியே வர்ண ஸ்வர உச்சாரணமுறைமை அனுவளவுந் தவருமற்சொல்லிக்காட்ட, இருமுதுகுரவரும் அதுகேட்டு அதிசயமும் அச்சமுங்கொண்டு 'இனி இவரை வெளியே ஓதவிடவொண்ணுது' என்று எண்ணினர்கள். இங்ஙனம் பட்டர் ஏகசந்தைக்ராஹியாவர்.

பிறகு ஆழ்வான்தாமே பட்டர்க்கு வேதசாத்திரங்களைக்கற்பிக்க எம்பார் பஞ்சஸம்ஸ்காரபூர்வகமாக மந்திரங்களையும் அவற்றி

ன் அர்த்தங்களையும் உபதேசித்துத் திருவாய்மொழிமுதலிய திவ்விய ப்பிரபந்தங்களையும் அவற்றின் வியாக்கியானங்களையுஞ்சொல்லியருள, பின்பு பட்டர் ஆழ்வானிடமிருந்து ஸ்ரீபாஷ்யத்தை உபதேசக்கிரமமாகப்பெற்று உபயவேதாந்தப் பிரவர்த்தகராய் விளங்கினர்.

ஒருநாள் பட்டர் நம்பெருமாளைச்சேவிக்கச்சென்றபோது, பெருமாள் வளையவிட்டதிருத்திரையினகத்தே பிராட்டியுந்தாமுமாய்ஏகாந்தமாக எழுந்தருளியிருக்க, பட்டர் உரிமைபாராட்டித் திரையினுள்ளே நுழைந்து திருவடிதொழப்புக, பெருமாள்முனிந்து இவர்வெளியே புறப்பட்டுப்போய்விடும்படி திருவுள்ளமாக, அக்குறிப்பை நோக்கியவுடன் இவர் வெளியேபுறப்பட்டுவிட்டார். உடனே பெருமாள் இரங்கி அர்ச்சகர்மீது ஆவேசித்து 'நம்பட்டருக்கு அருளப்பாடு' என்றுசொல்லி அவரை அழைக்க அதுகேட்டலும் அச்செல்வக்குமாரர் உள்ளேபுக்குத்தண்டனிட்டுநின்றவளவிலே, பெருமாள் அவரைநோக்கி 'நாம்புறப்படவிட்டபோது என்னநினைத்திருந்தாய்?' என்ன, பட்டர் 'பெருமாளும் நாச்சியாருமாகநினைத்திருந்தேன்' என்று விண்ணப்பஞ்செய்ய,'முன்புநம்மை நினைத்திருந்தபடி எங்ஙனே' என்றுகேட்டருள, பட்டர் 'ஆழ்வானும் ஆண்டாளுமாகநினைத்திருந்தேன்' என்று விஞ்ஞாபிக்க, பெருமாள் 'நம்ஆணை! நம்மைமுன்போலவே நினைத்திரு' என்று திருவுள்ளமாயருளினர். பட்டர் அவ்வாறே பெருமாளையும் பிராட்டியையும் தந்தைதாயாகவே எப்பொழுதும் எண்ணியிருந்தனர்.

பட்டரும் சீராமப்பிள்ளையும் ஸாங்கோபாங்கமாக வேதவேதாங்கங்களையெல்லாம் அப்பியசித்துச் சகலவித்தியாபாரங்கதர்களாய் விவாகத்துக்குஉரிய பருவத்தையடைந்தவளவிலே, ஆண்டாள் ஆழ்வானைப்பார்த்து 'இவர்கட்குக் கலியாணஞ் செய்விக்கவேண்டாவோ' என்று விண்ணப்பஞ்செய்தாள். அதுகேட்டஆழ்வான், யான் எனது என்னுஞ்செருக்குச்சிறிதுமின்றி ஆசாரியபரதந்திரராதலால், உடையவர்திருமுன்பேசென்று 'இவர்களுக்கு மணஞ்செய்விக்கவேண்டுமே' என்று விஞ்ஞாபிக்க, உடையவரும் தமது ஆசாரியராகியபெரியநம்பியின் உறவினரான ஸ்ரீவைஷ்ணவரிடத்து இவர்களுக்குப்பெண்கொண்டால் உசிதமாயிருக்குமென்று தெரிவிக்க, அக்கருத்தை மேற்கொண்

டு ஆழ்வான் அவர்களிடத்திலேசென்று பெண்கேட்க, அவர்கள்கொடுப்பதாகமுதலிற்சொல்லிப் பின்பு நூதனசம்பந்தமென்று இசையாதிருந்தார்கள். இப்படி சிலநாள் கழிந்தவளவிலே, பிள்ளைகள் விவாகத்தைக்குறித்து ஆண்டாள் ஆழ்வானை மறுபடியுந்தூண்ட, அவர் 'ஈச்வரகுடும்பத்துக்கு என்னை இருந்து கரையச்சொல்லுகிறாயோ' என்று சொல்லி அற்றைநாள் பெரியபெருமாளைத்திருவடிதொழுது மீள்கிறபொழுது, 'இப்புதல்வர்க்கு மணம்புரிவிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களே' என்றுபகவத்ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்தனர். பெருமாள் அதனைஏற்றுக்கொண்டு 'அதறகுநீரோகடவீர்? நாமேதகுதியாகச்செய்விக்கிறோம்' என்று திருவுள்ளமாயருளி, பெண்கொடுக்கும்படி பெரியநம்பிசம்பந்திகளுக்குச் சொப்பனங்காட்டியருளினர். அங்ஙனம் பெருமாள் தாமே கனவிலெழுந்தருளி ஆழ்வான் குமாரர்களுக்குக்கன்னிகைகளைக்கொடுக்கும்படி கட்டளையிட்டதிறத்தைக்குறித்து அவர்கள்மிகவியந்து அதற்குச்சம்மதித்து மற்றைநாள்தாமாகவே ஆழ்வான்பக்கல் வலியவந்து பெண்கொடுக்கிறோமென்றுசொல்லித் தங்கள்குமாரிகளைப் பட்டர்க்குஞ் சீராமப்பிள்ளைக்கும் உதகதாராபூர்வமாகக் கன்னிகாதானஞ்செய்து வெகுசிறப்பாக விவாகஞ்செய்வித்தார்கள்.

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் ஸ்ரீபாஷ்யகாரர் பட்டருடைய வேதாந்தோபந்யாஸவைபவத்தைக்கேட்டு உகந்து அவர்க்கு 'வேதாந்தாசார்யர்' என்றசிறப்புப்பெயரைக்கொடுத்தருளினர். அன்றுமுதல் பட்டர்க்கு வேதாந்தாசாரியரென்று ஒருதிருநாமமாயிற்று. இத்திருப்பெயரே பின்பு வடமொழியிற் கவிபாடுந்திறத்திலும் உபய வேதாந்தப்பிரவசநத்திலும் இந்தப்பட்டர்போன்றபெருமையையுடைய தூப்புற்பிள்ளைக்கு ரங்கநாதனது நியமனப்படி வழங்கலாகும்.

(இன்னும் வரும்)

ஸ்ரீ:

கடைவள்ளலார் காலம்.

(௱௫௪-ம்பக்கத்தொடர்ச்சி.)

பங்களூர்ஸெண்ட்ரல் காலேஜ் போதகாசிரியர்

ஸ்ரீ: எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் M. A. எழுதியது.

சிலப்பதிகாரமணிமேகலைகளானவை யிரண்டுங்கூடி ஒன்றேயாய் நிகழவேண்டி, இளங்கோவடிகளு மவர்நண்பரான ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனாரும் இயற்றியனவென்பது அனைவருமறிந்தவிஷயமே. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருடார்த்தத்தையும் புகட்டவேண்டியதாகிய இப்பெருங்காப்பியங்களில் முன்னது, அறம்பொருளின்பமே புகட்டிநிற்க, பின்னது மணிமேகலை துறவையே சொல்வதாய் முன்னதனுடனொருங்குபட்டு நான்காம் பொருள்பயந்து, ஓரேகாப்பியமாய் நடைபெறவியற்றப்பட்டதென்னுஞ்செய்தி, அடியார்க்குநல்லாரால் சிலப்பதிகாரப்பதிக வுரையில் மேற்கோள்களோடும் விளக்கக்கூறப்பட்டுள்ளது. இவ்விருகாப்பியங்களும், நம்பற்கரிய தெய்வச்செயல்கள் பலவற்றைக்கொண்டவைகளாயினும், அக்காலத்தில் வீழ்ந்த அநேகவிஷயங்களைநிகழ்ந்தவாறே புகட்டும்; எனின், போக்குகாப்பியத்தன்மைத்தாயினும், பொருள் சரித்திரத்திற்கிணங்கியதேயாம்.

“முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரிய
தடிகள் நீரே யருளுக”—வென்றதற்கேற்ப, சிலப்பதிகாரம் மூவேந்தரையும்; மணிமேகலை, அவர்களுள் பாண்டியனைநீக்கிக் காஞ்சியரசனுடன் மற்றவரையுஞ்சிறப்பித்துக்கூறுநின்றது. இக்காப்பியங்களில்வழங்குஞ்சோழவரசர்களில், சோழன் கரிகாற்பெருவளத்தானும் நெடுமுடி, வெண்வேல், மாவண் என்னும் அடைகளடுக்கப்பெற்ற கிள்ளியுமேயாவர்.

இவ்விருவரைப்பற்றித் தென்னிந்தியாசிலாசாஸன புஸ்தகங்களில் டாக்டர் ஹூல்ஷ் (Doctor Hultzsch)என்பவர் பின்வருமாறு வரைந்துள்ளார்;-பூர்விகச்சோழமன்னர்கள் குலமுறையையும் அவர்

செய்திகளையுங்கூறும் நான்குபத்திரங்களும் வெவ்வேறு முறையாகக்கூறுவதைக்காணலாம். இந்நால்வரில் ஒருவனை கோக்கிள்ளியென்பானை மனிதத்தன்மையனாகச்சொல்லவியலாது; ஏனெனில், நாகபட்டினத்துப்பிலஞ்சென்று நாககன்னிகையொருத்தியைமணந்தானென்பதாலும், விக்கிரமசோழனுலாவில், சிபி, கவேரனென்னும் கதைத்தன்மையே பொருந்திய, இருசோழமன்னர்க்கு முன்வைக்கப் பெற்றுள்ளதாலும், கரிகாலன் கோச்செங்கணானைப்பற்றி, அப்பண்டிதரே அடியில்வருமாறு புகன்றுள்ளார்:—ஒன்றற்கொன்றுமுரண்படுமிக்கூற்றுக்களையொப்பிட்டு நோக்குமிடத்து, மேற்கூறியமுதல்மூன்றுபத்திரங்கள் வரையப்பட்டகாலத்து, இவர்கள் எவ்வரிசையில் வதிந்தனரென்பதற்குத்தொன்றுதொட்டுவந்தசான்று யாதுமின்றுபோலும்! ஒருகால் அவ்விருவருடைய பெயரும், களவழி, பட்டினப்பாலைபோன்ற முற்காலத்திய சிறப்புக்களிகளாலேயே, அவர்கட்குத்தெரிந்திருத்தல்வேண்டும். அவர்களை, நமக்குக்கிடைத்திருக்கும் சாஸனங்களால் நன்குவிளங்கும் சோழபரம்பரையாரின் வம்சத்தில், முன்வந்தோரென்பது தவறும். சோழதேசத்தையாண்டுநசித்துப்போன அரசவம்சத்தினராய், தங்கள்சிறந்தசெயல்களினாலோ அல்லதுதற்செயலாலோ தமிழ்ப்பாவலரால் தங்கவிகளினிலுவப்பெற்று, அவ்வமிசத்தாரைக் குறிப்பிக்குஞ்சிலராவரென்பதுமொக்கும். காவிரிநதிக்குக் கரைகட்டியவன்கரிகாலனென்று லெயிடன்சாஸனங்கூறும், கலிங்கத்துப்பரணியிலும், விக்கிரமசோழனுலாவிலுமிச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது. கலிங்கத்துப்பரணி, பாலைபாடியோர்க்குப் பதினாறுலக்கம்பொன் பரிசளித்த கரிகாலனென்றுங்கூறும். முடத்தாமக்கண்ணியார் பொருநராற்றுப்படையில் இவன் இளஞ்சேட் சென்னியின்புதல்வனென்பர். அப்பாடலில் அவன்பெயர் கரிகால் எனத்தோன்றும். இதற்குக்கருமையான காலென்றும் கரியின்காலென்றும் இருவகைப்பொருளுண்டு: ஆயின்வடமொழிப்பெயராய்க்கொள்ளின், யானைகட்குக் கூற்றெனப்பொருள்படும். இவன்சேரபாண்டியர்களைவெண்ணியிற்புறங்கண்டதாகப்புகலும். சிலப்பதிகாரப்படி, இவன் முக்கியநகரம் காவிரிப்பூம்பட்டினம். தென்இந்தியசரித்திரவாராய்ச்சிவிஷயமாகத்தாம்விடுத்த இன்பம்புகட்டு மாராய்ச்சியொன்றில் கனம்பொருந்திய பி-குமாரஸ்வாமி என்போர் கரிகாலன் கி-பி- முதல்நூற்றாண்டினனென்பர்.

இக்கொள்கைக்காதாரம் சிலப்பதிகாரஉரைகளில் கரிகாலன் பெண்வயிறு வாய்த்தபேரனை செங்குட்டுவனுக்கு, இலங்கைக்கயவாகு சமகாலத்தவன் என்பதே. அவர் இக்கயவாகு மஹாவம்சத்திற்கண்டமுதற்கயவாகுவேயென்றுதேர்ந்து, இவன் அரசாட்சிக்காலம், கி-பி 135 முதல் என்றுமுடிப்பர். இவ்விருகயவாகுக்களின் ஒற்றுமையைப்பெயரினாலேமாத்திரமின்றி நூலின் உட்கிடைகொண்ட வேறுகாரணங்களாலே சாதிக்குமளவும், இலங்கையின்புராதனசரித்திரக் காலவரைநன்றாய்ப்பரிசோதிக்கப்படுங்காறும், மேற்சொன்னகுமாரசுவாமியவர்களுடைய புத்திநுட்பத்தை வியந்தவனாயினும், அவர்கொள்கையை அங்கீகரிக்க ஒருப்படேன்."

சிலப்பதிகாரம் புகார்காண்டத்தை ஆழ்ந்து ஆராயுமிடத்து, கோவலன்கதை முதலில் புகாரையாண்டவன் சோழன்- கரிகாற்பெருவளத்தானென்பது நன்கு புலப்படும். இத்தகைய பெருங்காப்பியத்துக் கதையெழுதுவதற்கு வேண்டிய பலவித பாண்டித்தியத்தினாலுஞ்சிறப்புற்று, ஆன்றோர்வழங்குங் கர்ணபரம்பரையைத் தவறின்றிப்புகட்டும் பெரிய உரையாசிரியராகிய, அடியார்க்குநல்லார், அக்காலத்தாண்டவரசர்க்குக் குறிப்பனவற்றையெல்லாம் கரிகாலன் மேலேற்றிக் கூறுவதே, அக்காலத்துப் புகாரிலாண்டவன் கரிகாலனென்பதற்குத் தக்க சான்றாகும். அன்றியும், பெயரினாலேயாவது, அல்லது, இமயத்துப்புலிபொறித்த செயலினாலேயாவது, வெளிப்படையாய், அவனையே குறிக்குங் கூற்றுச்சிலவுமுள.—மங்கலவாழ்த்துக்கடையில் "இப்பா விமயத் திருத்திய வாள்வேங்கை, யுப்பாலைப் பொற்கோட் டிமையத்தா—வெப்பாலுஞ், செருமிகு சினவேற் செம்பியன், னொருதனி யாழி யுருட்டுவோனெனவே." என்பது, புலிபொறித்ததை நன்கு புகட்டுவதன்றி, அக்காலத்தரச னிவனாக வேண்டுமென்பதையுங் குறிக்கும். இரண்டாவது, மனையறம்படுத்த காதையில் 'கரிகாற்பெரும்பெயர்த்திருமாவளவனைப், பாலைபாடிய பரிசிலன்றெடுத்த' வென்பது ஒரு பிரதியிலிருந்ததென்றதில், கரிகாலன்பெயர் வருவதன்றிக் கடலாடுகாதையில், கரிகாலனாண்டிருந்த செய்தி "விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன், றண்பதங்கொள்ளுந் தலைநாட் போல" என்றுமெடுத்து வழங்கியுள்ளதால் விசத

மாகும். ஐந்தாங்காதை-80—90-ம் வரிகளில், இக்கரிகாலன் செய்திகளமைந்துள்ளன. ஆய்ச்சியர் குரவையில் புகழப்பட்ட மூவேந்தரில் "பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான், மன்னன்வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்" என்றது, கரிகாலனையே குறிப்பிக்கிறதென்பது தெற்றெனத்தெரியும். சிலப்பதிகாரம் வஞ்சினமாலையில்—

"மாதரு ரைசான்ற, மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
றன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவி ரோளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட வவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்" என்பதனால், சோழன்

கரிகாலன்மகள் வஞ்சிக்கோனை மணந்தவளென்பது தெளிவாம். ஆயினும் வஞ்சிக்கோன் என்றது, வஞ்சியரசனையன்றென்றும், சேரகுலத்தனான ஆட்டனத்தி என்பானையென்பது, செந்தமிழ்ப் பத்திரிகையைப், பேருக்கத்தோடுந் தெளிந்தஆராய்ச்சியோடும் நடத்திவந்த என் நண்பர், ஸ்ரீமத் - ரா. இராகவையங்காரவர்கள் கொள்கை. செந்தமிழ்த் தொகுதி-2. பகுதி- 4 பக்கம்- 107—111-ல் 'நல்லிசைப்புலமை மெல்லியலார்' என்னுந் தலைக்குறிப்புள்ள ஆராய்ச்சியில் இக்கொள்கைக்கியன்ற பல சான்றுகளைப்பண்புடன் புகட்டியிருக்கின்றாராயினும், மன்னன் கரிகால்வளவன் மகளே ஆதிமந்தியென்பது தெளிவாகவில்லை. இஃது எற்றாயினும் கரிகாலனே இக்காலத்துப்புகாரில் ஆண்டோனென்பதற்கு மேற்கூறிய சாதனங்களே போதியனவாம். இயற்கைச்செய்திகளுக்குத் தெய்வீகத்தன்மையைக் கற்பித்துப்புகட்டுதல்,பௌத்த ஜைன ஆசிரியர்களுக்கியல்பென்பது சரித்திர ஆராய்ச்சியார்க்குப் புதுமையாய்த்தோன்றாது. இவர்கள் முக்கியகொள்கையான கர்மம் என்பது இதற்குமுதற்காரணமாகும். இதைக் கருதின், இக்கதைகளில் அசம்பாவிதமாய்த் தோன்றும் அனேக செய்திகள் தெளிவாய் விளங்கும்.

கரிகாலன் விஷயத்தை விளக்கப்புகின், அவன், "வென் வேலுறுவப் பஃறேரிளையோன் சிறுவன்" என்றும், நாங்கூர்வேளுடன் சம்பந்தம் புரிந்தோனென்றுஞ்சொல்லும். கரிகாலன் இளமையில்கா

னெருப்புற்றதால், இப்பெய ரிவனுக்காயதென்பது கீழ்வரும் பழமொழியால் விளங்கும்.

"முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகா
லிச்சக் கரமே யளந்ததாற்—செய்ச்செ
யரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று."

தவிர, இளமைப்பருவத்தா னென்றிகழ்ந்த நரைமுதுமக்களுவக்கும் வகை நரைமுடித்துவந்து முறைவேண்டிநாடிய இருதிறத்தாருஞ்சொல்லியசொற்கொண்டே ஆராய்ந்து அறிந்து முறைசெய்தசெய்தி 'இளமை நாணி முதுமை யெய்தி, யுரைமுடிவு காட்டிய வுரவோன்' என்னும் மணிமேகலையடிகளாலும், "உரைமுடிவு காணா னிளமையோ னென்ற, நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச், சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை, கல்லாமற் பாகம் படும்." என்னும் பழமொழியாலும் நன்குபுலப்படும். பத்துப்பாட்டுப் பகுதிகளாகிய பொருநராற்றுப்படையிலும், பட்டினப்பாலையிலும், முடத்தாமக்கண்ணியாராலும், உருத்திரங்கண்ணனாராலும் முறையே சிறப்பிக்கப்பட்டவன் இவனேயாவன். அன்றியுஞ் சேரன்பெருஞ்சேரலாதனையும், அக்காலத்துப் பாண்டியனையும், 'இருபெருவேந்தருமொருகளத்தவிய வெண்ணிற்றுக்கி" னெனவும், இப்புறங்கொடுத்தலை நாணி அச்சேரன் வடக்கேசென்றிருந்தான் எனவுங் கூறுவர் கழாத்தலையார். இச்செய்தியே வெண்ணிக்குயத்தியாரால்—

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் னாற்ற றோன்ற
வென்றோய் நின்னினு நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே."

என்று சிறப்பிக்கப்பெற்றுள்ளது. பட்டினப்பாலைபாடிய உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில் நாகபட்டினத்துச் சோ

மூன்கிள்ளிக்கு நாககன்னிகை பயந்த தொண்டைமான் இளந்திரைய னைச் சிறப்பித்தனர். இதையே டாக்டர் - ஹுல்ஷ் என்பவர் மேற்சொன்னவாறு வற்புறுத்தினர்போலும்.

நெடுமுடிக்கிள்ளி யென்னும் இக்கிள்ளியே கரிகாலனுக்குப் பின்வந்த அதிர்ஷ்டவீனனான அரசனாவான். இவன் காலத்திற்றான் புகார்கடல் கொண்டதுமன்றி சோழமேன்மையும், மிகவும் கீழ்ப் பாடடைந்தது. தென்னிந்திய அரசர்களில் அதிர்ஷ்டவசமாய்க்கரி காலனென்று பெயர்படைத்தவர் சிலரேயாகக், கிள்ளி யென்போர்பலரேயாய் (சிலப். 9. புறத்தில் 12) அவர்களுக்குள் இவனின்னானென்று இணக்கிக்குறிப்பது வெகுகடினமானதாயுமிருக்கிறது. ஆயினும் தனிமைப்படுத்துஞ் சிலவிலக்கணங்கள் இவனை இன்னானென்று விளக்கிக்காட்டுங் கருவிகளாம். உறையூருக்கருகிலிருந்த நேரிவாயிலென்னு மூர்ப்புறத்துச் செங்குட்டுவனென்பான் தன் பேராற்றலால்,

> "மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
> வொத்த பண்பின ரொன்பது மன்ன
> ரிளவரசு பொறாஅ ரேவல் கேளார்
> வளநா டழிக்கும் மாண்பின ராதலி
> னொன்பது குடையு மொருபக லொழித்துக்"

கிள்ளியைத் தன்னரசில் நிலைபெறச் செய்தனன். இதே செய்தி,

> "ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோ
> ரொன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து"

என்று பரணரும், பதிற்றுப்பத்திற் சிறப்பித்துள்ளார். சிலப்பதிகார மணிமேகலைகளினின்றும் இவனேபுகாரிற் கடைசியாய் ஆண்டவனென்றும், இவனாட்சியிலேயே புகார் கடல் கொண்டதென்றும் நாமறியலாம். இவன் சிறப்புப்பெயர் யாதேயாயினும், இக்கிள்ளியே டாக்டர் ஹுல்ஷ் என்பவராற் குறிக்கப்பட்ட தொண்டைமானிளந்திரையனுக்குத் தகப்பனாவான். இச்செய்தி மணிமேகலை ஆபுத்திரநாடடைந்த காதையிலும் (50, 60) அதற்கடுத்த காதையிலும் (177—205.) நன்கு புலப்படும்.

* பன்னிரண்டு பதின்மூன்றும் நூற்றாண்டில் விளங்கியவரான, உரையாசிரியர் நச்சினார்க்கினியராற் பெரும்பாணாற்றுப்படை யுரையில் இத்தொண்டைமான் நாகபட்டினத்து ஒரு பிலத்தில்வதிந்த நாக கன்னிகை யொருத்திக்குஞ் சோழனுக்கும் பிறந்தவனென்று வரையப்பட்டுள்ளது. இப்பிலமே அக்காலத்து வழக்கில் நாகலோகமென்று வழங்கியதுபோலும். மணிமேகலையோ வென்றால், புகாரழிவுக்குக் காரணங்கூறுமிடத்து, இவ்வளவசம்பாவிதமின்றி இக்கதையைப்பின் வருமாறுகூறும்.

> "பொங்குதிரை யுலாவும் புன்னையங் கானற்
> கிளர்மணி நெடுமுடிக் கிள்ளி முன்னா
> ளிளவேனி லிறுப்ப விறமபூது சான்ற
> பூநாறு சோலை யாருமி லொருசிறைத்
> தானே தமிய ளொருத்தி தோன்ற
> ....
> பலர்புறங் கண்டோன் பணிந்துதொழில் கேட்ப
> வொருமதி யெல்லை கழிப்பினு ளொருநாள்
> பொருவரு பூங்கொடி போயின வந்நாள்
> ....
> "நாக நன்னா டாள்வோன் றன்மகள்
> பீலிவளை யென்பாள் பெண்டிருள் மிக்கோள்
> பனிப்பகை வானவன் வழியிற் றோன்றிய
> புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தித்
> தீவகம் (மணிபல்லவம்) வலஞ் செய்து
> மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்துழி"

கம்பளச் செட்டி யென்பான் வணிகனது நாவாயங்குவர அவன் திறமறிந்து கொற்றவன் மகனிவனைக் கொள்கென, அவன் வாங்கிச் செல்வோன் காரிருளிற்றன் மரக்கலங் கெட்டதாக அப்புதல்வனைக் காணாமற் கிள்ளிக்குரைக்க அம்மன்னவன் மகனுக்குற்றது பொறாஅய் நன்மணியிழந்த நாகத்தைப்போற் கானலும் கடலுங் கரையுமெங்குந் தேடுவதி லிந்திரவிழாவை மறக்க,

---

* இவர் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டென்று கொள்வர் ஸ்ரீமத் அனவரதவிநாயகம்பிள்ளையவர்கள், எம். ஏ. எல். டி.

"மணிமேகலாதெய்வமற்றதுபொறாஅ
ளணிநகர் தன்னையலைகடல்கொள்கென
விட்டனள்சாபம்."

இச்சாபத்தாற் புகார்கடல்கொண்டது. இதே தொண்டைமான் பிறப்புச்செய்தியாயின் இத்தகைய கிள்ளியென்பானும் அரசனொருவனிருந்திருத்தல்கூடுமென்பது சிறிதும் அசம்பாவிதமாகாது. ஆகையால் டாக்டர் ஹூல்ஷ் என்பவருடைய எதிர்கோள் வலியற்றதாகும். தவிர, நாககன்னிகையென்பதற்குப் பாதாளமே போகவேண்டிய நிமித்தமில்லை. நாகரென்னுஞ்சனங்கள் இந்தியாவிலும், இலங்கையிலுமிருந்து, புத்தபீடிகைக்காகவும் இன்னுஞ்சில புத்தசம்பந்த ஞாபக வஸ்துக்களுக்காகவும் போர்புரிந்தனரென்று இலங்கை மகாவம்சம் செப்பும். ஆகையால் பாதாளலோகஞ் சென்றானென்னுங் கூற்று இந்நாட்டார்க்கேயுரித்தான ஒருவிதயுக்தியாகும். தவிர, இவ்விரண்டு காப்பியங்களிலுமியம்பப்படும் இன்னுமனேக விஷயங்களிக்காலத்து, ஏனையோருக்கு நம்பவொண்ணாததாயிருப்பது, இக்காப்பியக்காரர்கள் கர்மம் மறுஜன்மம் என்பவைகளில் நம்பிக்கையுள்ளவர்களாயிருப்பதன்றி சாதாரணச்செய்திகளுக்கும் முற்பிறப்புச்செய்திகளினின்று காரணங்காட்ட முயல்வதேயாம்.

இஃதிற்றாக மேற்கூறிய புகாரழிவே சிலப்பதிகாரவிறுதியிற் கிள்ளியை உறையூருடனொருங்குபடுத்தியிருப்பதற்குக் காரணமாகும். அன்றியும் இச்சிலப்பதிகாரக்கதை யிடையிலேயே காவிரிப்பட்டினம் கடல்கொண்டது தெளிவுபெறும். இக்காலத்துக் காஞ்சிநகரிலாண்டவன் கழற்கிள்ளியின் பின்னோனை இளங்கிள்ளியென்பானென்றுமணிமேகலையிற்காணப்பெறுகிறது.புகாரிற்கடைசியாயாண்டஇக்கிள்ளி மணிமேகலையில் வடிவேற்கிள்ளி, வெல்வேற்கிள்ளி, மாவண்கிள்ளி, நெடுமுடிக்கிள்ளியென்னும் பெயர்களாற்சிறப்பித்துச் சொல்லப்படுகிறான்; தன்பின்னோனைவிளங்கோ (காஞ்சியாண்ட இளங்கிள்ளிபோலும்) வுடன் சேரபாண்டியரைக்காரியாற்றிற்புறங் கண்டவன். இவனைப்பற்றியவையான புறப்பாட்டுமூன்றும் இவன் உறையூரிலுமாமூரிலும்,நலங்கிள்ளியென்பவனால்முற்றுப்பெற்றதாகச்சொல்லும். புகார்கடல்கொண்டவுடனிவனித்தகைய துர்க்கதியையடைய,செங்குட்டுவன்நேரிவாயிலில் இக்கிள்ளியொடுபொருந்தா

வொன்பதின்மரையுந்தோல்வியடையச்செய்தபேராற்றலால் இங்கிலேயினின்றும் நீங்கியவனுவன். இப்பாடல்களை ஆக்கியோரான, கோவூர்கிழார் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளியென்பானொருவனைச் சிறப்பிப்பர். புறநானூற்றிலும், சிறுபாணாற்றுப்படையிலும், இக்கிள்ளிகளில் ஒருவரும் புகாருடன் சேர்த்துச்சொல்லப்பட்டாரில்லை.

(இன்னும் வரும்)

நன்னூல்.

தமிழிலக்கணங்களுள் மிகப்பழமையான தொல்காப்பியத்தின் பெருமையும் அதன் கொள்கையும், பிற்காலத்தாரால் மதிக்கக்கூடாமற்போனவிடத்து, பல சிற்றிலக்கணநூல்கள் உண்டாகத்தலைப்பட்டன. அவற்றுள்ளே, முக்கியமானவை, வீரசோழியம் நேமிநாதம் நன்னூல் என்பன. இவற்றுள் நன்னூலென்னும் அரியநூல், இற்றைக்கு 728-வருஷங்கட்குமுன்னர்ப் பட்டந்தரித்த மூன்றுங்குலோத்துங்கன்காலத்து, அவ்வரசனுக்குள்ளடங்கிய கங்கவம்சத்தானாகிய சீயகங்கன் என்னுஞ் சிற்றரசன் வேண்டுகோளால் பவணந்திமுனிவரென்பாரால் இயற்றப்பட்டது. இதனை,

"...... .... தமிழ்க்கடலுள்
அரும்பொருளைந்தையும் யாவருமுணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதுந்
தனதெனக் கோலித் தன்மத வாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை விநோத னமரா பரணன்
மொழிந்தனன்."

எனவரும் சிறப்புப்பாயிரப்பகுதியால் அறியலாம்.

இச்சீயகங்கன் காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதஸ்வாமி கோயிலில் ஓர் நந்தாவிளக்கு வைத்தான் என்று கூறும் சாஸனமொன்றில்,

"ஸ்ரீமற்குவளாலபுரபரமேச்வரன் கங்ககுலோற்பவஞ்சீய்யகங்கன் அமராபரணன்" என்று வர்ணித்திருத்தலால், இச்சிற்றரசனே பவணந்தியாரை நன்னூல் எழுதும்படி வேண்டினவனென்று நிச்சயமாகக் கொள்ளலாம். இச்சாஸனம் கி. பி. 1205-ல் வெட்டப்பட்டது. இது 'ஸௌத் இன்டியன் இன்ஸ்கிரிப்ஷன்ஸ்' தொகுதி மூன்று, பக்கம் 122-ல் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இச்சீயகங்கனுக்கு "திருவேகம்பமுடையான்" என்னும் மறுபெயருமுண்டு. இவன் மனைவியின் பெயர் "அரியபிள்ளை" என்பது. மேற்குறித்த கி. பி. வருஷம், மூன்றுங்குலோத்துங்கனது இராஜ்யவருஷம் 27-வதாகும்.

கங்கவமிசத்தார், 'குவளாலம்' என்னும் பழம்பெயருடைய மைசூர் இராஜ்யத்தைச்சேர்ந்த கோலார்பட்டணத்தை இராஜதானியாகக்கொண்டு நீண்டகாலமாக ஆண்டுவந்த பழைய அரசர்கள். இவர்கள் தம்மெய்க்கீர்த்திகளில், தாம் குவளாலபுர பரமேசுவரர்கள் என்றும், நந்திகிரிநாதரென்றும் கூறிக்கொள்ளுகிறார்கள். இதிற்குறித்த நந்திகிரி என்பது நந்திதுர்க்கம் என்று இப்பொழுது வழங்கும் மலையாம். இதுவே வில்லிபுத்தூரர்காலத்தவனாகிய வடபதியாட்கொண்ட காங்கேயனைப்பற்றிய பாயிரச்செய்யுளில் கூறப்பட்ட 'நந்திமால்வரை'. இம்மலைப்பக்கத்துத்தான் பாலாறு உற்பத்தியாகிறது.

நன்னூலாசிரியராகிய பவணந்தி என்பவர், அவர் பெயராலும் (பவணநந்தி)[1], அவர் கடவுள் வணக்கத்தாலும்[2] ஜைனமதத்தவர் என்று தெரியவருகிறது. இவரூர் சனகை என்பது,

"பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே."

என்பதனாலும்,

(3) "தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்."

1. 'கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியுங் குமணமா, கனகநந்தியும்" என்னும் திருவாலவாய்த் தேவாரப்பகுதியால், பவணநந்தி என்பது ஜைனர்க்குள் வழங்குவது காண்க.

2 'பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த, நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே"

3 தொண்டைமண்டல சதகம்.

என்பதனாலும் அறியப்படும். இச்சனகை என்பது எவ்வூரோ இப்போது விளங்கவில்லை. இவர் சன்மதிமுனிவருடைய ஞானபுத்திரர்[4] என்பதும் மேற்காட்டிய சிறப்புப்பாயிரத்தால் கருதப்படுகிறது. கங்கவமிசத்தரசர் பெரும்பான்மை ஜைனராகவேயிருந்தமையால், சிரவணபெள்குளம் முதலிய ஜைனக்ஷேத்திரங்களில் வந்து தங்கியிருந்த ஜைனபண்டிதரையும் ஆதரித்தார்கள். மைசூரிலாகாவைச்சார்ந்த சிவமுகி ஹாஸனம் ஜில்லாக்களிலுள்ள சாஸனங்கள் பலவற்றால், சிரவணபெள்குளத்தில், தீபங்குடியிலிருந்துவந்த நிடும்பரைதீர்த்தத்து அருங்கலான்வயத்தைச்சேர்ந்த பிரபல ஜைனயதிகள் அநேகரிருந்தார்கள் என்றும், அவர்களில் ஒருவர், சதுரார்த்தத்தையுந்தரும் சிந்தாமணி செய்த சிந்தாமணியாசாரியரும், மற்றொருவர் சூடாமணி செய்த ஆசாரியரும் என்றும் தெரிகின்றது. இவ்வன்வயத்தார் தமிழ்ச்சைநரே என்பதற்கேற்ப, இவர்களுள் மிகப்பிரபலரான புஷ்பசேனபட்டாரகர் என்பவரதுபெயரை எல்லாச்சாஸனங்களிலும் 'புற்பசேனபடாரகர்' என்றே எழுதியிருத்தலாலும் விளங்கும். இந்துக்களுக்கு இராமாயணம் பாரதம்போல, ஜைனர்க்குள் சதுரார்த்தத்தையுந்தரும் காவ்யமென்று மதிக்கப்படுவது சீவந்தரன் சரித்திரமாகிய சிந்தாமணியாதலால், மேற்கூறிய சிந்தாமணியாசிரியர் எழுதியது—ஸம்ஸ்கிருதகிரந்தமன்று; அன்றியும் முன்னமேயிருந்த மூர்நிபந்தத்தின் விருத்தி (காரிகா) யுமன்று—தமிழ்ச்சிந்தாமணிகாவியமே என்று துணிய மனமெழுகிறது. இதற்கேற்ப, இவ்வன்வயத்தாரொருவரே சூடாமணி என்னும் நூலையும் எழுதினாரெனின், ஜைனருக்குள் சிந்தாமணியைப்போன்ற பெருமையுடையதென்று கருதப்பட்ட தமிழ்ச்சூளாமணியேயென்றும் யாவர்க்குந் தோன்றாதிராது. பின்னும், இவ்வன்வயத்தைச் சேர்ந்தவரென்று ஊகிக்கத்தக்கவரான உதீசிதேவர் இயற்றிய அருங்கலச்செப்பு என்னும் ரத்நகரண்டகசிராவகாசாரத்தின்மொழிபெயர்ப்பாலும்இவ்வன்வயத்தின் பெருமை விளங்கும். சீயகங்கன் இவ்வருங்கலாந்வயத்தில் மிக்க மதிப்புவைத்திருந்தவனோ என்று சங்கிக்க "அருங்கலவினோதன்" என்னுந் தொடர் இடங்கொடுக்கின்றது.

---

4 இவர் சன்மதிமுனிவர் புத்திரர் என்பர் பலரும். ஆயின், எனக்கு இவர் ஞானபுத்திரராகவேண்டுமென்று தோற்றுகிறது.

இவ்விலக்கணநூல், ஜைனரியற்றியதென்று இகழப்பட்டுச்சிறிது ஒளிமழுங்கநேர்ந்தபோது, திருவாவடுதுறை யாதீனத்தைச்சார்ந்த பிரபலவித்வான்களால் அதன்பெருமைமுன்போலவே நிறுவப்பட்டு இனிஎக்காலத்தினும் விளங்கும்படியான சிறப்புடன் பிரகாசிக்கிறது. இவ்விலக்கணத்தை ஸ்ரீவைஷ்ணவாசார்யருளொருவரான பிள்ளைலோகஞ்ஜீயர் குறித்திருக்கிறார் என்று ஸ்ரீமாந்- வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள் குறித்துள்ளார். இவ்விலக்கணத்தின் ஏனையபெருமைகளைத்தமிழறியும் ஒவ்வொருவரும் நன்கறிவாராதலால் அதிகமாகஅவற்றைவிரித்தல் மிகையாகும்.

து. அ. கோபிநாதராவ்.

ஓர் குறிப்பு.

சிலாசாஸநங்களில் பலதமிழ்ச்செய்யுள்களும் கிடைக்கின்றன. அவற்றுள் ஏகாரவிறுதியையுடையவற்றிற் சிலவற்றை உற்றுநோக்கின் முற்காலத்தில் இவ்வேகாரம் எவ்வாறு உச்சரிக்கப்பட்டதென்பது நன்குவிளங்கும். இப்பாக்கள் அநேகம் யகரவொற்றுடன் முடிவதை அடியில்வருவனவற்றிற்காண்க.

(1) கண்டார்காணு வுலகத்திற் காதல்செய்து நில்லாதேய்
பண்டேய்பாமன் படைத்தநாள் பார்த்துநின்று நையாதே
தண்டார்மூப்பு வந்துன்னைத் தளரச்செய்து நில்லாமுன்
னுண்டேல்லுண்டு மிக்கது உலகம்மறிய வைம்மினேய்

இது திருவெள்ளறைபுண்டரீகாக்ஷஸ்வாமிகோயிலின் பின்பக்கத்துக்குளக்கரையில் வரைந்துள்ளது. இதுதந்திவர்மன் என்னும் பல்லவசக்கரவர்த்தியின் அரசாட்சியின் 4-5-ம் ஆண்டின் சாஸனத்தின்பகுதி. உத்தேசம் (கி-பி-750)

(2) பணிமின்கள் பாதம் பகர்மின்க ணுமங்கள் பாரகத்தீர்
தணிமின்கள் சீற்றந் தவிர்மின்கள் பொய்ம்மை தவம்புகுநாள்

கணிமின்களென்ற கிளிகடி மாதர்தங் கைவிசைத்த
மணிமீன்கள்போலொளிர்வான்றோய்சிராப்பள்ளிவள்ளலுக்கேய்

இதுவும் இதுபோன்ற இன்னம் 103-பாக்களும் திருச்சிராப்பள்ளிமலையிலிருக்கும் குடைவரையில் பொறிக்கப்பட்டுள்ளன. இந்நூற்று நான்குபாட்டுகளுள் பல ஏகாரவிறுதியையுடையன. அவற்றுள் அநேகம் யகரமெய்யில் முடிகின்றன. இச்சாஸனத்தின் எழுத்தால் இது உத்தேசம் 11-ம் நூற்றாண்டின் முற்பகுதியைச்சேர்ந்தது என்னலாம்.

(3) அலைபுரியும் புனற்பொன்னி ஆறுடைய சோழன் அருமொழிக்கி
யாண்டுஇருபத் தொன்றாவ தென்றுங்
கலைபுரியு மதிநிபுணன் வெண்கிழான் கணிச்செக் கரமருபொற்
சூரியன்றன் நாமத்தால் வாம
நிலைநிற்றக்குங் கலிஞ்(ந)கிட்டு நிமிர்வையிகை மலைக்கு நீடூழி இரு
மருங்கும் நெல்விளையக் கண்டோன்
குலை(கொலை)புரியும் படைஅரசர்கொண்டாடும் பாதன் குணவீர
மாமுனிவன் குளிர் வையைக் கோவேய்.

இந்நிருமலை (போளூர்க்கடுத்தது) யின் சாஸனத்துளொன்று. இது முதல்இராஜராஜன் அரசாட்சியின் இருபத்தொன்றாவதில்(கிபி 1006)வெட்டப்பட்டது.

(4) வஞ்சியர் குலபதி யெழினி வகுத்த வியக்கரியக்கியரோ
டெஞ்சிய வழிவு திருத்தியி வெண்குண விறைதிரு மலைவைத்
[தான்.
அஞ்சிதன் வழிவரு மவன்வழி முதல்கல் அதிகன வகன-நூல்
விஞ்சையர்-லபுனை தகைமையர் காவலன் விடுகா தழகியபெருமா
[ளேய்.

இவ்விடுகாதழகியபெருமாள் மூன்றாம் இராஜராஜன் காலத்தான்; ஆதலால் இச்சாஸனம் கிபி 13ம் நூற்றாண்டின் இரண்டாம்பகுதியைச்சேர்ந்தது.

இவ்வாறுபாக்கள் வெகுவாய் உதகரிக்கலாம். ஆயின்நம்விஷயத்துக்கு இவ்வளவுமட்டுமேபோதும். மேற்காட்டிய உதாரணங்களால்

ஈற்றேகாரம் பண்டைக்காலங்களில் ஏய் என்று உச்சரிக்கப்பட்டுவந்திருக்கவேண்டுமென்பது தெற்றெனவிளங்கும். இதைப்போலவே ஐயும் ஐய்என்று உச்சரிக்கப்பட்டதுபோலும். இதற்கும்மேலெழுதிய பாட்டுக்களிலாங்காங்கு உதாரணங்களிருக்கின்றன.

ஆயின் இப்பண்டைவழக்கம் நாளடைவிலேயே மாறிவிட்டதென்பது பிற்பட்டகாலத்துச் சாஸனங்களால் தெரியவருகிறது. இதற்குதாரணமாக, செந்தமிழில் நானே முன்னர்ப்பதிப்பித்துள்ள பொன்பரப்பினன் மகதைப்பெருமாள்கவியின் 22-பாட்டுகளிலும் பாண்டியசாஸனங்கள் என்னும் விஷயத்துள்ள பலபாட்டுகளிலும் காண்க.

இன்னும் ஏககாலத்தில் ஆரம்பிக்கும் சிலபதங்களும் வேறுமாதிரியாக உச்சரிக்கப்பட்டதென்பதும் ஏற்படுகிறது. மேற்காட்டியதிருவெள்ளறைச்செய்யுளிற் பெயர் என்னும் வார்த்தை பியர்என்றுஎழுதியிருக்கிறது. இவ்வார்த்தை மற்றும்பற்பலவிடங்களிலும் வருவதால்1 இதுவேஇதன் உச்சரிப்பாயிருந்ததென்பது நிச்சயம். இவ்வாறே தேதிஎன்னும்வார்த்தை அநேகமாய்ச் சாஸனங்களில் தியதிஎன்றே காணப்படுகிறது. ஆதலால் அதுபின்சொன்னவாறே உச்சரிக்கப்பட்டுவந்திருக்கலாமென்பதும் தோன்றும்.

து. அ. கோபிநாதராவ்.

அடியார்க்குநல்லார்காலம்,

சிலப்பதிகார உரையாசிரியருளொருவராகிய அடியார்க்கு நல்லார்காலம் நிர்ணயிக்க ஒன்றிரண்டு ஆதாரங்களே தவிர இப்பொழுது மற்றொன்றுங்கிடையா. அவற்றுள் முக்கியமானது இவர் கலிங்கத்

---

(1) ஸ்ரீமத்-வெங்கோபராயரவர்கள் எழுதிய "நம்மாழ்வர்" என்னும் விஷயத்தில் "வேலங்குடியென்னும்பழம்பியர் நீக்கி" என்றுசாஸனத்திலிருப்பதாகக் கூறுகிறார். செந்தமிழ்த்தொகுதி-ச. பகுதி-௫.

*

துப்பரணியை மேற்கோளாயெடுத்தாளுவது.* இப்பரணி முதற்குலோத்துங்கன்பேரால் பாடியது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். முதற்குலோத்துங்கன் கி. பி. 1070—1117 வரையாண்டவன்; ஆதலால் அடியார்க்குநல்லார், குலோத்துங்கன் கலிங்கம் வென்றதற்கு முன்னிருந்தவராகார். பின்னும் இவரைக்குறித்து,

"காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்துக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமக் காலமென்னும்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்லவோ தமிழ்மூன்றுரை சொல்வித்ததே."

என்று பாடியிருக்கும் பாட்டினால் இவர் பொப்பண்ணகாங்கேயன் என்னுமோர் அரசன் காலத்தார் என்று விளங்குகிறது. இப்பாட்டிற் சொல்லியுள்ள சமாசாரம் வாஸ்தவமாயின், பொப்பண்ணனாகிய காங்கேயன் (கங்கைவம்சத்தான்) அடியார்க்குநல்லாரை ஆதரித்தவனென்றும் விளங்கும். இப்பொழுது, தென்னிந்தியாநாட்டிலாண்ட அரசர்கள், சிற்றரசர்களுள் பொப்பண்ணனென்று பெயர்பூண்டவன் கங்கவம்சத்தில் பிறந்தவன் ஒருவனேயுள்ளான். இவன் ஸ்ரீ ராமாநுஜரால் வைணவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட போசள விஷ்ணுவர்த்தன மஹாராஜாவின் மந்திரியும் படைத்தலைவனுமாகிய கங்கராஜன் என்பவன்மகன். மதத்தில் ஜைனன்; பாஷையில் கன்னடத்தான். இவன் குலோத்துங்கன் (I) காலத்துக்குச்சற்று பிற்பட்டகாலத்தவன். அடியார்க்குநல்லார் இவன் காலத்தாராயின் குலோத்துங்கனைப்புகழும் பரணியை மேற்கோளாயாளுவது சகஜமே. அடியார்க்கு நல்லார் ஊர் நிரம்பை என்பது

"அருந்தெரிய வுரைவிரித் தானடி யார்க்கு நல்லான்
காருந் தருவு மனையா னிரம்பையர் காவலனே."

* சிலப்பதிகாரப் பதிகவுரையில் (பக்—௨௪) "மக்களிழந்தவிடும்பையினும்" என்னும் ஒட்டக்கூத்தரது உத்தரகாண்டத்துத் திக்குவிசயச்செய்யுளொன்றையும் அடியார்க்குநல்லார் மேற்கோள்காட்டுவர். ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியின்தொடக்கத்தே சயங்கொண்டாரது பரணியின் பெருமையைக்குறிக்கிறார். இதனால், அடியார்க்குநல்லார்—சயங்கொண்டார் கூத்தர் இவ்விருவர்க்கும் பிற்பட்டவரென்பது பெறப்படுகின்றது.—ப—ர்.

என்பதனுல் ஏற்படும். ஆயின் இவ்வூர் இன்னதென்று துணியக் கூடவில்லை. இவர் பெயராகிய அடியார்க்கு நல்லாரென்பது இயற் பெயரல்லவென்று காலஞ்சென்ற ஸ்ரீமாந்-சேஷகிரிசாஸ்திரியாரவர்கள் எண்ணுகிறார். அதுவே எனக்கும் அபிப்பிராயம். இது நிற்க; இப்பொப்பண்ணன் கன்னடத்தானுயிருந்து தமிழ்ப்பண்டிதரை ஏன் ஆதரித்தானெனில், அதற்குக் காரணம் ஒருவாறு கூறலாம். சிரவணபெள்குளம் (சமணர்களின் வெண்குளம் என்பது பொருள்.) என்னும் ஜைனக்ஷேத்திரத்தில் வெகுகாலத்துக்குமுந்தி, தென்றேயத்துள்ள தீபங்குடி * என்னுமிடத்திருக்கும் நிடும்பறை தீர்த்தத்தினின்றும் பல ஜைனர்கள் அப்போதைக்கப்போதுபோய்க்குடியேறினரென்று ஹாஸனம், சிவமுகி ஜில்லாக்களின் பல சாஸனங்களால் தெரியவருகிறது. இத்தமிழ் ஜைனர் பக்திவைராக்கியஆசாரசீலராகவிருந்ததோடுங்கூட தமிழ், கன்னடம், சம்ஸ்கிருதம்,பிராகிருதம்முதலிய பாஷாநிபுணர்களாயுமிருந்தார்கள். இவர்கள் தமிழரே என்பது சாஸனங்களால்மாத்திரமன்றி, புற்பசேனன் என்பனபோன்ற தமிழ்படுத்தப்பட்ட பெயர்களாலும் விளங்கும். இப்பொழுதும் இம்மகாக்ஷேத்திரத்து மடத்துக்கு அதிபதியாகும் சந்நியாசியார் போளூர்த்திருமலையிலிருந்தழைக்கப்படும் தமிழர் ஒருவர் தான். ஆதலால் தமிழர்கள் தம்மகாபிமானத்தால் கன்னட அரசர்களாலும் மதிக்கப்பட்டனர் என்பது பொருந்தும். பொப்பண்ணனும் ஜைனனென்று முன்னமே கூறியிருக்கிறேன். ஆதலால் அடியார்க்கு நல்லாரை ஆதரித்தவன் கங்கராஜன்புதல்வன் பொப்பண்ண காங்கேயன் என்றால் இவர்காலம் கி. பி. பன்னிரண்டா நூற்றாண்டாகும்.

து. அ. கோபிநாதராவ்,

திருவல்லிக்கேணி.

---

* இது திருவாரூர்ப்பக்கத்து மூன்றுமைல்தூரத்தில் உள்ளது; இதனைத்தான் நமிநந்தியடிகள்புராணத்தில் ஜைனர் குடியிருந்தவிடமென்று சொல்லுவதுபோலத் தோற்றுகிறது. தண்டியடிகள்புராணத்தைப் பார்க்க. [தீபங்குடியென்னுங்கிராமம் ஜைனர் மிகுந்துள்ள பிரதேசமாகிய திண்டிவனப்பக்கத்துமொன்றுண் டென்பர்.—பத்திராசிரியர்.]

இந்துமதம்.

(௩௬௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இனி அக்கடவுள் இவ்வருள் வியாபகத்திலே நின்று நிர்விகாரியாயிருந்து தனதுசந்நிதியிலே உலககாரியப்படுமாறு நடத்துமியல்புதான் எப்படியெனிற் கூறுதும். முற்கூறியசூரியசந்நிதியிலே தாமரை அலர்தல் என்னும் உபமானமே போதியதேனும், மேலும் ஒன்று வெளிப்படையிற் காட்டுதும். சிலவற்றைமாத்திரமே செய்யவல்லசிறுவல்லமையும், சிலவற்றையே சிற்சிலகாலத்துச் சிற்சிலராலும் அறிவிக்க அறியும் சிற்றறிவும், சிற்சிலஇடங்களிலே சிற்சிலவற்றையே செய்யவல்ல சிறுதொழிலும் இயல்பாகவுள்ள மனிதசரீரிகளுள் ஒருவராகிய நமதரசி விக்டோரியா பிராட்டியாருமன்றே! சுவலாபமுஞ் சிறிதிருப்பினும், பரோபகார பெருங்காரணத்தையே முன்னிட்டு அதற்கத்தியாவசியகமான அருட்குணவகிப்பையே மேற்கொண்டு அவ்வருட்குணவகிப்புந் தனதொருசுதந்தரத்தின் மாத்திரமமைவதன்றெனத்துணிந்து, அவ்வருளுக்கு ஆதாரமாகத்தானுமோரங்கமாய்த் தனது சந்நிதியில் அமைந்த ஆலோசனைச்சபையாகிய பெரிய பரோபகார அருட்சபைமூலமாகவே தான்ஒவ்வோர்காரியங்களினுந் தோய்ந்துந் தோயாதுநின்று தனது ஆளுகைச்சத்தியின் சந்நிதி வலிமையானே எவ்வளவோ தூரத்துள்ள எவ்வெத்தேசங்களினும் தனது அருளாளுகை நடந்துவரும்படியான செயலைத் தான்வகித்திருப்பதனைக்கண்டுங்கேட்டுமுள்ள நம்மனோருக்கு எல்லாவற்றையும் செய்யவல்ல சருவவல்லமையும், எல்லாவற்றையும் ஏககாலத்திலே இயல்பாய் அறியவல்ல சருவஞ்ஞதையாகிய எல்லாவறிவும், இயற்கைஉணர்வும், எல்லாவலிமையும் இயல்பாகவே யமைந்தபேரருளே மயமாகிய கடவுளாலே எவ்வெவ்வுலகங்களிலே நடத்தப்படும் எவ்வியல்பினவாகிய காரியங்களும் தான்தோய்ந்தும் தோயாதும் தமதுசத்தியாகிய பேரருட்சந்நிதியிலே அவையெல்லாந்தாமாகவே காரியப்படும்படிசெய்து நிற்றல்தானுமோராச்சரியம் எனக்கவலைதோன்றாமையே நமக்குப் பேராச்சரியமாம்! கடவுள் பேரருளிடத்தே தோய்தலும் பிறவற்றிலே தோயாதவருமா ஆவர். நமதரசியும் (பார்லிமெண்டு) அச்ச

மையிலே தோய்தலும் பிறரிடத்திலே தோயாமையும் உடையராவர். அதிசுத்த சொரூபமாகிய பேரருளிடத்தே கடவுள் தோய்தலினாலே விகாரியாகார். விக்டோரியாபிராட்டியும் பரோபகார காருண்ணிய பலபிரபு சமூகமாகிய சபையிலே தோய்தல் (சம்பந்தப்படல்)காரணமாக ஆளுகையளவில் விகாரியாகார்; அசுத்த மாயாகாரியங்களிலே கடவுள் சம்பந்தப்படுவாராயின் விகாரியாவர். அவர்செயலனைத்தும் விகாரமுடைத்தாய்ப்பழிப்புக்குரியனவாகும். நமதரசியும் (கவர்னர்) முதலிய பிரதிநிதிகள்முதலாகக் கீழுள்ள எவ்வித உத்தியோகசெயல்களிலுந்தானே ஒருசிறிதுநேர்சம்பந்த முறுவராயின், அச்செயல்கள் அனைத்தும் விகாரமுடையனவாய்ப்பழிப்பிற்குரியனவாகும்.நமதாளுகையிலே முடிவடையும் எவ்விதகாரியங்களும் நமதரசியின் பெயரளவிலே முடிந்தனவாகக்கருதப்படுமாறு போலவே, உலகத்துச்சிருஷ்டியாதி செயல்கள் அனைத்தும் அக்கடவுளின் அருட்சந்நிதியிலே காரியப்படுவதாகக் கருதுவதே பேரறிவாளர்பெருங்கடனாகும்.

இனி, அவ்வருள்வியாபகமோ எங்குமுள்ளது. நாமெல்லாம் எக்காலத்தும் அவ்வருள் வியாபகசந்நிதியிலே யுள்ளோம். அவ்வருட்பதிவு நம்மிடத்துண்டாதற்கு நாமாகமுயற்சிசெய்யவேண்டியது அநாவசியகம் என்பாரும் உளராலோவெனில், அவர்க்கும் சிலகூறுவாம். அவ்வருளின்வியாபகவியல்பு சாமானியவியாபகம் விசேடவியாபகம் என இருதிறப்படும். சாமானிய வியாபகம்நமதுபந்தநிலையிலுள்ளது. விசேடவியாபகம் நமதுபேரின்பமுத்திநிலையிலுள்ளது. நமதரசியின் பேரருட்சபையின் ஆளுகைவியாபகம் அவ்வாளுகையுள் அமைந்த எத்தேசங்களிலும் எவரிடத்தும் உள்ளது உண்மையேனும், அவ்வுண்மையறியாதும், அச்சபையாலே தாம்அடையவேண்டிய நன்மைகளை அடையமுயலாதும் வலியில்லாதும், அச்சபைநன்மையை இழந்து வருந்துவோர் அச்சபையின் ஆளுகைச்சாமானிய வியாபகத்துள்ளவராவர். அச்சபைஇயல்பும், அச்சபைக்கும் அரசிக்கும் உள்ளசம்பந்தவியல்பும், அச்சபையினாலே தாம்அடையத்தக்க நன்மைகளியல்பும் அறிந்துதக்கபடி முயன்று தமதுகருமங்களை அச்சபையின்நேர்விசாரணையிலேசெலுத்தி உண்மைப்பலன்பெறுவோர் அச்சபை ஆளுகையின்விசேடவியாபகத்துட்பட்டவராவர். அதுபோலவே. கடவு

ளின் அருளியல்பும், அவருக்கும் அவ்வருளுக்கும் உள்ள சம்பந்தவியல்பும் அவ்வருளின் விசேட வியாபகத்திலே சென்று நாம்பெறவேண்டிய பெருநன்மைகளைப்பெறுமியல்பும், பிறவும் அறியாதுமயங்கி ஆசைப்பட்டுநிற்கும் பெத்தநிலையிலே அவ்வருள்வியாபகம் நம்மிடத்துச்சாமானிய வியாபகமாய் நின்று நமதுசெயல் முயற்சிகளுக்குத்தக்கபடி சிற்சில சுகதுக்கங்களையேகொடுத்துநிற்கும். இச்சிறு சுகதுக்கங்களை வெறுத்துப்பேரின்பமொன்றையேவிரும்பிப்பெரிதும் முயன்றுபெருநிலை அடையவிரும்பும் முத்திநிலையிலே, அவ்வருள்வியாபகம் விசேடவியாபகமாக நம்மிடத்திலேபதிந்து நமதுகருமங்களைச்சுத்தப்படுத்தி நம்மைப்பெருநிலையில்வைத்துப் பேரின்பத்தைக்கொடுக்கும். இதனையே முன்னர்ச்சத்தி நிபாதமென்று கூறியதுமாம். இச்சத்தி நிபாதம்பெறுதல் நமதுசாதனங்களாகியபலவிதமுயற்சிகளாலே வரத்தக்கதாம். நமதரசியின் சபையின் ஆலோசனை ஆளுகையிலேயே நாமெல்லாம் அமைந்திருப்பினும், நமதுகருமங்களை அச்சபையின் முன்னர்ச்செலுத்தலாகிய பலவிதமுயற்சிகள் செய்யப்படாவிடின், அச்சபையோர் தாமாகச்செய்யத்தக்கதொன்றுமில்லாதவாறுபோலவே கடவுளுடைய பேரருள் வியாபகத்திலேயே நாம் தொழிற்படுவதாயினும், அவ்வருளின் விசேடவியாபகசத்திநிபாதத்தைப்பெறத்தக்க நன்முயற்சிகளை நாமெடுத்துக்கொள்ளாதவிடத்து அவ்வருளால் அடையத்தக்க பெரும்பேறு நமக்குக்கிடைத்தலும் அரிதேயாகும்.

முற்கூறிமுடித்த உபசங்காரத்தை அநுசரித்து மேலும் இதுவரையுங்கூறிவந்த உண்மைகளாலே, கடவுள் ஒருவர் உண்டென்பதுபிரமாணங்களாலே பூரணமாக நிச்சயிக்கத்தக்கதென்பதும் அக்கடவுளுடையஇயல்புகளெல்லாவற்றுள்ளும் மிகச்சிறந்துள்ளதும் அத்தியாவசியகமாய் இன்றியமையாதுள்ளதும் பேரருளொன்றேஎன்பதும், அப்பேரருளுக்கு ஆன்மாக்களாகிய நாமெல்லாம் இகபரமென்னும் பெத்தமுத்திநிலை இரண்டினும் கட்டுப்பட்டுள்ளவர்களேயாயினும் முத்திநிலையிற் பேரின்பசுகத்தைப்பெறுதற்குப் பெரிதுஞ்சாதனங்களாகியபெருமுயற்சிகளைச்செய்தே பெறுதல்வேண்டியது அத்தியாவசியகமென்பதும், அவ்வண்ணம்செய்யும் நமது நன்முயற்சிவலிமையினாலே அப்பொருள் நம்மிடத்தேபதிந்து நம்மைத்தன்வசமாக்கிப்

பெருஞ்சுகத்தைக் கொடுக்கவல்லதுஎன்பதும்; பிறவுஞ்சுருங்கச்சொல்லியிருப்பினும் அறிவுடையார்பார்வையிலே விளங்கவைத்தலாகக் காணப்பட்டு மிகவும் வியந்துவிவரணஞ்செய்து கொள்ளத்தக்கனவாம்.

மு. சாம்பசிவநாயனர்,
சாலியமங்கலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பதவிளக்கம்.

தடுத்தாட்கொண்டபுராணம்.

(௩௨௩-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

(௧0௫) விட்டுணுவும் பிரமனுந்தேட, உலகம் பொலியவும் வேதமாகிய சிலம்பொலிக்கவும், கனகசபையின்கண்ணே எவர்களுக்குந் தரிசிக்கும்படி வெளியாகநின்று ஆனந்தநடனஞ்செய்தருளுகின்ற நடராஜரை, முன்னரேவிரித்தஞ்சலியாக்கிய கைகளோ, தரிசித்த கண்களோ, அந்தக்கரணங்களோ கலந்த அன்பானது உந்த, இப்பேற்றிற்குக்காரணமாக முன்புசெய்த தவத்தாற் பெரியநம்பியாரூரர்போய்த் திருக்களிற்றுப்படியின்பக்கத்தே வணங்கியெழுந்தார். ஓகாரங்கள் எண்ணுப்பொருட்கண் வந்தன. திருக்களிற்றுப்படி ஒரு தமிழ்ச்சித்தாந்தநூலைத் தன்னிடத்துள்ள களிற்றுக்கை நிமிர்ந்தெடுத்து நடராஜரது திருவடியிற்கொடுக்கப்பெற்ற கனகசபையின் திருவாயிற்படி.

(௧0௬) பஞ்சபுலன்களையுங் கண்ணுகிய பொறியே கவர, அந்தக்கரணங்களுன்கும் மனமேயாக, முக்குணங்களுஞ்சாத்துவிதமேயாக. பஞ்சபுலன்களுங் கட்புலத்துளடங்கவும், அந்தக்கரணங்களுன்கும் மனத்துளடங்கவும், குணமூன்றுஞ்சாத்துவிதத்துளடங்கவும் லயமானுர் என்பது கருத்து. இலயம் - ஒடுங்கல்.

(௧0௭) வாலிதாமின்பம் - பேரின்பம்; சிற்றின்பஞ்சுத்தமில்லாதவின்பமாகலின்.

(கOஅ) ஒப்பற்ற தாண்டவத்தைச்செய்யத்தூக்கிய திருவடியையுடைய சபாநாதரது திருவருளால், முத்துக்களைக்கொழிக்கின்ற நீர்பொருந்திய திரைமறிகின்ற காவிரிநதியையுடைய நீண்ட அழகிய வயல்களைச்செறிந்த திருவாரூரிலே நம்பாட்டுவருகவென்று, தடுத்து முன்னடிமைகொள்ளப்பட்ட நம்பியாரூரர், முன்னேவந்தெழுந்த ஓசையைக்கேட்டலும், பொருந்திய அப்பொழுதில் அதையுணர்ந்தெழுந்தார்.

(கOகூ) புறவிடை - புறப்படுதற்குரியவிடை. மாடு - பொன்.

(ககO) திருப்பதி - சிதம்பரம். முற்செய்யுளினீற்றிற் கடந்து என்பதனை இச்செய்யுளின் முதலிலுள்ள நின்று என்பதனோடுகூட்டிப்பொருள்கொள்க.

(ககக) உபவீதம்பொருந்திய திருமார்பையுடைய சுந்தரமூர்த்திநாயனார் பக்கத்துள்ளவர் தோத்திரஞ்செய்ய.

(ககஉ) உள்ளும் - உள்ளிடத்தையும். ஊரெல்லைப்புறம் - ஊரினது புறவெல்லை.

(ககச) எதிர்நின்றும் மறைந்தருள. வெருகோளுற்றதுநீங்கி - பொருந்திய அச்சத்தை நீங்கி; (துச்சாரியை)

(ககரு) மாளுர்க்கும் - மாளெலிக்கும். காளுர்க்கும் - வாசனைநிறையும்.

(ககசு) மயிலாடுதுறை - மாயூரம். அம்பர்மாகாளம - ஒரு சிவஸ்தலம்.

(ககஎ) மார்பராகிய நாவலூராளி. புரிமுந்நூல் - முப்புரிநூல்.

(ககக) நம்பிரானாராவாரவர் - நம்முடைய கடவுளாவார் அந்த நம்பியாரூரர். உம்பர்நாடிழிந்ததென என்றுகூறியது பேரழகுமுதலியபற்றி.

(கஉO) மாளிகைகளினும் மண்டபங்களினும் பக்கத்தேபெருங்கொடிகள் நெருங்க, தாளையுடைய நெடியதோரணங்களும், பசும்

பொன்னாலாய பூரணகும்பங்களும். ஒளி - நீட்டல்விகாரம்; ஒழுங்குமாம்.

ஒளியையுடைய அழகியதிண்ணைகளைச் சுத்தமாகியநறியசாந்தினாலழகுறமெழுகி. வீதிகள் நண்ணிய தூகளடங்கனவும் இருதிறத்தானுமுரைக்கலாம்.

(௧௨௨) முற்றிழை - தொழின்முற்றியஇழை. எயினீடிருவாயில் - மதிலினெடிய திருவாயில்.

(௧௨௩) செல்வார் - சுந்தரமூர்த்திநாயனார். எம்மனோர்க்கு அந்நியராயிருத்தல்போலாகாது அந்நாயனாருக்கு அந்நியராயிருக்கின்றகடவுள் என்பார் தம்பெருமானென்றார் சந்தஇசையையுடைய பதிகங்களைப்பாடி.

(௧௨௫) பங்கயத்தாள் - இலக்குமி. உடம்பால் நன்மையின்றன்மை - மானுடப்பிறப்பெடுத்ததனாற்பெறவேண்டும் நன்மைத்தன்மையை. மெய்ம்மையாக.

(௧௨௬) பெற்றதால்வந்த இன்பவெள்ளம்.

(௧௨௭) உனக்கு நம்மைத்தோழமையாகத் தந்தோம். வேள்வி - விவாகம். விளையாடுவாய் - சிற்றின்பங்களை நுகர்வாய். மனத்தில்இதுவே உறுதியானபொருளென்றுகொண்டு நுகராமையின் சிற்றின்பநுகர்ச்சி விளையாட்டாயிற்று.

(௧௨௮) கேட்க - அவ்வாக்குத்தமது செவிக்குப்புலப்பட. வன்றொண்டரானவர் அதனைச்செய்தற்குவிரும்பி. அருமணியே - அரியமாணிக்கமே. வாளுங்கயலுந்தனது நலத்தைக்கவர்ந்தகண்.

(௧௨௯) என்று - என்றுகூறி.

(௧௩0) விடங்கு - அழகு. அணிஎன்றது விபூதிருத்திராட்சங்களை. தார்மணிமாலை ஆகிப்பொலிய எனக்கூட்டுக. மகிழ்வொடுந்திளைத்து - மகிழ்ச்சியோடுங்கூடி.

(௧௩௧) சேடிமார் - தாதியர். பெருமைக்கு எல்லையில்லாத. பொதுக்கடிந்து - உரிமைசெய்தல் பலசேடியர்களுக்கும் பொதுவாதலைநீக்கி. கதித்தபூண் - சிறந்தபூண்.

(கரு உ) எளியஇப்பியினிடத்து அரிய முத்துப்பிறந்தாற்போல. பதியிலார் - குறித்தநாயகரில்லாதவர். நாமத்தைச்சாத்தினனவியையும். விதிப்படி கல்விவிளக்கத்தாலே. மதியணிபுனிதன் நல்நாள் - திருவாதிரை. மங்கலவழகினாலே, சாத்திப் பரவினரெனமேல்முடிக்க.

(கருங) தெய்வம்பராய்க்காப்பையிட்டுச் சுற்றத்தார் மாசங்கள்சேர்ந்தபருவங்கடோறும் விழாவை அணியோடுசெய்ய, பெரியவர்கள் மேன்மைபொருந்திய இலக்குமி இங்கே அவதரித்தனளென்று மனந்தரவருகின்றமகிழ்ச்சி மிகத்தள்ளாடிநடக்கின்ற பருவத்தையடைந்தார்

(கருச) தெய்வவளர் - கற்பகவிருக்ஷம். வாசத்தேனிளம்பதமோ - வாசனையையுடைய பூந்தேனது இளம்பருவமோ. இளம்பவளவல்லிக்காட்டிலே வெடித்தமிக இளங்கொடியோ. மன்மதன் இளம்பருவத்திலே தனுர்வித்தையைக்கற்கும்போது வளைத்தசிறிய கருப்புவில்லோ.

(கருரு) என்றுகூற, நாடுகின்ற இனிய அழகின்வாய்ப்பு நாளுக்குநாள் வளர்ந்துபொலிய. முற்செய்யுளிலுள்ளதை நாடும் என்பதனோடுகூட்டுக. மென்கழற்சிக்காயையும் பந்தையும் அம்மனையையும் ஊசலையும் ஆடும், இன்னிசையும்பாடும், தங்களது உமையினதுபாதத்தைக் கூடுதற்குக்காரணமாகிய அன்பினாலே மனமுருகப்பாடுகின்ற கொள்கையையுடைய ஒருகுறிப்புத்தோன்ற இன்னிசையும் பாடுமென்க. உமையென்றது அநிந்திதையையுஞ்சேர்த்து.

(கருசு) பாலமைப்பருவத்தின்மேலுள்ளபேதைப்பருவத்தையுங்கடந்து அள்ளுதற்கினைந்த அழகினாலே மன்மதனதுமெய்ம்மையாகிய நிதிகளானவை மிகுந்துகூட்டங்கொள்ள உபர்தலைப்போன்ற ஸ்தனங்களானவை கோங்கரும்புகளைத் தோற்கச்செய்ய தமதுள்ளத்திலுள்ள மெய்த்தன்மையைப் பழைய உண்மையுந்தோன்ற உய்ப்பார். பழைய உண்மைத்தன்மையென்றது பூர்வசனனத்துத் தாம் உமாதேவியாருக்குத்தாதியாயிருந்த அடிமைத்தன்மையை.

(கஙௗ) எங்நாளும்போவாராகிய பரவையார்என விணையால ணையும்பெயர்.

(கஙஅ) அடிகளிலணிந்தசிலம்புகளானவை பூமியைவென்று கீழ்ப்படுத்தினேமென்றாரவாரிக்க. பாதங்களின்வினையாகிய வெல்லுதலை ஒற்றுமைநயம்பற்றிச் சிலம்பின்மேலேற்றினார். முத்துக்கள் தூங்குகின்றமேகலையானது, அல்குலானது நெடியசேடன்றாங்கி வருகின்ற பூமியைவென்றதுணிவினாலாரவாரிக்க. வேறற்குவினைமுதல்அல்குலும், ஆர்த்தற்குவினைமுதல் காஞ்சியுமெனக. முகில் கூந்தலுக்குத்தோற்றமையினால் இனி விண்ணுலகமுந்தாழுமென்று அக்கூந்தலிலுள்ள வண்டுகளாரவாரிக்க. சிலம்புகள், அடிகள்பாரைவென்றமையினால், அப்பாருலகை நாங்கீழ்ப்படுத்தினேமென்று ஆரவாரிக்கஎன்று கோடலுமொன்று. இப்பொருட்குப் பாரைவெல்லுதற்குவினைமுதல் அடிகளும், ஆர்த்தற்குவினைமுதல் சிலம்புகளுமாம். கீழ்ப்படுத்து மிதித்தலினாற்சிலம்படிகள் பாரைவெல்லலும், விசாலத்தாற்காஞ்சியல்குல் உலகைவெல்லலும், கருமையினால் சுரிகுழல் மஞ்சைவெல்லலுஞ்சாலுமெனக. இங்கே எடுத்துக்கொண்ட ஆறு பொருள்களும் இவ்விரண்டோரினமாயொன்றற்கொன்றுதாரவாதேயங்களாகலின் இங்ஙனங்கூறினார்.

(கஙக) நம்பிசெல்வாராகி. பான்மை - விதியின்றன்மை. விற்புரைநுதலின்வேற்கண் - வில்லிலேதொடுத்த வேல்போலும் நுதலோடுகூடியகண். வாயையுங்கண்ணையுமிமையையும் உடையவரை.

(கச0) புண்ணியத்தின்புண்ணியம் - புண்ணியமானதுசெய்த புண்ணியம்; "தவஞ்செய்ததவமால்" என்புழிப்போல. மலர்மதி - பூர்ணசந்திரன்.

(கசக) பிரயாசித்திரமாக எழுதக்கூடாமையினால் மனத்தாற்பொருந்திய தன்வருத்தந்தோன்ற உண்டாக்கிய ஓர் இரத்தினதீபமோ. படைமதனானவர் இருவருக்கும் நடுவேநின்றார்.

(கசஉ) குளிர்ந்தமுத்தையும் இரத்தினங்களையுமுடைய தோட்டையுந்தடுத்தோடுகின்ற கடையானதுபிறழுகின்ற கெண்டைமீன்போலும் கண்வியப்ப, விளங்குகின்ற ஒளியையுடைய ஆபரணத்தை

யணிந்த நம்பியாரூரரை. கண்வியப்ப என்றது பரவையார் கண்வி யப்ப என்னுங்கருத்திற்று. பரபுருஷரையறியாத மனம்விரும்பப் பழையவிதிசேர்க்கப் பரவையாருங்கண்டார்.

(கசரு) கண்ணுக்கடங்காத அழகைப்பொழிந்த திருமேனி யானது பிரபையைப்பரப்புதலால்,விண்ணுக்கடங்காதபேரொளியை யுடைய நம்பியாரூரரை எதிர்பார்க்கின்ற பரவையாருக்கு மனத்தில டங்காதவிருப்பத்தினால் முன்னொருகாலத்துமடையாத ஒருவிருப்ப மானது பூமியிலடங்காத நாண்மடமச்சம்பயிர்ப்பாகிய இவற்றை வலாற்காரமாக இழுத்துக்கொண்டெழுதலும்.

(கசஎ) பேர்பரவை - இவளுடையபெயரோ பரவை; பெண் மையினில் பெருஉம்பர்அவைவிரும்புஅல்குலார்பரவுஐ - அழகுமுத லிய பெண்குணங்களாற்குறிக்குமிடத்துப் பெரியதேவர்கூட்டம் வி ரும்புகின்ற அல்குலையுடைய திலோத்தமைமுதலிய அரம்பையர் து திக்குந்தெய்வமாம்; அணிதிகழும்மணிமுறுவல்அரும்பர்அவை-அழ குவிளங்குகின்ற பற்கள் முத்தும்முல்லையரும்புமாகிய இவற்றின் தொகுதியாம்; சீர்பரவைஆயினாள் திருஉருவின்மென்சாயல் ஏர்பர வைஇடைப்பட்ட என்னுசைஎழுபரவை - சிறந்த பரவையென்னுங் கூத்தையுடைய இலக்குமியினது திருவுருவம்போன்ற மென்சாயலை யுடைய இவளது அழகாகிய பரப்பினகப்பட்ட என்னுசையானது ச த்தசமுத்திரங்களாம். இச்செய்யுட்கின்னுமோர்பொருள்—பேர்ப ரவை - பெயர்பரவையென்பவள்; பெண்மையினில் - பெண்மைக்கு ணங்களாகிய நாண்மடமச்சம்பயிர்ப்பென்னுமிவற்றால்; பெருஉம்பர் அவை - பெரியதேவர்களுக்குத்தாய். (அவ்வை அவையென இடை க்குறைந்துநின்றது.)விரும்பு அல்குல் ஆர்பு அரவுஐ - விரும்புகின்ற அல்குலினுடைய நிறைவினாற் பாம்புகளுக்கு இறையாகிய சேஷன். (ஐ - இறை) சீர் பரவு ஐ ஆயினாள் - இலக்குமி துதிக்கத்தக்கஅழ கையுடையஇவளது (சீர் - இலக்குமி. ஐ - அழகு) ஏனையவற்றி ற்குமுற்பொருளே பொருள்.

(கசஅ) எம்பெருமான் அருள்வகையால் முறைமையினால்முன் தொடர்ந்துவருங்காதலிற்றொடக்குண்டு. முறைமை - விதித்தன்

மை. மற்றொருவன் மனையிடத்தன்றித் தம்மைவிரும்பிய கன்னிகையிடத்தாகலின் முறைமையினுற்றொடக்குண்டு என்றூரெனினுமமையும். உடையநம்பி - என்னை அடிமையாகஉடையநம்பி.

(கருஉ) பாசத்தான்வரும் வினைப்பற்றைநீக்குமாறு மிகுகின்றஆசையின்மேலும் ஓர் ஆசையைத்தருகின்ற அழகோடுபொருந்தி என்னுடையமனத்தைமயக்கிய சிவபிரானது திருவருளைமுன்னிட்டு நிற்பதல்லது பிறிதொன்றை அறியாராகலிற் பரவையாரை ஈசனருள் என்றூர்.

(கருங) வம்பு—நிலையின்மை.

(கருச) பாசபந்தத்தை விடுதலைச்செய்கின்ற பரமனதுகழலை மனத்திற்பொருந்தச்சிந்திக்கின்ற என்சிந்தையை.

(கருரு) என்னுயிர் எங்குநின்றது என. உயிரென்றது பரவையாரை. தேவாசிரயன் - திருவாரூரிலுள்ள ஆயிரங்காலையுடையதிவ்வியமண்டபம்.

(கருசு) ஆரூரரையாண்டவர் - வன்மீகநாதசுவாமி. பூவின்மங்கை - இலக்குமிபோலும்பரவையார்; அழகையுடைய மங்கையுமாம். ஆண்டவர் பூவின்மங்கையைத்தந்து என் ஆவியை நல்குவர்.

(கருஎ) ஊரனது மனம்விரும்பிய மின்போன்ற இடையையுடைய இனிய அமுதத்தைக் கடல்கடைந்துகாட்டுவன் என்பதுபோல.

(கருஅ) மாலைமேற்செலவும், பணிப்புறவும் வந்தது.

(கசுக) அரந்தைசெய்வார் - பரபுருஷர். வரன் - நாயகன். மலர்தல் - மனமகிழ்தல். பகல் - சூரியன். கரத்தைச் சூரியனுக்குங்கூட்டுக. கயிரவம் - அல்லி. அரந்தை காரியவாகுபெயராய் வலாற்காரத்தையுணர்த்திற்று.

(கசுங) வாவியானது புள்ளொலியைநீங்கிய மாலைக்காலத்தில்.

(கசுரு) ஆர்த்தி - விருப்பம். என்மேற்றூர்ப்பதே எனக்கூட்டுக. நின்று - ஆகாயத்தில்நின்று. தொண்டுகொண்டாண்டவர் தமது நீண்முடிசாத்தும்வெண்மதி.

(கசுஎ) பிரான் - சிவபிரான்வீற்றிருக்கின்ற பொதியத்தில். சகவாசஞ்செய்தது புனனாட்டினழகியபக்கத்துள்ள வயல்கள்சூழ்ந்த தடாகங்களில்.

(கசுகூ) கணவனைப்பெறுவாள்போல மணிகண்டர்முன்கழல் வணங்கி எனக்கூட்டுக. இனிக் கணவனைமுன்பெறுவாள்போலவெய்து பெருங்காதலோடு எனக்கூட்டுதலுமாம்.

(கஎ0) நிலாமுற்றத்தின்மாடேயுள்ள மரகதத்தூண்விளங்குகின்ற அழகியவேதிகையிலிடப்பட்ட பொற்காலையுடைய உவமையற்ற புஷ்பசயனத்தின்மீதே மாளிகையின்மேலாலேறிவந்தாளென்க.

(கஎக) அந்தணராகி ஆளப்பட்டதிருத்தொண்டர். அந்தணரென்றது சிவபெருமானை. சைவமுதல் - ஆதிசைவம்.

(கஎஉ) நிறை - கற்பு.

(கஎங) ஆரம் - சந்தனம். ஆட்டி - முழுக்காட்டி: அப்பினுமாம். பனிநீராதிவலை. குளிரி - நீர்க்குளிரி. இவை சீதளோபசாரங்கள். சமிதை - ஓமவிறகு.

(கஎச) துயிலாற்றாள் - துயிலைச்செய்யாள். மருங்குவருந் தென்றல் - கற்பைத்தாங்குகின்ற பொறையைத்தாங்காத நீர்மையோடும். கரியகூந்தலின்பாரத்தைப் பொறுக்கமுடியாத கையையுடையளாகி; கை - ஒழுக்கமுமாம். நெகிழ்ந்து - திறந்து. வறிதே - வீணாக.

(கஎரு) சந்தின்றழல் - சந்தனக்குழம்பு. மலையாநிலம் - மந்தமாருதம்.

(இன்னும்வரும்)

ஸ்ரீ. சதாசிவப்பிள்ளை,

நாகை—"நீலலோசனி"ப்பத்திராதிபர்.

தருக்கசூத்திர முதற்பாடம்.

(87-வதுபக்கத்தொடர்ச்சி.)

4-வதுஎண்ணுமுறையியல்

(81) யாவரும் எண்ணும்விதமிதுவெனத் தெரித்துநிற்றலா ல், இவ்வியல் எண்ணுமுறையியலெனக்கூறப்பட்டது. தருக்கஞ்செ ய்தற்குரியதன்மையெல்லாம் இவ்வெண்ணுமுறையிலடங்கிநிகழுமா றுணர்க: இதுஒவ்வொருவருடைய நினைவையும் விரித்துக்காட்டிஉண் மைஞானத்தையுணர்த்தாநிற்கும். அவ்வுண்மைஞானம் மூன்றுமூல விதிகளுள் அடங்கிநடைபெறும். இவ்விதிகள் தருக்கத்திற்கோர்திற வுகோலாம்.

அவையாவன:—(1) எதுஎப்படிஇருக்குமோ அதுஅப்படித்தானிரு க்கும்.

(2) யாதாமொன்று உள்ளது மில்லதுமாகாது.

(3) யாதாமொன்று உள்ளதாயிருத்தல்வேண்டும் அல்லது இல்லதாயிருத்தல்வேண்டுமே தவிர நடுநிலையுறுதலின்று: என்பனவாம்.

இவைகளைவிளங்கக்கூறில், முதலாவதுவிதி ஒவ்வொன்றுந்தன க்குத்தான் நிகராயிருப்பதிற் பின்னிடாதென்பதனைக்குறித்து நடை பெறும்.

இரண்டாவதுவிதி மிகக்கருதியறியத்தக்கதே: எங்ஙனமெனில் ஒரேகாலத்தில் ஒரேயிடத்தில் ஒருபொருள் உள்ளதுமில்லதுமாகிய தன்மைகளைப்பொருந்திநடைபெறாதென்பதாம்.

உதாரணமாக. ஒருகதவுதிறந்தபின் மூடலுறும். ஆனால் திறத் தலும் மூடலும் ஒரேகாலத்தில் நிகழாமைகண்டுணர்க.

இவ்விதிக்குமாறாய் நிகழு நிகழ்ச்சி யெல்லாம் "என்றுமுடியா ததும், உண்மைதவிர்ந்ததும்" ஆகியபகுப்பினுள் விழுவனவாம்.

மூன்றுவதுவிதியோ, மூன்றுவது அல்லது நடுநிலையுற்றது இல்லையென்று கூறுகின்றது.

(1) உதாரணம்:— "இந்தப்பாறை கடினமுள்ளது" என்றுவது, அல்லது "இந்தப்பாறைகடினமில்லது" என்றுவதுசொல்லலாமே தவிர, கடினமுள்ளதிற்கும் அஃதுஇல்லதிற்குமூடே ஒருநடுநிலையிருக்கிறதென்று கூறல் கூடாதென்பதாம்.

(2) ஒருசெயல் நன்மையாயிருத்தல்வேண்டும் அல்லது அஃதில்லாதிருத்தல் வேண்டுமேதவிர வேறன்று.

இதற்குமாறுபடச்சிலர்கூறுவர். எங்ஙனமெனிற் காட்டுதும்.

பாறைகடினமாயிருத்தற்கும் மெதுவாயிருத்தற்கும் மத்தியதரமான நிலையொன்று இருத்தல்கூடுமாதலால் இம்மூன்றும்விதி அத்தனைபொருத்தமுடையதன்றென்பர். ஆனால் அவ்விதியோ கடினமுள்ளநிலையையும், மெதுவுள்ளநிலையையும் ஈண்டுக்கூறவரவில்லை. பாறை கடினமுள்ளது அல்லது கடினமில்லாதது என்பதை (அவ்விதி) கூறவந்ததேதவிரவேறன்று. ஈண்டு " கடினமில்லது " என்பதற்குப்பிரதியாக மெதுவுள்ளதுஎன்பதை உபகாரப்படுத்தில் அவ்வாறுஉபகாரப்படுத்துவோர் எதிர்மொழிக்கும், எதிர்மறைமொழிக்குமுள்ளதன்மையறிதலை மறந்தவராவர். கடினமில்லது என்பதே மத்தியநிலையையும் அடக்கிநிற்கின்றதறிக. ஆதலால் இவ்விதி பழுதுபட்டிலது.

(82) அளவினைக்கொண்டு நடைபெறுமொழியாகிய "பெரியது" என்றவார்த்தைக்கு எதிர்மறையாய் "பெரியதல்ல" என்றுதான் தருக்கநூலார் கூறுவர். ஆனால் கணிதநூலாரோ பெரியதல்ல என்பதற்கு சமம் அல்லது சிறிதுஎன்று பொருள்கூறுவார்கள். இதனால் அளவுகொண்டு நடைபெறும்மொழிப்பொருளைத்தருக்கநூலார்கொள்ளுமாற்றையுணர்க.

(83) இனித்தருக்கவொழுங்கிற்குரியமூலவிதிகளைக்கூறுவாம்

(1) இரண்டுஉறுப்புகள்தனித்தனியேமூன்றுவதாகியமற்றோருறுப்பினை ஒத்துநடைபெறில் அவ்விரண்டுறுப்புகளும் தம்முளொத்தவைகளாம்.

(2) இரண்டுஉறுப்புகளில் ஒன்றுமூன்றாவதாகிய மற்றோர் உறுப்பினையொத்தும் மற்றொன்று அதனோடு (மூன்றாவதோடு) ஒவ்வாமலும் நடைபெறில் அவ்விரண்டும் தம்முளொத்தவைகளாகா.

(3) இரண்டுஉறுப்புகள் மூன்றாவதாகிய மற்றோர் உறுப்பினை ஒவ்வாததாகி நடைபெறில் அவ்விரண்டுறுப்புகளும் தம்முள்ஒத்தேனும் ஒவ்வாமலேனும் நடைபெறலாம்.

(84) இவ்விதிகளைக்கீழேகாட்டியமுறையில் விளக்கிக் காட்டுவாம்.

சி ————————

வ ————————

ய ————————

ந ————————

ம ————————

(1) ஈண்டு சிகரவகரக்கோடுகள் யகரத்துக்குச்சமமானவைகளாய் நடைபெறில், சிகரவகரக்கோடுகள் தம்முளொத்தல்காண்க.

(2) சிகரம்வகரத்துக்குச்சமமாயும், நகரம்வகரத்துக்குச் சமமில்லாமலும் நடைபெறில் சிகரம் நகரத்துக்குச்சமமில்லாதிருத்தல்காண்க.

(3) சிகரமகரங்கள் இரண்டும் நகரத்துக்குச் சமமில்லாதவைகளும் தம்முட் சமமில்லாதவைகளுமாயிருத்தல்காண்க. அன்றியும் சிகர வகரங்கள் நகரத்துக்குச்சமமில்லாதவைகளாயும்,தம்முள்சமமுள்ளவைகளாயுமிருத்தல்காண்க.

(85) மேற்கூறியமூன்றுவிதிகளோடுபின் வருவனவற்றையுங் கவனித்தல் நலமாம்.

(1) ஒவ்வாவிரண்டனுளொன்றுதறுமானம்;

(2) தொகுதிக்குள்ளன பகுதிக்குள்ளவே;

*

(3) அங்ஙனமின்றி யிங்ஙனமிருந்த
தெற்றிற்கென்னிற் காரணமின்றி
நிகழாதாகுநெறியோரென்பர்.
எண்ணுமுறையியன் முற்றிற்று.

8. பால்வண்ணமுதலியார்.

---

* நல்லொழுக்கம்.

[ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]
(முதற்பெருகுதி சஅகு-ஆம்பக்கத்தொடர்ச்சி)

ஓர் சாதியாரின் குணங்களை அளவிட்டுப் பார்க்குங்கால், கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டுவது பிரதாபவான்களுடையவற்றை மட்டுமன்று: வெகுஜனங்களுக்குள் தங்கும் ஒழுக்கத்தையும் சேர்த்துப்பார்த்தல்வேண்டும்; உவாஷிங்க்டன் அயர்விங் என்டவர் ஆபட்ஸ்ப்போர்டுக்குச்சென்றபொழுது சர் உவால்டர்- ஸ்காட் என்பவர், தம் பக்கலிலுள்ள நிலச்சுவான்களாகிய தம் நண்பரிட மட்டுமன்று; கூலிச்சனங்களாகிய தம்நண்பரிடத்தும் அன்பரிடத்தும் அவரைக் கூட்டிக்கொண்டுபோயினர். "நம்முடைய உண்மையும் மேன்மையுமுற்ற கபடற்ற ஸ்காட்ச்சனங்களில் சிலரை உமக்குக்காட்ட எனக்குவிருப்பமிருக்கிறது. ஓர்ஜாதியாரிற் சிறந்தஜனங்களையும்சிறந்தகனவான்களையும், சிறந்தஸ்திரீகளையும்வைத்து அச்சாதியாரின் ஒழுக்கத்தை யறியக்கூடாது. நீர் சந்திக்கிற அனைவரும் அப்பேர்ப்பட்டவர்களே. எல்லாவிடங்களிலும், அப்பேர்ப்பட்டவர்கள், மிகநல்லவராகவே யிருப்பர்" என்று ஸ்காட்என்பவர் சொன்னார். இராஜ்யபிரதானிகளும், தத்வஞானிகளும் வைதீகர்களும் ஓர்ஜனசங்கத்தின் ஆலோசனைக்கருவியாயிருக்கின்றனர். கைத்தொழிற்சாலைகள்வைத்துப் புதியநடையைஏற்படுத்துகிறவர்களும், கூலிவேலைசெய்யும்சாதாரணஜனங்களும், தங்கள்தேசத்திற்கு உயிரானபலத்தைக்கொடுத்து, உண்மையுள்ள ஆதாரகருவியாக வேண்டுவது அவசியம். அவர்களிடத்தி

---

* இந்த ஆங்கிலத்தில் ஸ்மைல்ஸ் (Smiles) என்பார் இயற்றிய 'காரெக்டர்' (Character) என்னும் நூலின் மொழிபெயர்ப்பு.

ருந்தே, காலத்துக்குக்காலம் பலமும், ஊக்கமும் அவ்வத்தேசத்தினுக்குக் கூடுதலாகின்றன.

ஒவ்வொருவனும் தன் ஒழுக்கத்தைக் காப்பதுபோல, அந்த ஜாதியாரும் தங்கள் ஒழுக்கத்தைக்காத்தல்வேண்டும். இராஜ்யஅதிகாரம் செலுத்துவதில் ஏறக்குறைய எல்லாவகுப்பினர்க்கும் சுவதந்திரமுள்ள குடியரசுநாடுகளில், அத்தேச ஒழுக்கமானது சிலருடையதினும் அனேகருடைய சன்மார்க்ககுணத்தைப் பொறுத்திருத்தல் அவசியமானது. தனித்தனிமனிதனுடைய ஒழுக்கத்தை விளக்குங்குணங்கள் தாம், ஓர்சாதியாருடைய குணங்களையும் விளக்குகின்றன. அவர்கள் உயர்கருத்தும், உண்மையும், யோக்கியமும்,சற்குணமும், தைரியமுமுள்ளவர்களாயிருந்தாலொழிய மற்ற ஜாதியாரால் இலகுத்வர் அடைந்து உலகத்தில்மதிப்பற்றவராவார். ஒழுக்கத்தைப்பெறுதற்கு, அவர்கள்பெரியோர்பால் அன்பும், ஒழுக்கப்பயிற்சியும், மனஅடக்கமும், கடமையிற்பற்றுமுடையராயிருத்தல் அவசியம். பொன்னையும், உடையையும், போகத்தையுந்தவிர வேறுதெய்வஞானமற்ற ஜாதியார் இழிவான நெறியிற்சேறல் இன்றியமையாமையாம். இவற்றைப்பற்றுவதினும் ஹோமரின் கடவுளரைச்சேர்தல் மாண்பேயாம்; ஏனெனில் அவர்களுடைய தெய்வங்களாவது மனிதருக்குள்ள சற்குணங்களின் அறிகுறிகளாயிருந்தன; அவற்றைக்கவனிக்கச்சிறிதுபயனுண்டு.

மதங்கள் எவ்வளவிற்குநன்றாயிருப்பினும் அத்தேசத்தாருடைய ஒழுக்கத்தின் பிரமாணத்தைப் பாதுகாப்பதிற் பயன்படமாட்டா. தனித்தனி மனிதனும் அவர்களைச்செலுத்து மனக்கொள்கையும்தான், அச்சாதியாரின் நல்லொழுக்கநிலையையும் உறுதிப் பாட்டையும் தீர்மானிக்கின்றன. கடைசிவரை, ஆளப்பட்ட குடிகளைவிட, ஆளும் அரசு சிறந்திருப்பதின்று என்பது சாதாரணமாயிருக்கின்றது. குடிகள், மனச்சாக்ஷி, சன்மார்க்கம், வழக்கம் இவற்றில் பொருத்தமுற்றிருப்பின் அச்சாதியார்யோக்கியமாயும் மேன்மையாயும் ஆளப்படுவர். தெய்வநீதி இராஜநீதிக்கு அடங்காமல் இருதயத்தில் கெடுகுணமும், தன்நயந்தேடலும், துன்மார்க்கமும் உடையவரென்னில், கள்வரும்,கபடநாடகசூத்ரதாரிகளும் ஆளவருவது திண்ணம்.

அநேகர் அல்லது சிலர்கூடிச்செய்யும் கொடுங்கோன்மையை த்தடுப்பதற்குரிய ஒரேகருவியானது, குடிகள் ஒவ்வொருவரும் கற்று ச்சுவாதீனமுடைமையும், தூயநடையுடைமையுமேயாம். இவைகளன்றி, ஓர்சாதியார் பால் ஊக்கமான பௌருஷமாவது உண்மையான சுவாதீனமாவது இருத்தல்கூடாது. இராஜாங்கசுவதந்தரங்கள் எவ்வளவிற்குப்பெருக்கமாய் ஏற்பட்டிருந்தபோதிலும், தனித்தனியேசீர்கெட்டுள்ள ஜனங்களை உயர்வடைவிக்கமாட்டாது. குடிஜனசம்மதத்தால் இராஜ்யஅதிகாரிகள் ஏற்படுத்தும் சட்டமானது, எவ்வளவிற்குப்பக்குவம் அடைந்திருக்கிறதோ, அவ்வளவிற்குப் பூரணமாய் அத்தேசத்தின் ரக்ஷிப்பும், அச்சனங்களின்சத்யமான ஒழுக்கமும், சட்டங்களிலும், இராஜரீகத்திலும் கண்ணாடியிற்போல பிரதிபலிக்கும். ஜனங்களில் ஒவ்வொருவரும் துன்மார்க்கராயிருந்தால் அரசின்நல்லொழுக்கவிதியானது, உறுதியானநிலையையடையமாட்டாது. இழிவான ஜனங்களுக்கு அளித்தசுவாதீனமானது, துன்பமாகமதிக்கப்படும். அவர்களுக்கு அளித்த அச்சுதந்திர சுவாதீனமானது, அடங்காமைக்கும், அருவருக்கும் தீநெறிக்கும், இடங்கொடுத்தலாகும். தனித்தனிமனிதரைப்போலவே அச்சாதியாரும் தாங்கள் ஓர்பிரதாபமான ஜாதியாரைச்சேர்ந்தவரென்றும், அவர்களுடைய பெருமைக்குத்தாங்கள் பிற்பாத்தியஸ்தரென்றும், அவர்களுடைய கண்யத்தைத்தாங்கள் ஸ்தாபிக்கவேண்டுமென்றும் உணர்தலால், ஆதரவையும் பலத்தையும் பெறுகின்றனர். ஒருசாதியார் தாங்கள் சிந்தனைசெய்யவேண்டியதற்கான பெருமைதங்கிய முன்னோரை உடைத்தாயிருத்தல்வேண்டுமென்பது முக்யவிஷயம். அதுபூர்வீகரின்பெருமையான செயல்களையும், மேன்மையான கஷ்டங்களையும், பராக்கிரமமான கர்மங்களையும் நினைப்பூட்டித் தற்காலசனங்களின் ஒழுக்கத்தை உறுதிசெய்து, உயர்த்திரக்ஷித்து, குணப்படுத்தி மேன்மையாக்குகின்றது. ஒவ்வொருமனிதனுடைய ஒழுக்கத்தைப்போல சாதியாரின் ஒழுக்கமானது ஓர்பெரிய அனுபவவைப்பாக நிகழ்கின்றது. அதைப்புத்தியுடன் செலுத்தினல், ஜனங்கள்தேர்ச்சியும், சீர்திருத்தமுமடைவர். அதைப்புத்திஹீனமாய்ச்செலுத்தின் வீண்எண்ணங்களையும், மயக்கத்தையும், தோல்வியையுமுடையவராவர். தனித்தனிமனிதரைப்போலவே, ஓர்சாதியாரும் தெய்வசோதனையான கஷ்டங்களால் துயரா

கிப்பலப்படுகின்றனர். அவர்களுடைய சரித்திரகிரந்தங்களில், சிலமுக்கியமான விடங்களில், அவர்களுடைய ஒழுக்கம் பக்குவமாவதற்கு மூலமாயிருந்தவை கஷ்டங்கள்தான்என்றுவரையப்பட்டுள்ளன.சுவாதீனவிருப்பமும் தேசாபிமான உணர்ச்சியும், அதிகநன்மையை அளிக்கலாம்;ஆனால் உள்ளப்பெருமையுடன் சகித்ததெய்வசோதனையும் கஷ்டமும், எல்லாவற்றையும்விட மிகஅதிகமானநன்மையை அளிக்கலாம். இந்நாளையில், தேசாபிமானம்என்னும் நாமத்துடனுள்ளநடப்பானது சுஜாதி அபிமானத்தையும் சுஜாதிப்புகழ்ச்சியையும் சுஜாதிப்பகையையும் காட்டும்படியான கேவலம் மூடவைராக்கியத்தையும் மனஇடுக்கத்தையும் உடையதாகின்றது. ஆனால் அலறுதலும், அபிநயித்தலும், தன்பலமின்றி உதவிக்காகக்கூச்சிடுதலும், கொடிகட்டுதலும், பாட்டுபாடலுமாகத் தன்னைப்புகழ்ந்துகொள்வதிலும்வெகுகாலத்துக்குமுன்னரேஇருந்துமாண்டுபோன சீர்கேடானகஷ்டங்களையும் தவறுகளையும் வற்புறுத்தித் திரும்பத்திரும்பப்பேசுதலிலும் தேசாபிமானம்காட்டப்படுகிறது. இதுபோன்ற தேசாபிமான உபாதியானது, அத்தேசத்திற்கு நேரக்கூடிய மிகவும்கொடூரமான நிர்பாக்கியங்களில்ஒன்றாகவிருக்கின்றது.

ஆனால் சுதேசாபிமானவிஷயத்தில், இழிவான பாகமுமின்றி சிறந்தபாகமுண்டு. அது, உண்மையுடனும் ஆண்மையுடனும் கடமையைச்செலுத்துகிறமேன்மையானகர்மத்தால், தேசத்தைப்பலப்படுத்திஉயரச்செய்கின்றது; யோக்கியமும், அமைதியும் நேர்மையுமாக வாழும்படிசெய்து, ஒவ்வொருபக்கத்திலும் கிடைக்கிற சந்தர்ப்பங்களைக்கொண்டு, சீர்திருத்தவிஷயத்தில், நல்லவிதமாக உபயோகப்படுத்தும்படி முயலச்செய்கின்றது. மதவிஷயமாயும் சுவாதீனவிஷயமாயும் பாடுபட்டு அழிவற்ற மகிமையடைந்தவர்களும், தாங்கள் பாத்தியமுற்று உரிமையாகப்பெற்ற மதசுவாதீனத்தையும் அரசசுவாதீனத்தையும் தங்கள் ஜாதிக்கு அளித்தவர்களுமாகிய, பூர்வீகமகத்துக்களுடைய ஞாபகத்தையும் நடைமாதிரியையும் விருத்திசெய்வதும் அச்சுதேசாபிமானமேயாம்.

ஓர் ஜாதியாரும், ஓர்மனிதனைப்போலவே ஸ்தூலப்பெருமையால் நிதானிக்கப்படத்தக்கவர் அல்லர். "ஒரு மரத்தைப்போற்பெருத்

துவளர்வதன்று, மனிதனை அதிகநல்லவனாகச்செய்வது". 'பெருமை' என்பது ஸ்தூலப்பெருமை மனப்பெருமை என்னும்வேறுபாடின்றி மயங்குகின்றது. ஓர் ஜாதியாரின் மனப்பெருமைக்கு ஸ்தூலப்பெருமை அவசியமின்று. ஓர் ஜாதியார், தேசவிஸ்தாரத்தையும், ஜனசங்கையையும் உத்தேசிக்கப்பெருமையுற்றும், உண்மையானமனப்பெருமைவிஷயத்தில் வெறுமையுற்றுமிருக்கலாம். இஸ்ரவேல் ஜனங்கள், சொற்பமாயிருந்தும், என்ன மகத்துவமான ஒழுக்கத்தை விளைவித்தனர். மனிதரின் மோக்ஷகதியில் எவ்வளவு வலியசக்தியைச் செலுத்திபிருக்கின்றனர். கிரீஸ்தேசமானது பெரியதேசம் அன்று, அட்டிகாவின் ஜனசங்கைமுற்றும், தென்லாங்காஷயருக்கு மிகவும் குறைவுற்றிருந்தது. ஏதென்ஸ்பட்டணத்தின் குடிகள் நியூயார்க்பட்டணத்துஜனங்களுக்கு மிகவும் சொற்பம். அப்படிக்கிருந்தும், யந்திரநூல், கல்வி, தத்வஞானம், சுதேசாபிமானமாகிய இவற்றில் எவ்வளவு விஞ்சிநின்றனர்.

ஆனால் ஏதென்ஸ்நகரத்தாருக்கு கிரமமான குடும்பமாவது கிருகஙிருத்யமாவது இல்லாமைக்குக்காரணம், அவர்களுக்கு ஏற்பட்ட கோழைத்தனமே. அந்நகரின் பிரபுக்களைவிட அடிமைகள் மிகவும் எண்ணிறந்து இருந்தனர். அந்நகர் அதிகாரிகள், நன்னெறியிற்கெட்டொழிந்துபோகவில்லையெனினும், சோர்வுற்றிருந்தனர். அந்நகரில் மிகவும் கற்றுத்தேர்ந்தமகளிருங்கூட, கற்பழிவுற்றிருந்தனர். ஆதலால் அந்நகரின் அழிவு இன்றியமையாமையாயிற்று. அதன்விருத்தியிலும் க்ஷிணதசை மிகவிரைவுற்றது.

அவ்வாறே உரோம்தேசத்திற்குத் தாழ்வும் அழிவும் உண்டாயதன்காரணம் அக்குடிகள் சமஷ்டியில் நெறிகெட்டும், காமஇன்பத்திலும் சோம்பலிலும் மிகுதியும் விருப்புற்றுமிருந்ததால் என்க. தொழில் செய்வதானது, அடிமைகளுக்குமட்டும் தகுதிபோல, அத்தேசத்தார், பிற்காலத்தில் மதித்துக்கொண்டனர். தங்களுடைய ஆதிமுன்னோரின் ஒழுக்கநெறியை, வியந்துகொண்டாடலை நிறுத்திவிட்டனர். அத்தேசமானது நிலைத்திருக்கும் யோக்கியதை பெருமையால் தாழ்வுற்றது. ஆகையால், ஏதேனும் நன்னெறிவாய்ந்த தொழில்புரிந்து சொட்டுவேர்வையை இழப்பதினும், ஒருவரோடொருவர்

போர்புரிந்து, ஒருதுலாம் இரத்தத்தையேனும் இழப்பார்களென்று பூர்வம் பர்டன் என்பவர் கூறியவண்ணம், சோம்பலும், அளவுகடந்து உண்டு உடுத்தலும் உடையஜாதியார், முடிவிற்கெட்டழிவர். முயற்சியும் ஊக்கமும் உடையோர், அன்னோர் உரிமையைப்பறித்துக் கொள்வர்.

மிகவும் அகன்ற இடமும், நிறைந்த ஜனமுமுடைய பிரான்ச்தேசத்தை ஆளுகைசெய்தும், மிகச்சிறிய தேசமாகிய உலாந்தாவை வெல்லுந்திறமையின்மைக்குக்காரணம் என்னென்று பதினான்காம்லூயிஸ் ஆனவர் வினவியபொழுது, மந்திரியானவர் அளித்தவிடை வருமாறு:—"கனவானே! ஒரு நாட்டின் பெருமையானது, அதன் இடவிரிவினாலன்று; அந்நாட்டாரின் நல்லொழுக்கத்தால் உண்டாந்தகைமையது. சமுகத்தால், அதனைவெல்ல ஒல்லாமைகாண்டற்குக் காரணம் உலாந்தாரின் முயற்சியும் கையிறுக்கமும் ஊக்கமுமேயாம்" ஸ்பின்லோ என்பவரும் ரிச்சார்ட் என்பவரும் 1608-ஞுத்தில் ஹேக் பட்டணத்தில் சமாதான உடன்பிடிசெய்வதற்கு, ஸ்பெயின் அரசரால் தூதர்களாக விடப்பட்டகாலத்தில் ஓர் சமாசாரம் உண்டு. ஏழு எட்டு மனிதர், ஓர் சிறிய படகினின்றும் கரையேறிப்புற்றரிசில் உட்கார்ந்து, ரொட்டி பாற்கட்டி பீர்திராவகம் ஆகியஇவற்றை ஆகாரம் செய்வதை அவ்விருவருங்கண்டு அவ்வழிப்போக்கர் யாவர் என, ஓர் குடியானவனை வினவினர்; அவர்கள் எங்கள் வணக்க உரிமைபூண்ட அரசபிரதிநிதிகளாகிய தலைவர்கள் என்றனன். உடனே ஸ்பின்லோ ஆனவர் 'நாம் இவருடன் சமாதானமாகவேண்டும், வெல்லப்படத்தக்கவர் இவர் அல்லர்' எனத் தன்கூட்டாளியிடம் காதிற்சொன்னார்.

ஆகவே, மதங்களின் உறுதிப்பாடானது ஒழுக்கத்தின் உறுதிப்பாட்டைப் பொறுத்திருத்தல்வேண்டும். சீர்கெட்டமனிதரின் தொகுதியானது ஓர் பெருமையுற்ற ஜாதியாராதல் ஒல்லாது. அச்சனங்கள் மிக நாகரீகம் உற்றவர்போலத் தோற்றலாம். துன்பகாலம் தொடப்புகின், துண்டுபட்டுச் சிதறுண்ணத் தகுவர். ஒவ்வொரு மனிதனும் உண்மையிலனேல், அச்சாதியாருக்கு பலமும், ஒற்றுமையும், திடமுங்கிடையா. அவர்கள் செல்வமும்உபசாரகுணமும், கைத்தொழில் வித்தையும், உடையராயிருப்பினும் கேட்டின் அருகே உலவா

நிற்பர். ஓர் ஜாதியாரில் ஒவ்வொருவரும் தத்தமது வயிற்றையே நிரப்பி, காமஇன்பமன்றி வேறு கருத்திலராய்த் தமக்குத் தாமே சிறுதெய்வமாகஇருப்பரேல், அச்சாதியார் நிர்பாக்கியமுற்று அழிவதில்தடையின்று.

ஓர் தேசத்தாரது மொத்த ஒழுக்கமானது காவாமற், கைவிடப்பட்டவிடத்தே அவர் அழிந்துபோனவராகவே மதிக்கப்படுவர். உண்மை, யோக்யம், வாய்மை, நீதி இவற்றின் அருமை உணர்ந்து அனுஷ்டிக்கத்தவறினவர், நீடித்திருக்க உரிமையிலராகின்றனர். ஓர்தேசத்துஜனங்கள், செல்வத்தால் சீர்கெட்டும், போகவின்பத்தால் தாழ்வுற்றும், கக்ஷிகளால் கலக்குண்டும், கண்யம், ஒழுங்கு, பணிவு, கற்பு, நீதி என்பன அவைகளுடைய முன்னோருக்குரியன என்னும்படியான காலமானது அத்தேசத்திற்கு நேரிடும்பொழுது, அவ்வஞ்ஞானாந்தகாரத்தில், நல்லோர் சேஷித்திருப்பரேல் அவர் ஒருவரோடொருவர் அரிதிற்கூடி, இரக்கமுற்று, அத்தேசத்தான் ஒவ்வொருவனுடைய ஒழுக்கத்தையும் சீர்செய்து உயர்த்துவதிற்றான் பூரணநோக்கமுடையவராவர். அவ்வழியால்தான் ஓர் தேசமானது காக்கப்படும். ஒழுக்கமானது, திருந்தாவாறு கெட்டிருக்குமேல், அத்தேசத்தைக் காப்பதற்குரிய கருவி யாதொன்றும் இன்றென்பது உண்மை.

முதல்அதிகாரம்—நல்லொழுக்கத்தின்வியாபகசத்திமுற்றும்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:

பிரதமவித்தியாப்பியாசப்பிரகடனம்.

(௩0௨-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

1901-ஷ ஸிம்லாவில் வித்தியாவிசாரணைத்தலைவர்கள் ஸபை கூடிப் போதனாப்பியாஸ பாடசாலைகளைச் சீர்திருத்துவதைப்பற்றி ஆலோசனைசெய்தபொழுது, போதனாப்பியாஸமுறையோடு ஸாதாரணமாய்ப் பிள்ளைகள் படிக்கும் விஷயங்களையும் உபாத்தியாயர் போதனாப்பியாஸ பாடசாலைகளிலே நன்றாகக் கற்றுக்கொள்ளவேண்டியதற்காக, பிரதமவித்தியாப்பியாஸபாடசாலை உபாத்தியாயர்கள் ஒரு வருஷத்திற்குப் பிரதியாக இனி இரண்டு வருஷம் பயிலவேண்டுமென்பதும், போதனப்யாஸ பாடசாலையில் அவர்கள் சேருவதற்குப் பிரவேசபரீக்ஷை ஏற்படுத்தவேண்டுமென்பதும், எழுத்துப்பரீக்ஷை கொடுத்தானபிறகு மூன்று வருஷகாலப் பாடசாலைகளில் படித்துப் பழகியபின்பே போதனாப்பியாஸ அனுபவ பரீக்ஷை செய்யப்படவேண்டுமென்பதும், போதனப்யாஸ பாடசாலையில் பயிலுங்காலத்தில் அவர்களுக்குச் சம்பளவிஷயத்தில் அனுகூலமுண்டாக்கவேண்டுமென்பதும், போதனப்யாஸ பாடசாலையைச்சேர்ந்த சிறுபிள்ளைப்பாடசாலையே பிரதமவித்தியாப்பியாஸ பாடசாலைக்கு மேல்வரிச்சட்டமாயிருக்கவேண்டுமென்பதும் முக்கியமாய் ஆலோசிக்கப்பட்டன.

அப்பொழுது அந்த ஸபையார்செய்த தீர்மானங்களில் சில ராஜாங்கத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டு அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இந்த ஏற்பாடுகள் பூர்ணமாய் அங்கீகரிக்கப்படுவதையெதிர்பார்த்து, பிரதமவித்தியாப்பியாஸ பாடசாலை உபாத்தியாயர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற நான்காவது வகுப்புப்பரீக்ஷைகொடுத்த யோக்கியதை போதாதென்று, போதனப்யாஸ பாடசாலையில் ஸாதாரணமான படிப்புவிஷயங்களைக் கற்றுக்கொள்ளுவதற்காக, ஐந்தாவதுவகுப்புப் பரீக்ஷைபோன்று பரிசோதனையாக நடத்தப்பட்டுவருகிறது.

1. இப்போதுள்ள பிரதமவித்யாப்யாஸ பாடசாலை உபாத்தியாயர்களில், போதனாப்யாஸ பாடசாலையில் பயின்று யோக்கியதா பத்திரம்பெற்றவர்கள் 6252.

2. போதனாப்யாஸப்பாடசாலையில் பயிலாது யோக்கியதாபத்திரம்பெற்றவர்கள் 1125.

3. போதனாப்யாஸ பாடசாலையில் பயிலாமலே நெடுநாள் உபாத்தியாயராயிருந்ததுகாரணமாக யோக்கியதாபத்திரம் பெற்றவர்கள் 5023.

4. பிரதமவித்யாப்பாஸ பரீக்ஷையில்மட்டும் தேறி உபாத்தியாயர்களாயிருப்பவர்கள் 9298.

5. யாதொரு பரீக்ஷையுமில்லாமலே உபாத்தியாயர்களாயிருப்பவர்கள் 3639.

இங்கே மேல்மூன்றாவது வகுப்பிற்கண்ட அனுபவத்தேர்ச்சியுள்ள உபாத்தியாயர்கள் சிறந்த உபாத்தியாயர்களேயாகையால், அவர்களை நாம் அங்கீகரித்துக்கொண்டாலும், அவர்கள்போக இன்னும் 13000- உபாத்தியாயர்கள் உதவியற்ற உபாத்தியாயர்களாயிருக்கிறார்கள். நாளளவிலே அவர்களைநீக்கி அவர்களுக்குப்பிரதி பழகியநல்ல உபாத்தியாயர்களை நியமிக்கவேண்டுமென்று, வித்யாவிசாரணைத்தலைவர் அபிப்பிராயப்படுகிறார்.

18. ஒழுங்கில்லாத பரீக்ஷை.

பாடசாலைப்பரீக்ஷையாவது ஒரு ஸபையாருடைய ஆதீனத்திலிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு பரீக்ஷகர் ஸபை ஏற்பட்டு அதில் ஒருவர் அக்ராஸனாதிபதியாயிருப்பார். அவருக்கு பரீக்ஷைச்செலவுக்காக வருஷவாரி இவ்வளவென்று நானூறோ ஐந்நூறோ மொத்தமாகப் பணம் கொடுக்கப்படும். அவர் ஒரு கிராமத்திற்குப்போய்ச் சுற்றுப்புறத்துக் கிராமங்களிலுள்ள பிள்ளைகளையெல்லாம் அவ்விடத்திற்கு வரவழைத்து, அங்கே தமக்கு ஸகாயமாய் உதவிபரீக்ஷகர் இரண்டொருவரைச் சேர்த்துக்கொண்டு ஏககாலத்தில் பிள்ளைகளை நூற்றுக்கணக்காகக் கூட்டம்கூட்டிச் சொற்பகாலத்

தில் பரீக்ஷிப்பார். அந்தக்காலத்தில் தாம் பார்த்துப் பரிசோதிக்கும் வருத்தமில்லாத எளிய கேள்விகளையே கேட்டு ஒருதிட்டமாய்ப்பிள்ளைகளுக்கு எண்கொடுத்துவிடுகிறார்கள். திரளான பலகைகளை ஏககாலத்தில் திருத்தும்படிநேர்ந்தால் வெகுவாய் இப்படித்தான் நடக்கும். பரீக்ஷை இப்படியாகிறபோது, இந்தப் பரீக்ஷையில் என்னவிஷயம் கேட்கப்படுமோ, அதையே உபாத்தியாயர் பிள்ளைகளுக்குக்குருட்டுப்பாடம் பண்ணிவைக்கிறார்களென்பது ஓர் ஆச்சரியமன்று.

19. இப்பொழுது நூதனமாக ஏற்பட்ட பரீக்ஷைமுறை.

பாடசாலை ஏற்பட்டிருக்கும் ஸ்தானத்திலேயே பிரதமவித்தியாப்யாஸ பரீக்ஷை நடத்தப்படவேண்டுமென்று இந்தியாதுரைத்தனத்தார் விதித்திருக்கிறார்கள். இது பாடசாலைப் பரீக்ஷையேயாகி வருஷவாரி செய்யும் பாடசாலை விசாரணையின் ஒருபகுதியாகிவிடுமாகையால், வெளிவித்தியார்த்திகளுக்கு இந்தப்பரீக்ஷையில் பிரவேசிக்க இடமில்லாமல் போய்விடுகிறது. வித்தியாவிசாரணைத் தலைவரது அபிப்பிராயப்படி இந்தப் பரீக்ஷையின் பிரயோஜனங்களாவன:—(1) சற்றேறக்குறைய எல்லாப்பிள்ளைகளும் பாடசாலையில்சேர்ந்து ஐந்துவருஷகாலம் படிக்கவேண்டும்; (2) பிள்ளைகளும் உபாத்தியாயர்களும் அந்த வருஷங்களை நன்றாகப் படிப்புக்கு உபயோகப்படுத்தவேண்டும்; (3) முன்வருஷங்களில் உபேக்ஷைசெய்து கடைசிவருஷத்தில்மாத்திரம் உபாத்தியாயர் படிப்பிக்க சிரமம் எடுத்துக்கொள்ளாமல் ஐந்துவருஷகாலமும் ஒரே தன்மையாய் ஊக்கத்துடன் பிள்ளைகளுக்குப் போதிப்பிக்கவேண்டும்; (4) பரீக்ஷை கொடுத்து யோக்கியதாபத்திரம் பெறவேண்டுமென்கிற ஒரே உத்தேசத்தோடு பிள்ளைகள் "குருட்டுப்பாடம்பண்ணுகிற" வழக்கத்தைத் தடுக்கவேண்டும் என்பவைகளாம்.

இதுவரையில் இந்தப் பரீக்ஷை (1) பிள்ளைகள் பாடசாலையை விட்டுப்போக விடுதிப்பத்திரிகை பெறுவதற்காகவும், (2) போதனப்யாஸ பாடசாலையில் பிரவேசிக்கவும், (3) இராஜாங்கத்துத் தாழ்ந்த உத்தியோகங்களில் பிரவேசிக்கவும் தகுந்த யோக்கியதை உண்டாவதற்காகவும் நடத்தப்பட்டுவந்தது. இப்பொழுது ராஜாங்கத்துளந்த

விதமான உத்தியோகத்திலும் பிரவேசிக்க, இந்தப்பரீக்ஷை தகுந்த யோக்கியதையாகமாட்டாது என்று ராஜாங்கத்தார் கண்டிப்பாய் விலக்கியிருக்கிறார்கள். இது தேசத்தார்செய்த பெரிய பாக்கியமே. போதனாப்பியாஸ பாடசாலையில் பிரவேசிக்கவும் இது யோக்கியதை ஆகமாட்டாது என்று விலக்கிவிட்டால் பிள்ளைகளுக்குப் பெரிய நன்மைசெய்ததாகும்.

சென்றவருஷம் வித்தியாபிவிருத்தி இவ்வளவாயிற்றென்று குறித்துப் பிரசுரஞ்செய்த ராஜாங்கத்து விளம்பரப் பத்திரிகையில், பிரதமவித்தியாப்யாசத்தை விருத்திபண்ணுவதற்காகவும், அந்தந்தக் கிராமத்திலேயே பிரதமவித்யாப்யாச பரீக்ஷை நடத்தவேண்டுமென்பதற்காகவும், உதவிஇன்ஸ்பெக்டர்களுக்குக் கீழுதவியாக 62-பேர் விசாரணைகர்த்தர்கள் நியமிக்கப்பட்டதாகவும், அந்த நியமனம் இந்தியா கவர்ன்மெண்டாராலும், இங்கிலாந்திலுள்ள இந்தியாராஜ்யபரிபாலன காரியதரிசியவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டதாகவும் கண்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் பரியாலோசிக்கும்பொழுது, இக்காலத்திலுள்ள வித்யாப்யாஸமுறை சிறுபிள்ளைகளை விருத்திக்குக்கொண்டு வருவதற்குப் பதிலாக அறியாமையாகிய இருளில் அழுத்திவிடுகிறதென நன்றாக விளங்கும். ஆகையால் இப்படிப்பட்ட அஞ்ஞானாகாரத்திலிருந்து வெளிவருங் குழந்தைகளுக்கு ஞானக்கண் திறந்துவிடுவது வித்யாபிவிர்த்தியில் ஆஸ்தையுள்ள ஒவ்வொருவருக்கும் முக்கியமான கடமையாம். இந்தப்பிள்ளைகளே பிற்காலத்தில் தேசோபகாரிகளான பெரியோர்களாகவேண்டுமாகையால், நாம் இச்சிறுவர்களை இப்பொழுது நன்றாகப் படிப்பித்து விருத்திக்குக்கொண்டுவந்தால், அடுத்த தலைமுறையில் அஞ்ஞானம் இத்தேசத்தைவிட்டு அநேகமாக நீங்கிவிடுமல்லவா ?

20. நமது ராஜப்ரதிநிதியாகிய கர்ஸன்பிரபு அவர்கள் இந்த அறியாமையைப்பற்றிச் சொல்லியது.

“ இந்தியாவிலே பெரிய அபாயத்திற்கு இடமாயிருப்பது எது? ஸந்தேகம், மூடபக்தி, கலகங்கள், குற்றங்களாகிய இவைகளும், பயி

ர்த்தொழிலாளிகளுக்குள்ள அதிர்ப்தியும், லக்ஷோபலக்ஷம் பிரஜைக ளுக்குள்ள ஸங்கடங்களும் எதனால் உண்டானவை? அறியாமையா லல்லவா? இந்த அறியாமையைப் போக்குவதற்கு நல்ல ஔஷத மென்ன? ஏற்ற அளவான கல்விப்பயிற்சியேயன்றோ? நாம் உல கத்தில் எவ்வளவுக்கெவ்வளவு படிப்பை விருத்திபண்ணுகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு பிரஜைகள் ஸௌக்கியமடைந்தவர்களாகித் தேசத்துக்கு உபகாரிகளாவார்" என்பதாம்.

21. டாக்டர் போரன்துரையவர்களுடைய நாட்டுப்பள்ளிக்கூடங்களைப்பற்றிய விளம்பரம்.

இத்தேசத்தில் இக்காலத்திலுள்ள பிரதமவித்யாப்யாஸ பாட சாலைகளைப்பார்க்கிலும், இத்தேசத்து, ஸமுதாயஜனங்களுடைய தே வைகளுக்கு மிகவும் அனுகூலமானவைகளாய்ப் புதுமாதிரியான வித் யாப்யாஸ பாடசாலைகள் ஸ்தாபிக்கும்படி உத்தேசிக்கப்பட்டிருக்கி றது. மற்றத்தேசங்களிற்போல இந்த இந்தியாவிலே நாட்டுக்கும் நகரத்திற்கும் வித்தியாஸம் அத்தனை அதிகமாகக் காணப்படவில்லை. நாட்டுப்பாடசாலையாவது, தங்களுக்கு அவசியமான சிறிதளவுமாத் திரமே கற்று அதற்குமேல் கற்கமுயலாதவர்களுக்கு உபயோகமா கும்படி ஏற்பட்ட பாடசாலையாம். இப்பொழுதுள்ள பரீக்ஷைவே தன பாடசாலைகளெல்லாம் இப்படிப்பட்ட நாட்டுப்பாடசாலைகளாக வேண்டும்; இவைகளன்றியும் பல ஜில்லாக்களில் இன்னும் அநேகம் நாட்டுப்பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டும். இந்தப்பரீக்ஷை வேதன பாடசாலைகள் திரவியஸகாயம்பெற்ற பாடசாலைகளல்ல; ஏ னென்றால், இந்தப்பாடசாலைகளுக்கு உபாத்தியாயர்களே மேல்விசா ரணைக்கர்த்தர்கள்; பிள்ளைகள் கொடுக்கும் வேதனமும், பரீக்ஷைவே தனமுமே அவர்களுக்கு முக்கியமான வரும்படி. அப்படிப்பட்ட பாடசாலைகள் இப்பொழுது ஏழாயிரம் (7000) இருக்கின்றன. இப் படிப்பட்ட நாட்டுப்பாடசாலைகளை லோகல்பண்டு போர்டாருடைய மேல்விசாரணையில் வைத்துக்கொண்டு மாதம் இவ்வளவென்று உபா த்தியாயருக்கு வேதனமும், அதனோடு படிக்கும்பிள்ளைகளில்தலைக்கு இவ்வளவென்று தலைச்சம்பளமும் ஏற்படுத்திக்கொடுத்தால் நல்ல தென்று வித்யாவிசாரணைத்தலைவர் அபிப்பிராயப்படுகிறார். பாட

சாலையின் யோக்கியதைக்குத்தகுந்தபடி வேதனத்தை உயர்த்தவும் குறைக்கவும் அதிகாரமுண்டு. பிள்ளைகள் கொடுக்கும் வேதனத்தை உபாத்தியாயர் நேராகவே பெற்றுக்கொள்ளலாம். பிள்ளைகள் எந்தவிதமான ஜீவனம் செய்யவேண்டுமோ, அதற்கேற்றதான படிப்பு பாடசாலையில் சொல்லிவைக்கவேண்டும். வித்யாப்யாஸ முறையில் சொல்லியபடி உபாத்தியாயர் நிர்ப்பந்தப்பட்டு நடக்கவேண்டியதில்லை. பிள்ளைகளுக்கு இன்னவிஷயம் நன்றாகக் கற்பிக்கவேண்டுமென்பதை பரீக்ஷிக்கவரும் உத்தியோகஸ்தர்களும் உபாத்தியாயர்களுமே தேர்ந்தெடுத்துக்கொள்ளும்படி இடங்கொடுத்திருக்கிறது.

(இன்னும் வரும்.)

சே. இராஜகோபாலாசாரி,

---

*கால்நடையின் உணவுப்பயிர்கள்.

(Fodder crops.)

மாடுகளுக்குத் தீனியாகப் பச்சையாய் உபயோகப்படுத்தும்படியானபயிர்களில் முக்கியமானவை கொள்ளு, சணல், சோளம், பயறுகள், கிளிப்புல்.

நன்செய்நிலங்களில் நன்செய்சாகுபடியானபிறகு போடக்கூடியபயிர்கள் கொள்ளு சணல் பயறுகள்.

கொள்ளு:—நெல் அறுவடையாகிறதற்கு ஒருவாரத்திற்கு முன் நிலத்திற்கொஞ்சம் ஈரமிருக்கும்பொழுது ஓர் ஏக்கராவுக்கு ஏறக்குறைய பட்டணம்படியால் பதினைந்துபடி அளவுள்ள கொள்ளை சமமாக நிலத்தில் விதைத்தால் நிலத்திலிருக்கிற ஈரத்துடன் இரவிற்பெய்கிறபனியும்சேர்ந்து கொள்ளை நன்றாய் முளைக்கும்படிசெய்து பயிராகச்செய்யும். நிலத்தில் களைகள் அதிகமாகஇருந்தால் இரண்டொருதடவை களைகளை யெடுக்கவேண்டும். அறுபது எழுபது நாளையில்

---

* இவ்வியாசம், மதுரை ஜில்லா 'விவசாய-கைத்தொழிற் சங்க'த்தாருக்காக மேலூர் டிப்டிகலெக்டர் ஆபீஸ் ஸ்ரீமத்-நாராயணசாமி ஐயரவர்களால் எழுதப்பெற்றது.

கொள்ளுப்பழுக்க ஆரம்பிக்கும். இந்தசமயத்தில் அறுத்து அந்தவிடத்திலேயே இரண்டுமூன்றுநாள் உலரப்போடவேண்டும். பச்சையாயிருக்கும்பொழுது கசப்பாய்இருக்குமாகையால், மாட்டுக்குத்தீனியாகஉபயோகிக்கக்கூடாது. மூன்றுநாள் காய்ந்ததின்மேல் உபயோகிக்கலாம். கொஞ்சங்கொஞ்சமாக மாடுகளுக்கு வேண்டிய அளவு அறுத்து உலரப்போட்டு உபயோகப்படுத்திக்கொள்ளலாம். கொள்ளும்பயறுகளும் நிலத்தில் பயிரிடுவதினால் நிலத்தின் பூசாரசக்தி அதிகரிக்கும். அடுத்தவருஷம்சாகுபடியாகும்பயிரை நன்றாய்விளையச்செய்யும்.

சணல்:—இதையுங் கொள்ளுமாதிரியாக நிலத்தில்ஈரமிருக்கும்பொழுதே சுமார்இருபதுபடி அல்லதுஅறுபதுராத்தல் இடையுள்ள விதையை விதைத்தால் மாடுகளுக்கு நல்லதீனியாகும். இதைச்சரியாக அறுபதுநாளில் அறுத்துப்போடலாம். இதையும் அறுத்தவுடன் வயலிலே இரண்டுநாள்காயப்போட்டு உபயோகிக்கவேண்டும்.

புன்செய்நிலங்களில் கொள்ளும் சோளமும் கிளிப்புல்லும் போடுவதுநலம். இவைகளில் கொள்ளுக்குஅதிகஈரம் வேண்டியதில்லை. கிளிப்புல்லுக்கு முதலில் ஒருமாசத்திற்கு ஈரம்வேண்டும். சோளம் மழைகாலங்களில் நன்றாய்ப்பயிராகும்.

கோள்ளு:—நிலத்தை இரண்டொருதடவை உழுதுபோட்டு ஈரம் போதுமானதாய் இருந்தால் உடனேவிதைத்துப்போடலாம். இல்லாவிடில் மழைபெய்து நிலம் கொஞ்சம் ஈரமாய் இருக்கும்பொழுது கொள்ளைவிதைத்து மறுபடியும் உழுதுவிட்டால் நன்றாய் முளைத்து வளர ஆரம்பிக்கும்.

முன்சொல்லியபிரகாரம் வேண்டுமானால் களைபிடுங்கவேண்டும். மற்றச்சங்கதிகளும் முன்சொல்லியமாதிரியே. ஒருவருஷத்தில் இப்பயிரை சுமார் நான்குதடவை பயிரிடலாம். ஒருதடவை ஓர் ஏகராவில் பச்சைப்பயிராக சுமார் 5000-ராத்தல் கிடைக்கும்.

கிளிப்புல்:—இதுமேடான தண்ணீர்தங்காத இடங்களில் நன்றாய்விளையும். கோடைகாலங்களில் இரைகிடைக்காதசமயத்தில் கிளிப்புல்லுள்ளவயல்களில் மாடுகளைமேய்க்கலாம். இரண்டுமூன்று வருஷத்துப்பயிரிலிருந்து நாற்றுகள்எடுத்து நிலத்தை நான்கு அல்லது

ழுந்துதரம் உழுது மூன்றடிக்கொன்றாக இரண்டிரண்டு நாற்றுகளைச் சேர்த்து நடவேண்டும். இதை மழைக்காலங்களிற்போடுவது நலம். இதைமூன்றுமாதத்திற்கு ஒருதடவை அறுக்கலாம். இது கோடைகாலங்களில் மழையேஇல்லாதிருக்கும்பொழுதுவாடினமாதிரியாய்த்தோன்றினபோதிலும் ஒருமழைபெய்தவுடன்நன்றாகவளரும். இதைவயலிலே மூன்றுவருஷம் வரைவைத்திருக்கலாம். இரண்டாவது மூன்றாவது வருஷங்களில் அந்தக்கொத்துகளிலிருந்து மூன்று பாகத்தை எடுத்துவிட்டு நாலாவது பாகத்தை மாத்திரம்விட்டுவைத்தால் இந்தப்பாகம் நன்றாய்ப்பெருத்துவளரும்.

சோளம்:—இதையும் ஜூலை ஆகஸ்டுமாதங்களில் நிலத்தை மூன்று நான்குதடவை உழுது ஏகராவுக்கு உத்தேசம் இருபதுபடிவிதை விதைக்கவேண்டும். இதற்குஎருப்போட்டால்நன்றாய்வளரும். இதை இரண்டுமாதத்தில் பூத்தபிறகு அறுக்கலாம். நிலத்திலிருந்து அரைப்பிடிவிட்டு அறுத்தால் நிலத்திலுள்ள கட்டைப்பயிர்கள் மறுபடியும் தண்ணீர்விட்டாலாவது மழைபெய்தாலாவது வளரும். இன்னும் இரண்டுமாதத்தில் மறுபடியும்இதேமாதிரியறுக்கலாம். இவ்விதம்புன்செய் நிலங்களில் மழையின் உதவியைக்கொண்டே மூன்று தடவை அறுத்துப்பச்சையாகவே உபயோகிக்கலாம். இனிக்காக இருங்குச்சோளம் அல்லது கருஞ்சோளத்தைப்போடுவதுநலம். ஏனெனில் இதுஎல்லா நிலங்களிலும் விளையக்கூடாதது.

௨

கடவுள் துணை.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து ஐந்தாம் வருஷோற்சவக் கூட்டம்.

அமிழ்தினுமினிய தமிழ்மணங்கமழ்வதும், பழமையும் பெருமையும் படைத்ததுமாகிய இம்மதுரைமாநகரில் ஸ்தாபிக்கப்பெற்ற நம் தமிழ்ச்சங்கம் தனது பலவகைப்பட்ட துறைகளினுஞ்செழிப்புற்று 1906-ஞ மேமீ 24-௳ அன்று ஐந்தாவதாண்டு நிறைவுபெற்று விளங்கியது. இவ்வருஷோற்சவத்தைக் கொண்டாடிக் களித்தற்பொருட்டு, வழக்கம்போலவே, தமிழகத்திற் பற்பலவிடங்களிலிருந்தும் வந்த சங்கத்தின் அங்கத்தினராய வித்துவான்களும் ஏனைத்தமிழபிமானிகளும் சங்கத்தலைவர் ஸ்ரீமாந் - பொ. பாண்டித்துரைத் தேவரவர்களால் நல்வரவு கூறி உபசரிக்கப்பெற்றார்கள். இவ்வுற்சவம் நடத்தற்கென்று குறிக்கப்பட்டு, பல அலங்காரங்கள் செய்யப்பெற்றுவிளங்கிய சேதுபதி ஹைஸ்கூல் விக்டோரியா மண்டபத்திலே 24-௳ மாலை 4-மணிக்கு, ஒன்றுகூடியவர்க்கெல்லாம் முதலிற் சிற்றுண்டி பானகமுதலியன வழங்கப்பெற்றன. அதன்பின் அனைவரும் அம்மகாசபையில் கூடி அற்புதக்காட்சியளித்தார்கள்.

அம்மகாசபையில் சங்கத்தலைவராகிய தேவரவர்கள் எழுந்து, அச்சபைக்கு அக்கிராசனம் வகித்தற்பொருட்டு முன்னரே வேண்டப்பட்டிருந்தபடி, அங்கு விஜயஞ்செய்திருந்த மஹாமஹோபாத்தியாயர் ப்ரஹ்ம ஸ்ரீ: வே. சாமிநாதையரவர்களது தமிழ்க்குழைக்கும் திறமைமுதலிய அருமைபெருமைகளைப் புகழ்ந்துபேசி, அவர்களை சபாநாயகம் வகிக்கவேண்டினார்கள். ஐயரவர்கள், அவ்வாறே சபாநாயகம் வகிக்க, முதலில், திருவாரூர்த்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் - சர்

தானமையங்காரவர்களாலும் சங்க கலாசாலை மாணவராலும் தெய்வ வாழ்த்தாகத் தேவாரந் திருவாய்மொழிப்பாசுரங்கள் இனிய குரலுடன் ஓதப்பெற்றன. பின், சபாநாயகரது ஆரம்பப்பிரசங்கம் சிறிதாயினும் மகிழ்ச்சி பெரிதளித்தது. அதுமுடிந்ததும் சங்க காரியதரிசி ஸ்ரீமத்-டி. வி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B. A., B. L., அவ்வுற்சவத்துக்கு வரமுடியாமைபற்றி எழுதியன்புகாட்டிய அடியிற்கண்ட கனவான்களது தந்திகளையும் கடிதங்களையும் குறிப்பித்தார்கள்.

தந்திகளனுப்பினோர்.

1. தஞ்சைத் தமிழ்ச்சங்க காரியதரிசி.
2. ஸ்ரீமத்-அஷ்டாவதானம் - பூவை—கல்யாணசுந்தரமுதலியாரவர்கள், சென்னை.
3. ,, வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள், ரங்கூன்.
4. ,, மேலகரம்-சுப்பிரமணியக் கவிராயரவர்கள், கொல்லம்.
5. ,, வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள், தூத்துக்குடி.

கடிதங்களெழுதினோர்.

6. ,, V. J. தம்பிப்பிள்ளையவர்கள், M. R. A. S., கொழும்பு.
7. ,, காஞ்சி- உருத்திரகோடீசுரரவர்கள், சென்னை.
8. ,, ஆ. பிச்சையிபுராஹீம் புலவரவர்கள், திருச்சிராப்பள்ளி.
9. ,, சிற்—கைலாசபிள்ளையவர்கள், கொழும்பு.
10. ,, ப.அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள், தரங்கம்பாடி
11. ,, அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள், யாழ்ப்பாணம்.
12. ,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள், யாழ்ப்பாணம்.
13. ,, T. இராமலிங்கம் செட்டியாரவர்கள். B. A., B. L., கோயம்புத்தூர்.
14. ,, S. P. நரசிம்மலு நாயுடுகாரு, கோயம்புத்தூர்.
15. ,, வெ. சதாசிவச் செட்டியாரவர்கள், திருச்சிராப்பள்ளி.
16. ,, தண்டலம்-பாலசுந்தரமுதலியாரவர்கள், ரங்கூன்.
17. ,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், தெல்லிப்பழை.

பின்பு, சங்கத்தின் ஐந்தாவதாண்டறிக்கை, காரியதரிசியவர்களாற்படிக்கப்பெற்றது. அவ்வறிக்கையின்பேரில், ஸ்ரீமத் - J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள், B. A., B. L, ஸ்ரீமத்- V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள், ஸ்ரீமத் - அப்பாவு செட்டியாரவர்கள்—இம்மூவரும் உசிதமான சிற்சில விஷயங்களை எடுத்து மொழிந்தார்கள். இத

ளையடுத்து, சென்றவாண்டினடந்த சங்கத்துத்தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தங்கப்பதக்கம் பெறற்குரிய மாணாக்கரிருவர்க்கும் சபாநாயகரால் நேரில் பரிசு அளிக்கப்பெற்றன. இவையெல்லாம் முடிவுபெற்றதும், சபாநாயகராகிய மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீ: வே. சாமிநாதையரவர்கள் எழுந்து, செந்தமிழணங்கின் சீருஞ்சிறப்பையும் பற்றிப் பற்பல அரிய விஷயங்களைச் சபையோர் மகிழக்கூறி, அத்தமிழை வளர்த்துவரும் தேவரவர்களது அரிய செய்கைகளைப் புகழ்ந்து கூறியதுடன், அவர்கள் முயற்சியில் எல்லாருந்துணைபுரிய முந்தவேண்டுமென்றும், மதுரைவாசியாய்த் தமிழ்க்கடலுண்டு அரிய பெரிய உரைகளெழுதி அழியாப்புகழ் நிறுவிய ஆசிரியர் நச்சினார்க்கினியரது உபகாரத்தைக் குறிக்கத்தக்க ஓர் அடையாளம் இந்நகரில் அமைக்கப்படவேண்டுமென்றுங் கூறினார்கள். இவற்றைக்கேட்ட சபையோரில் அடியிற்கண்ட கனவான்கள் தமிழ்ச்சங்கத்தின்பொருட்டு, உதவினார்கள்.

			ரூ. அ. பை.
1.	ஸ்ரீமத் -	கோபாலசாமி ரகுநாத ராஜாளியாரவர்கள், அரித்துவாரமங்கலம்.	50—0—0
2.		திருச்சிச் சைவசித்தாந்த சபையார்.	3—0—0
3.		மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்தார்.	2—0—0
4.	ஸ்ரீமத்-	குன்னூர்ச் சொக்கலிங்கம்பிள்ளையவர்கள்.	5—0—0
5.	,,	அரங்கசாமிநாயகரவர்கள், சென்னை.	5—0—0
6.	,,	மு. சாம்பசிவநாயனாரவர்கள், சாலியமங்கலம்.	3—0—0
7.	,,	உலகநாதபிள்ளையவர்கள், தஞ்சை.	3—0—0
8.	,,	கீழக்கரை- கா. அ. மஹமது அலியாரவர்கள்,	5—0—0
9.	,,	இராமநாதபுரம்பஞ்சாக்ஷரம்சேர்வைகாரரவர்கள்	2—0—0
10.	,,	முத்துச்சாமிநாட்டாரவர்கள், நடுக்காவேரி.	5—0—0
11.	,,	சோழவந்தான்- சண்முகம்பிள்ளையவர்கள்.	தங்கக்காப்பு
12.	,,	டி. லக்ஷ்மணபிள்ளையவர்கள், திருவனந்தபுரம்	5—0—0
13.	,,	மேலக்கோட்டை- சைவசித்தாந்தசபையார்.	1—0—0
14.	,,	M. N. சேஷையரவர்கள், சேதுபதிஹைஸ்கூல் மதுரை.	5—0—0
15.	,,	வயி. நாக. இராமநாதஞ்செட்டியாரவர்கள்.	20—0—0
16.	,,	மார்க்கயங்கோட்டை-பழனிசாமிஆசாரியவர்கள்.	5—0—0
		தங்கக்காப்புடன்—ஆ ரூ	119—0—0

வாக்களித்தவர்கள்.

1. ,, பரமேசுவர பட்டரவர்கள், 2—0—0
2. ,, சோதுகுடி- அப்துல்காதிறுராவுத்தரவர்கள். 15—0—0

சபாநாயகரவர்களது பிரசங்கமுடிந்ததும், சங்க அக்கிராசனாதிபதியவர்கள் எழுந்து, தம் வேண்டுகோட்கிணங்கி, சபாநாயகம் வகித்து ஐந்தாம் வருஷோற்சவத்தைச் சிறப்பித்த ஐயரவர்கட்கு நன்றி கூறி மாலைசூட்டி மகிழ்ந்ததுடன், சோதுகுடி, மகா-ா-ா-ஸ்ரீ M. K. M. அப்துல்காதிறு ராவுத்தரவர்களால் பாமாலையுஞ் சூட்டப்பெற்றது. அப்பாக்களின் அச்சிட்ட பிரதிகள் பலர்க்குங்கொடுக்கப்பட்டன. அவைவருமாறு:—

ஆசிரியவிருத்தம்.

மருதவளஞ் செறிகுடந்தை மாநகர்க்கு மாமகத்தால் வருமாண்பென்னப்
பொருவலிலாத் தமிழ்பயிற்றி வந்தநின்னு லுஞ்சீர்த்திபொருந்துந்தன்மை
கருதிமகாமகோபாத்தியாயரெனும் பட்டநிற்குக் கவினத்தந்தார்
திருவளர்மன்னவர்சாமிநாதவள்ளானின்போலச் சிறந்தார் யாரே. 1

என்னதா னங்களினு மன்னதா னஞ்சிறந்த தென்பார் பல்லோ
ரன்னதா னத்தினிலு மரியதுவித் தியாதான மதனைநாளு
நன்னர்செய்நீ தோன்றுநகர்க் குத்தமதா னப்பெயரை நன்காராய்ந்து
சொன்னவர்தம் மதிவலிதாஞ் சாமிநாதப்பெயர்கொள் சொல்வல்லோனே. 2

மன்னரெலாம் விரும்புபுக ழுறும்பாண்டித் துரைமாலும் வாணரெல்லா
முன்னுபுக ழுறுஞ்சாமி நாதகவி சேகரனு மொருங்கன் புற்றுத்
துன்னு நித்ய நைமித்ய சபைத்தலைமை யுறச்சங்கந் துய்க்குமின்பைப்
பொன்னுலகத் தவரறிந்தாற் றம்வாழ்வை யொருநாளும் பொருட்பண்ணரே

தன்னையடைந் தவர்பிழையெத் தனைசெயினும் பொறுத்தருளுந் தமதயாள
முன்னவன் பாண்டித்துரையும் புலவர்களு மின்பநனி முயங்கக் கூடற்
றுன்னியநாற் றமிழ்ச்சங்கத் தைந்தகவைக் கொண்டாட்டத்துழனிக்கண்ணே
மன்னுசபா நாயகனுஞ் சாமிநாதப் பெரியோன் வாழ்க மாதோ. 4

பஞ்சமா காவியங்கண் மிகமலிந்து நாடெங்கும் பரவச்செய்த
விஞ்சுபுக ழுறுஞ்சாமி நாதவித்வ சேகரனும் வேந்தர் வேந்தா
மஞ்சுநிகர் கொடைப்பாண்டித் துரைமாலு முயர்தமிழும் வாணியாரு
மெஞ்சுதலில் லாவிந்தப் பெருஞ்சபையு நாடொறும்வாழ்ந் திலங்க மாதோ. 5

இப்பாடல்கள் படிக்கப் பெற்றதும், சபையோர்க்குச் சந்தன புஷ்பதாம்பூலங்கள் அளிக்கப்பெற, அன்றிரவு 9 மணிக்குசபைகலைந்தது.

25—5—06 (காலை)

சங்கத்தின் நான்காம்வருஷோற்சவம் நடந்ததினத்துக்கு மறுதினமாகிய 1905-ஆம் மேமீ 25உ காலை 9 மணிக்கு அடியிற்குறித்த சங்கத்தினங்கத்தினர் ஷெ மண்டபத்திலேயே கூடினார்கள்.

அங்கத்தினர்.

1. ஸ்ரீமாந்- பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள் (அக்கிராசனாதிபதி)
2. ,, மஹா மஹோபாத்யாயர் வே. சாமிநாதையரவர்கள், சென்னை
3. ,, வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள், கும்பகோணம்
4. ,, பின்னத்தூர் அ. நாராயணசாமிஐயரவர்கள், கும்பகோணம்
5. ,, இராமநாதபுரம். ஸ்ரீ அரங்கசாமிஐயங்காரவர்கள்
6. ,, சோழவந்தான் அ. சண்முகம்பிள்ளையவர்கள்.
7. ,, கவிராஜ நெல்லையப்பபிள்ளையவர்கள், திருநெல்வேலி
8. ,, மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள், மதுரை
9. ,, நா. வேதாசலம்பிள்ளையவர்கள், சென்னை
10. ,, C. அரங்கசாமிநாயக்கரவர்கள், சென்னை
11. ,, தி. மு. சுப்பிரமணியபிள்ளையவர்கள், தூத்துக்குடி
12. ,, பொ. மு. முத்தையபிள்ளையவர்கள், தூத்துக்குடி.
13. ,, வா. கோபாலசாமிரகுநாதராஜாளியாரவர்கள், அரித்துவாரமங்கலம்
14. ,, மு. சாம்பசிவநாயனாரவர்கள், சாலியமங்கலம்
15. ,, பா. பு. சு. சுல்தான் அப்துல்காதிறுப்புலவரவர்கள், கீழக்கரை
16. ,, M. ஜோஸப்டையாஸ் அவர்கள், கீழக்கரை
17. ,, S. இராதாகிருஷ்ணையரவர்கள், B. A; புதுக்கோட்டை
18. ,, J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள், B. A; B. L; சேலம்
19. ,, S. பால்வண்ணமுதலியாரவர்கள், திருநெல்வேலி
20. ,, S. சாமிநாதையரவர்கள், மதுரை
21. ,, டி. வி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B. A; B. L; மதுரை
22. ,, ஐ. சாமிநாதமுதலியாரவர்கள், தஞ்சை
23. ,, மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள், மதுரை

24. ,, வி. பி. சுப்பிரமணியமுதலியாரவர்கள், தஞ்சை
25. ,, டி. லக்ஷ்மணபிள்ளையவர்கள், திருவனந்தபுரம்
26. ,, M. K. M. அப்துல்காதிறுராவுத்தரவர்கள், இளையான்குடி
27. ,, வி. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள், மதுரை
28. ,, ம. இராமாநுஜாசாரியாரவர்கள், கும்பகோணம்

அங்கத்தினரல்லாதவர்.

1. ஸ்ரீமத் - P. M. கிருஷ்ணமாசாரியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர், வெஸ்லியன்மிஷன் காலேஜ், சென்னை.
2. ,, வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்கள், சர்ச் ஆப் ஸ்காட்மிஷன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர், சென்னை
3. ,, ஸ்ரீரங்காசாரியாரவர்கள், ஸ்டி காலேஜ்தலைமைத்தமிழ்ப்பண்டிதர், சென்னை
4. ,, சந்தானமையங்காரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவாரூர் ஹைஸ்கூல்
5. ,, பொன்னுசாமிப்பிள்ளையவர்கள், ரிடையர்ட் மாஜிஸ்ட்ரேட் திருநெல்வேலி.
6. ,, குன்னூர்க்குமாரசுவாமி முதலியாரவர்கள்.
7. ,, உலகநாதபிள்ளையவர்கள், தஞ்சாவூர்.
8. ,, முத்துசுவாமிஐயரவர்கள், தஞ்சாவூர்
9. ,, சொக்கலிங்கம்பிள்ளையவர்கள், குன்னூர்
10. ,, திருஞானசம்பந்தம்பிள்ளையவர்கள், திருச்சிராப்பள்ளி
11. ,, அப்பாவுசெட்டியாரவர்கள், சென்னை
12. ,, M. நாகலிங்கம்பிள்ளையவர்கள், மதுரை
13. ,, கன்னஹதூர் அப்துல்சுபஹான்சாயிபுஅவர்கள் முதலியோர்

1. புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீமத்-S. இராமகிருஷ்ணையரவர்கள் சர்வகலாசங்கத்தார் சுதேச பாஷைப் பயிற்சிக்கேற்பட்டு நடந்துவரும் விதிமுறைகளை இப்போதுமாற்றுவதாக எண்ணங்கொண்டிருந்தலில், தமிழ்போன்ற பழையபாஷைகளின் அபிவிர்த்திக்கு உண்டாகும் பெருந்தடைகளைப் பற்றி அரைமணிவரை சபையோர்க்கெல்லாம் கிளர்ச்சியுண்டாகும்படி எடுத்து மொழிந்து, பின்னர்,

“மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையும், தற்கால பீ. ஏ. பரீக்ஷையும், எப்.ஏ. அல்லது நிகரபரீக்ஷையும் பழையவிதிப்படியேவிதிகள் இரு

க்கவேண்டியது அவசியமென்று சர்வகலாசபையார்க்கும், அவசியமா ஞல், கவர்ண்மெண்டாருக்கும் ஒருவிண்ணப்பம் அனுப்பப்படல்வே ண்டும்''

என்று பிரேரிக்க, அதனைச்சேலம் ஜில்லா முன்சீப் ஸ்ரீமத்- J. M. நல் லசாமிப்பிள்ளையவர்கள், B. A. B. L. ஆமோதிக்க, வெட்டர்னரி அஸி ஸ்டெண்டு ஸ்ரீமத்- V. P. சுப்பிரமணிய முதலியாரவர்கள், ஸ்ரீமத்- S. சாமிநாதையரவர்கள், ஸ்ரீமத். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B. A. B. L, இம்மூவரும் ஆதரித்துப்பேச சர்வாங்கீகாரமாகக்கொள் ளப்பட்டது.

2. யூனிவர்சிட்டி முதலியவற்றுக்கு மேற்குறித்த விஷயத்தை ப்பற்றித் தக்கபடி ஒருவிண்ணப்பஞ் சித்தப்படுத்துதற்காக, ஸ்ரீமாந் பாண்டித்துரைத்தேவரவர்கள், ஸ்ரீமத்- J. M. நல்லசாமிப்பிள்ளையவ ர்கள், ஸ்ரீமத்- S. இராதாகிருஷ்ணையரவர்கள், ஸ்ரீமத்-S. சாமிநாதைய ரவர்கள் ஆக ஐவர்கொண்ட ஆலோசனைக்கூட்டத்தார் நியமிக்கப்பெ றவேண்டுமென்று, ஸ்ரீமத்- T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பிரேரிக் க, ஸ்ரீமத்- V. P. சுப்பிரமணிய முதலியாரவர்கள் ஆமோதிக்க, சபை யோரால் அங்கீகரிக்கலாயிற்று.

3. தனித்தமிழ்ப் பரீக்ஷையில் இலக்கணப்பாடத்துக்கு 60-அ மிசமும், இலக்கியப்பாடத்துக்கு 90-அமிசமும் ஏற்படுத்தவேண்டுமெ ன்று ஸ்ரீமத்- மணலூர்- இராமானுஜாசாரியாரவர்கள் பிரேரிக்க, மஹா மஹோபாத்தியாயர் ஸ்ரீமத்- சாமிநாதையரவர்களால் ஆமோதிக்கப் பெற்று ஸர்வாங்கீகாரமாயிற்று.

4. சாஸ்திரசம்பந்தமான சொற்களைத்தேடிச் சேர்த்தும், புதி யவாய் உண்டாக்கியும் சங்கத்தார் அங்கீகாரத்தின் மேல், அவற்றை ச் "செந்தமிழில்" வெளியிடவேண்டுமென்று திருவனந்தபுரம் ஸ்ரீமத்- T. இலஷ்மண பிள்ளையவர்கள் பிரேரிக்க, எல்லாராலும் அங்கீகரிக்க லாயிற்று.

இவற்றின்பின்பு, மாலை 4 மணிக்குக் கூட்டங் கலைக்கப்பட் டது.

25-5-06 மாலை.

5. காலைக்கூட்டத்தில் வந்திருந்தவரேயன்றி ராவ் பஹதூர்-ஸ்ரீமாந்- நாகோஜிராயரவர்கள், ஸ்ரீமத்- பி. எஸ். சுந்தரமையரவர்கள் B. A. L. T., ஸ்ரீமத்- S. கள்ளபிரான்பிள்ளையவர்கள், B. A., ஸ்ரீமத் P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் முதலிய கனவான்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீமத்- J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள், காலையில் விவகாரத்திற்குள்ளாகி முடிவுபெறாமல் நாழிகையானதென்று தள்ளிவைக்கப்பட்டிருந்த 'சங்கக்கமிட்டி' என்ற பிரேரணையைக்குறித்து, அடியில்வருமாறுமுடிவு படுத்தினார்கள்:—இச்சங்கம் நன்குநடைபெற்று வருதற்கான விதிகளை ஏற்படுத்த சங்கத்தலைவர் ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள், ஸ்ரீமத்- J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள், மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீ: வே. சாமிநாதையரவர்கள், ஸ்ரீமத்- V. P. சுப்பிரமணிய முதலியாரவர்கள், ஸ்ரீமத்- S. சாமிநாதையரவர்கள், ஸ்ரீமத்- P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் என்னும் எண்மர்கொண்ட ஓர் 'சப்கமிட்டி' தாபனமுறல்வேண்டும் என்பது. இதனை ஸ்ரீமத்- S. இராதாகிருஷ்ணையரவர்களும், ஸ்ரீமத்- M. R. கந்தசாமிக்கவிராயரவர்களும் ஆதரிக்க சபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

6. ஸ்ரீமத்- S. சாமிநாதையரவர்கள் இச்சங்கத்தின் மாதாந்தக் கணக்குப்பரிசோதகராகவும், திருநெல்வேலி பென்ஷன்சப்மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமத்- T. பொன்னுச்சாமிப்பிள்ளையவர்கள் அதன்வருடாந்தக்கணக்குப்பரிசோதகராகவும் இருத்தல்வேண்டுமென்று, ஸ்ரீமத்-S. பால்வண்ணமுதலியாரவர்கள் பிரேரிக்க, ஸ்ரீமத்-V. P. சுப்பிரமணியமுதலியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு, சர்வாங்கீகாரமாயிற்று.

7. ஒருரூபாவுக்குமேல் விலையுள்ளசங்கப்பதிப்புப்புத்தகங்கள் சங்கத்தினங்கத்தவர்க்கு இனி விலைக்கே கொடுக்கப்பெற வேண்டும் என்று ஸ்ரீமத் S. பால்வண்ணமுதலியாரவர்கள் பிரேரிக்க, ஸ்ரீமத்-கவிராஜ நெல்லையப்பபிள்ளையவர்கள் ஆமோதிக்கச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

8. ஸ்ரீமத்-S. சாமிநாதையரவர்கள் சங்கத்தின் துணைக்காரியதரிசியாக நியமனம் பெறல்வேண்டுமென்று ஸ்ரீமத் J. M. நல்லசாமிப்

பிள்ளையவர்களால் பிரேரிக்கப்பட்டு, ஸ்ரீமத்- V. P. சுப்பிரமணியமுதலியாரவர்களால் ஆமோதிக்கப்பெற்று சபையோரால் ஆதரிக்கப்படலாயிற்று.

9. இச்சங்கத்தின் கௌரவபோஷகராக விரும்புவோரைச் சில நிபந்தனைகளின்மீதுஏற்றுக்கொள்ளல்வேண்டும் என்று மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீமத்- சாமிநாதையரவர்களால் பிரேரிக்கப்பெற்று, எல்லாராலும் ஆதரிக்கப்பட்டது.

10. வருஷந்தோறும் சங்கத்திற்கு ரூ 6 ம் செந்தமிழ்ச் சந்தா ரூ 4-ம் ஆகரூ 10 நன்கொடையளிப்போரே மேற்குறித்த "கௌரவபோஷகர்" என்று ஸ்ரீமத்- பால்வண்ணமுதலியாரவர்களாற்பிரேரிக்கப்பெற்று ஸ்ரீமத்-V. P. சுப்பிரமணியமுதலியாரவர்களால் ஆமோதிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பட்டது.

முற்கூறிய விதிநிரூபணம் முடிந்ததும், மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீமத் வே. சாமிநாதையரவர்களது அக்கிராசனத்தின் கீழ் அடியில்வரும் சிறந்தவியாசங்களும் பிரசங்கங்களும் நடைபெற்றன.

1. ஸ்ரீமத் P. S. சுந்தரமையரவர்கள். B. A., L. T. „இருபத்திரண்டு சுருதிகள்" என்னும் விஷயமாக ராவ்பஹதூர் ஸ்ரீமாந்- நாகோஜிராயரவர்கள்எழுதியதைத் தமிழில் மொழிபெயர்த்து, அச்சுருதிகள் இன்னின்னவையென்று சபையோர்க்குவிளக்கிக்காட்டினார்கள்.

2. ஸ்ரீமத்-S. இராதாகிருஷ்ணையரவர்கள்"தமிழிசை" என்பதைப்பற்றிதாம்நெடுங்காலமுயன்று ஆராய்ந்துவரும் விஷயத்தைஇனியபிரசங்கவாயிலாக வெளிப்படுத்தினார்கள். ஸ்ரீ நாகோஜிராயரவர்கள் கண்டுபிடித்த 22- சுருதிகள் தமிழிலுமுண்டென்று ஐயரவர்கள்காட்டியதும் பிறவும் வியக்கத்தக்கனவாயிருந்தன.

3. ஸ்ரீமத் பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்கள் "ஊக்கமுடைமை"யென்னும் விஷயமாக ஆராய்ச்சிகாட்டிஎழுதிய வியாசம் அவர்களால் சபையோர்மகிழ்வுறப் படிக்கப்பெற்றது.

4. ஸ்ரீமாந்—பாண்டித்துரைத் தேவரவர்களைப்பற்றி ஸ்ரீமத்- பின்னத்தூர்- அ. நாராயணசாமி ஐயரவர்கள் இயற்றிக்கொணர்ந்த

"மருதப்பாட்டு" என்னும் நூலை, அவ்வையரவர்கள் அரங்கேற்றினார்கள். சபையோரெல்லாம், அது சங்கவாக்குப்போலவே அமைந்திருந்ததுபற்றி வியந்து கூறினார்கள். வேம்பத்தூர் ஸ்ரீமத் - பிச்சுவையரவர்களும், ஸ்ரீமத்- அருணாசலக் கவிராயரவர்களும் இதற்குச் சிறப்புப்பாயிரக் கவிகள் கூறினார்கள்.

இவற்றோடு அன்று கூட்டம் முடிந்தது.

26௳ காலை

முந்தியநாட்கூட்டத்துக்கு வந்திருந்த சங்கவித்வான்களும் பிறரும் 26-௳ காலை 8-மணிக்கு மறுபடிங்கூடினார்கள். அச்சபைக்கு மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீமத்-சாமிநாதையரவர்களே அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார்கள். அப்போது அடியில்வரும் விஷயங்கள் நடந்தேறின.

1. ஸ்ரீமத்- S. பால்வண்ணமுதலியாரவர்கள் சித்தாந்தசாஸ்திரங்கள் பலவற்றை ஆராய்ந்து யாவரும் சைவசமயவுண்மைகளைத் தெரிந்துகொள்ளும்படி இயற்றிக்கொணர்ந்த "சித்தாந்தஞானரத்நாவளி" என்னுநூல் அரங்கேற்றப்பட்டது. இதனைப்பலரும் உவந்து ஏற்றார்கள். ஸ்ரீமத்- மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் இந்நூற்குச்சிறப்புப்பாயிரமாக அடியில்வரும் பாடலைக் கூறினார்கள்.

மாநலச்சிந் தாமணியா தியபலவு மண்ணினனி வழங்கத் தோன்வேள்
தானெனச்சொல் சாமிநா தப்பெரியோன் முதன்மதுரைச் சங்கத் [தார்முன்
தேனனைய பதினான்கு சாத்திரவா ரிதிபடிந்து திகழ்சித் தாந்த
ஞானரத்தி னாவளியைப் பால்வண்ண முகிறருமிந் நாணன் றாளே.

2. ஸ்ரீமத்- நா. வேதாசலம்பிள்ளையவர்கள் தாம் ஆராய்ச்சிசெய்தெழுதிக்கொணர்ந்த "பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை" என்னும் வியாசத்தை இனிமையுறப்படித்தார். இதனுடையழகும் பொருளழகும் சபையோரால் பாராட்டப்பட்டன. இந்நூற்கு ஸ்ரீமத்-கந்தசாமிக்கவிராயரவர்கள் அடியில்வரும் பாயிரமொன்றளித்தார்கள்.

மருவுபுக ழுக்கிரபாண் டியன்வளர்க்குந் தமிழ்ச்சங்க மாட்டுப் போந்து
பெருகுதமிழ் நூற்பாலை யுணருமோர் சம்பந்தம் பெற்றுக் கற்றோர்
உரியததி யாய்ந்துநன்கு மதித்துவே தாசலனு ருரைத்தல் சொல்லற்
கரிதெனினு நேயமிதே யாகுமென்பேன் விருந்தருந்து மறிவுள் ளீரே.

இதனோடு அன்று பகற்கூட்டங்கலைந்து மாலை மூன்றுமணிக்கு மஹாமஹோபாத்தியாயரவர்கள் அக்கிராசனத்தின் கீழ்மறுபடியுங் கூடிற்று. அப்போது,

1. ஸ்ரீமத்- ஐ. சாமிநாதமுதலியாரவர்கள் தாம் பலவற்றையும் ஆராய்ந்து எழுதிவந்த "முன்னாள்—இந்நாள்" என்னும் வியாசத்தை சபையோர் மகிழ்வுறப்படித்தார்கள்.

2. வருஷோற்சவத்துக்கு வந்திருந்த ஸ்ரீமத்- வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள், சில அவசரசெய்தியால் ஊருக்கு பிரயாணிக்கநேர்ந்ததுபற்றி, அவர்கள் எழுதிய "ஸ்ரீபட்டர்வைபவம்" திருவாரூர் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்- சந்தானமையங்காரவர்களால் நன்கு படிக்கப்பட்டது.

3. பெங்களூர் ஸென்ற்ரல் காலேஜ் போதகாசிரியராகிய ஸ்ரீமத்- S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், M. A., சங்கக்கூட்டத்திற்படித்தற்பொருட்டு எழுதியனுப்பிய "கடைவள்ளலார்காலம்" என்னும் வியாசம், ஸ்ரீமத் - மு. இராகவையங்காரவர்களால் நன்கு படிக்கப்பட்டது.

4. திருவனந்தபுரம் ஸ்ரீமத்-T. லக்ஷ்மணபிள்ளையவர்கள், B. A., தாம் எழுதியுள்ள "இரவிவர்மன்" என்னும் நாடகத்திற் சிற்சில பகுதிகளைச் சபையோர் புகழப்படித்து மகிழ்வித்தார்கள்.

5. ஸ்ரீமத்- M. K. M. அப்துல்காதிறு ராவுத்தரவர்கள், தாமியற்றிய "தமிழ்ச்சங்கமான்மியம்" என்னும் நூலிற் சிலபகுதிகளை எல்லாரும் உவக்கப் படித்தார்கள்.

6. சென்னைப்பச்சையப்பன்கலாசாலைப்போதகாசிரியர் ஸ்ரீமத் S. இராஜகோபாலாசாரியரவர்கள் எழுதியனுப்பிய "சுதேசகலாசாலைஸ்தாபனம்" என்னும் வியாசம் ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்களால் படிக்கப்பட்டது.

மறுநாட்காலையும், இவ்வித்துவக்கழகம் ஸ்ரீமாந் பாண்டித்துரைத்தேவரவர்களின் அக்கிராசனத்தின்கீழ்க் கூடியது. அப்போது,

1. ஸ்ரீமத் M. R. கந்தசாமிக்கவிராயரவர்கள் தாமியற்றியுள்ள குமணசரித்திரத்தில் சிலபகுதிகளைச்சபையோர்க்குப் படித்துக்காட்டி மகிழ்வித்தார்கள்.

2. ஸ்ரீமத் மாம்பழக் கவிச்சிங்கநாவலரின் வமிசத்தவராகிய மகா-ா-ஸ்ரீ பழனிச்சாமியாசாரி என்பவர், ஷை நாவலர் அவ்வக்காலத்தில் இயற்றிய தனிப்பாடல்சிலவற்றைக்கூறி, மகிழ்வித்தனர்.

முடிவில், ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள், அடியில் வரும் அழகிய பாடலைக்கூறி, சாலியமங்கலம் ஸ்ரீமத் சாம்பசிவநாயனாரவர்கள் கொடுத்த அருமையான வில்லைமாலையொன்றை ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்கட்கு, மஹாமஹோபாத்தியாயரவர்களைக் கொண்டு புனைவித்தார்கள்.

மாதவத்தான் மழைவேண்டிப் போயகத்தாற் கரியணிட்ட
மாலை தாங்கிப்
பூதலத்தார் செழியனைக் கதினெவற்று லுஞ்சிறப்புப்
பொருந்தோ ராரம்
காதலித்தேம் அணிகின்றேம் உக்கிரபாண் டியப்பெயர்கொள்
காவல் லோய்நீ
மேதகச்சேர் சீர்த்தியொடு வாழவிறை யருட்பெருக்க
மிளிர்க வென்றே.

காப்பணியா மகிழ்பாண்டித் துரைமலவன் கைக்கொள்வளை
கடுப்பச் செங்கை
மீப்பொலியு நாற்சங்க மிளிர்மணிக ணிகர்த்தபல
வித்து வான்கள்
நாப்பொழியும் பிரசநகம் பிரசங்கம் பொழிந்ததெனை
நாமுட் கொண்டோம்
பூப்பயிலு மிப்பிறவி யெடுத்தநல மடுத்ததெனப்
புகல்வா மன்னே.

இவற்றோடு மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம்வருஷோற்சவம் பரிபூர்த்திபெற்றது. சுபம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

விற்கப்பெறும் புத்தகங்கள்.

"செந்தமிழ்" இரண்டு, மூன்றாந் தொகுதிகள் பைண்ட் செய்யப்பெற்று இப்போது விலைக்குத் தயாராகவுள்ளன. கையிருப்பிற் சிலபிரதிகளேயிருத்தலால், வேண்டியோர் உரியபோதே எழுதி வி. பி- தபால்வாயிலாகப் பெற்றுக்கொள்ளக்கடவர். ஒருதொகுதி விலை ரூ 5. 'பைண்ட்' இல்லாதது ரூ 4—8—0.

சங்கப்பதிப்பு.

		ரூ	அ	பை
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	ஐந்திணையைம்பதுரை	0	3	0
4.	இனியது நாற்பதுரை, கஞநூல்	0	3	0
5.	புலவராற்றுப்படை (பழையது)	0	3	0
6	நேமிநாதம் உரையுடன்	0	10	0
7.	திருநூற்றந்தாதி உரையுடன்	0	4	0
8.	பன்னிரு பாட்டியல்	0	4	0
9.	அநுமான விளக்கம்	0	4	0
10.	சங்கப்புலவராற்றுப்படையுரை	0	4	0
11.	விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்	0	6	0
12.	திணைமாலை நூற்றைம்பது உரை	0	4	0
13.	அட்டாங்க யோகக்குறள்	0	1	0
14.	நான்மணிக்கடிகை (பழையஉரை)	0	3	0
15.	யாப்பு அணியிலக்கணங்கள் [விசாகப்பெருமாளையரது பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை]	0	8	0
16.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
17.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
18.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் (௧௦௫)	0	1	0
19.	சகசந்தர்சன தீபிகை	0	12	0

மற்றப்பதிப்பு.

20.	சருக்காமிர்தம்	0	8	0
21.	அத்துவித வாக்கியத் தெளிவுரை (ஸ்ரீ சிவஞானசுவாமிகள் செய்தது.)	0	4	0

☞ விலாசம்:—மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீஸ், மதுரை.

CHILDREN IN INDIA

have much to contend with, owing to the enervating climate,

Early in life they need a tonic and reconstructive to aid in developing their little bones and mucles·

SCOTT'S EMULSION

contains the proper bone and tissue builder for children·

IT IS IDEAL.

The results are noticeable shortly after taking.

Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!

NOT TOUCHED BY HAND.

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, LTD.,

MANUFACTURING

CHEMISTS,

LONDON, ENGLAND.

T. R. TAWKER & SONS

MOUNT ROAD, MADRAS.

வைரம், கெம்பு, பச்சை, முதலிய ரத்தினங்களும் நகை வியாபாரிகளுமாகிய எங்கள் ஷாப்பில் செய்யப்படும் நூதன நகைகளின் மாதிரியைப் பார்க்க விரும்பும் கனவான்களுக்கு அற்புதமான காட்லாக்கு தபாலின் மூலமாய் அனுப்பப்படும்.



T. 233. 6 வைரங்களினாலும், மத்தியில் 1 கெம்பினாலும் அருமையானவேலைப்பாடுள்ளதுமான மோதிரம் விலை ரூ. 65 முதல் 85 வரையில்

T. 664. வெகு நேர்த்தியான இங்கிஸ்டேண்ட்சித்திரமான இங்கிபுட்டிகளும் மத்தியில் பேனாவைப்பதற்கு உயர்ந்தவெள்ளைச்செம்பினால் செய்த மானும் உள்ளது விலை ரூ. 54.



T. 289. உயர்ந்த பொன்னால் செய்ததும் வேலைப்பாடுள்ளதுமான விசித்திர மோதிரம் ரூ. 30 முதல் 40 வரையில்



T. 279 விசித்திரவேலைபாடுளள பொன மோதிரம விலை ரூ 26 முதல 34 வரையில

T. 230 4 வைரஙகளினாலும, 3 கெமபுகளினாலும செயயபபட்ட அழகுள்ள ஜெம மோதிரம விலை ரூ. 75-0-0.



B. 55. கெடியாரசங்கிலியில் தொங்கவிடும் பொன்னால்செய்த யானை விலை ரூ 15. வெள்ளியில்செயதது ரூ. 5. உயர்ந்ததந்தத்தினால் செய்தது ரூ. 3.

S. T. (M. 7) வெகு அழகான ஆபீஸ டைமபீஸ, இது உயாநத வேலைபபாடுளளதும தநதத்தினால செய்தாயின முதுகில வைததிருபபதுமானது இதை பேபர் வெயிட்டாகவும உபயோகபபடுததலாம விலை ரூ. 8-8-0



B. 57. கெடியாரசங்கிலியில் தொங்கவிட்டுக் கொள்ளும் பொன்னால் செய்த குதிரை விலை ரூ. 15. வெள்ளியில் செய்தது ரூ. 5.

உயர்ந்த ரத்தினங்களினாலும பொனனினாலும் செயயப்படும நூதன நகைகளை உத்திரவின் பேரில் சாமர்த்தியமான வேலைக்காரர்களைக்கொண்டு வேலைத்திறமாயும் உத்திரவாதமாயும் செய்தனுப்பப்படும்.

எங்கள் ஷாப்பில் நகை முதலிய சாமான்கள் ரொக்கத்துக்கு வாங்குபவர்களுக்கு 100 க்கு 10-வீதம் தள்ளிக்கொடுக்கப்படும்.

H. N. Rao & Brothers.

General Merchants & Commission Agents,

Bangalore City.

Second Prize	For	Silver Medal
Bellary Exhibition	Vegetables &	Tanjore Exhibition
1906.	Fruits.	1906.

Cabbages, Cauli flowers, Carrots, Beetroots, Peas, Potatoes, Beans etc. from Rs. 3, 4, 5, a basket.

Apples, Oranges, Grapes, Mangoes, Raspberries, Strawberries Button holes, Bouquets, Cut flowers, Grafted plants, Seeds supplied at market rates. Assortment of Vegitables & Fruits will be supplied weekly or bi-weekly & customers are requested to send their own list.

Orders for perishable goods should accompany remittance

Indian Scents :— Argaza 1 Rupee per tola.

Udubathi 8 As. 1 Rupee, 2 Rs. 3 Rs. 4 Rs. 6 Rs. per seer.

Silk Kerchieves 12 As. 1 Rupee, 2/8, 3 Rs. 4/8, 6 Rs. 8 Rs 10 Rs. 12 Rs. 15 Rs. each.

3. வைத்தியசாரசங்கிரகம்.

இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் ஸ்ரீமாந்- பொன்னுச்சாமித்தேவரவர்களால், பலவருஷங்கட்கு முன்பு, தக்க சுதேசவைத்தியரைக் கொண்டு அநுபவசித்தமான மருத்துவ முறைகளை யாவரும் அறியும்படி செய்விக்கப்பட்ட இந்நூலானது, இப்போது இச்சங்கத்தில் செவ்வையாக ஆராயப்பெற்று, இன்னும் சில இன்றியமையாத விஷயங்களும் சேர்த்து அச்சிடப்பட்டு முடிந்துள்ளது. ராயல் எட்டுப் பக்கத்தில்,' 70 பாரம் கொண்டது. ஒவ்வொருவர் கையிலும் இஃதிருத்தற்குரியது. இதன் விலை ரூபா. 3—0—0.

☞ இச்சங்கப்பதிப்பாகிய மேற்கூறிய புத்தகங்களும் பிறவும், நமது "செந்தமிழ்"ச்சந்தாதாரர்க்கு ரூபாவுக்கு 4-அணாத் தள்ளி விலைக்குத்தரும்படி சௌகரியஞ்செய்துகொடுக்கப்பட்டிருக்குஞ் செய்தி கவனிக்கத்தக்கது.

இங்ஙனம்,

மானேஜர்,

தமிழ்ச்சங்கம், மதுரை.

CHAMBERLAIN'S PAIN BALM

உடமபில் நோவுக்குச் சேம்பர்லேன் துரை
செய்திருக்கும் தைலம்.



முதுகுபிடிப்பு, பக்கசூலை, கைகால்

ஓய்ச்சல், தலைநோய், காயங்கள்,

இவைகளைத் தீர்க்கும்.

சீல்வாய்வையும், தீாக்கும், தீாககும், தீாககும்

சீல்வாய்வு என்றால் என்ன?

சீலுக்குக சீல வீககமும வேதனையும, குததலும குடைசச லும, இழுபபும வலிப்பும், உடகாரமுடியாது, உறஙகமுடியாது.

இப்படியெல்லாம இருநதால, சீலவாயவுதான் என்று கொள்ளும; தபப, சேமபர்லேன தைலததை வாஙகிககொளளும.

நோவும வீககமுமிருககுமிடததில தைலததைத தேய்ததவுடனே, உள எலும்புவரைககும மருநதிறஙகுவதை உணர்வீர். உடனே வேதனை குறையும் தைலததைத தேய்ததுவர நாளடைவில நோய் அடியோடும நீஙகும்.

இது, முழுவதும் மூலிகை. கைபடாமல் செய்தது

எங்கும் விற்பது, எளிதில் கிடைப்பது.

சின்ன புட்டி ரூபா. 1. பெரிய புட்டி ரூபா. 2.